கல்கி

KALKI 9-1-1972 45 காசு





Model: Courtesy Air-India

mas. ACC. 410 TAM.

கல்கி

பொருளடக்கம்



''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

விரோதிகிருது மார்கழி 25 - ஜனவரி 9, 1972

சந்தா விவரம்	ஒருவருடம்	ஆறுமாதம்
இந்தியா	ரூ. 23-00	ரூ. 11-50
இதர நாடுகள்	ரூ. 50-00	ரூ. 25-00
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 23-00	ரூ. 11-50



விக்ரம் சாராபாய்

தோற்றம் : 12-8-1919

மறைவு : 30-12-1971

கல்கி

மலர் 31
இதழ் 24

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா
-- பாரதியார்

விநயம் மிக்க விஞ்ஞான மேதை

அணுசக்தி, விண்வெளி விஞ்ஞானி டாக்டர் விக்ரம் ஸாராபாய் திடீரென்று மரணமடைந்த செய்தி தேசத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. நம் நாட்டுக்குமட்டுமின்றி விஞ்ஞான உலகுக்கே இவருடைய மறைவினால் ஏற்பட்ட நஷ்டம் மிகப் பெரிது.

இந்திய அணுசக்தி ஸ்தாபனத்தின் தலைமை ஏற்ற பின்னர் இவர் புரிந்துள்ள சாதனைகள் மகத்தானவை. கல்பாக்கம் அணு மின் நிலையமும், தும்பா ராக்கெட் நிலையமும், ஆந்திரப் பிரதேசத்தில் ஸ்ரீஹரிகோட்டாவில் இவர் திட்டப்படி உருவாகிக் கொண்டு வரும் மற்றொரு ராக்கெட் நிலையமும் டாக்டர் விக்ரம் ஸாராபாயின் தளரா ஊக்கத்தினால் ஏற்பட்டவை. இன்னும் பல சாதனைகளை நாட்டுக்குச் செய்து அளிக்கும் வளமான எதிர்காலம் இருக்க, இவர் இப்படி அகால மரணமுற்றது நாட்டின் துரதிருஷ்டமாகும்.

டாக்டர் ஹோமி பாபா தமது காலத்தில் இந்தியாவுக்கும் அணுசக்தி விஞ்ஞான உலகில் இடமுண்டு என்பதை ஸ்தாபித்தார். அத்துடன், உண்மை விஞ்ஞானிகளின் மரபுக்கிணங்கவும், பாரத நாட்டுப் பண்புக்கும் கலாசாரத்துக்கும் ஏற்பவும் அணு சக்தியை ஆக்க வேலைகளுக்கே பயன்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த லட்சியத்தையும் அளித்துச் சென்றார். இதைப் பூரணமாகப் பின்பற்றினார் டாக்டர் விக்ரம் ஸாராபாய். அணுசக்தி மட்டிலுமின்றி, விண்வெளி விஞ்ஞானத்திலும் பாரதத்துக்கு உலக நாடுகளிடை ஒரு முக்கியமான இடம் உண்டு என்பதை நிலைக்கச் செய்து நாட்டுக்குப் புகழைத் தேடித் தந்தார்.

அயல்நாட்டினர் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டு நாம் வியந்து சந்தோஷப்பட்டால் மட்டும் போதாது. நாமும் அத்தகைய முன்னேற்றத்தை அடைய வேண்டும்; அத்துடன், நமது முன்னேற்ற அறிவின் பயனை அயல்நாடுகளுடன் பகிர்ந்துகொள்ளும் அளவுக்கு நமது விஞ்ஞானம் வளர வேண்டும் என்று உறுதியாக எண்ணி, அதற்காகப் பாடுபட்டார். ஸர் ஸி. வி. ராமனுடனும், கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழக விஞ்ஞானப் பேராசிரியர்களுடனும் டாக்டர் ஹோமி பாபாவுடனும் நெருங்கிப் பழகித் தம் விஞ்ஞான அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக் கொண்டவர் டாக்டர் விக்ரம். நாடு முழுவதும் விஞ்ஞான நோக்குக் கொண்டதாக மாற வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருந்தார். 'டெலிவிஷன்' மூலம் அறிவைச் சுலபமாகவும் குறைந்த செலவிலும் வளர்க்க முடியும் என்று அவர் கருதினார். நமது கிராம மக்களுக்கெல்லாம் படித்துப் புரிந்து கொள்ளுவதைவிடப் பார்த்தும் கேட்டும் புரிந்து கொள்வது எளிது என்று நம்பினார். இப்படிப் பல வகையில் மக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்ய அவர் விஞ்ஞானத்தைப் பயன்படுத்த எண்ணியிருந்தார்.

விஞ்ஞான அறிவுடன், நிர்வாகத் திறனையும் டாக்டர் விக்ரம் ஸாராபாய் பூரணமாகப் பெற்றிருந்தார். ஸாராபாய் குடும்பம், தொழிற் குடும்பம். பல பெரிய பெரிய ஆலைகளைத் திறம்பட நிர்வகித்தார்.

அசாதாரணத் திறமை இருந்தும், அடக்கம் மிகுந்த பண்பாளர் டாக்டர் விக்ரம் ஸாராபாய். உடன் பணியாற்றும் சிறிய, பெரிய விஞ்ஞானிகளுடன் வித்தியாசமின்றிச் சகஜமாகப் பழகுவார். தோற்றத்திலும், உள்ளப் பாங்கிலும் எளிமையானவர். இசை, நடனம் முதலிய கலைகளில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள ரசிகராகவும் திகழ்ந்தார்.

இத்தகைய சிறந்த விஞ்ஞானியை, நாடு இழந்துவிட்டது பரிதாபம். அவருடைய மனைவியார் ஸ்ரீமதி மிருணாளினி ஸாராபாய்க்கும், அருமைத் தாயார் சரளாபென் அம்மையாருக்கும் மற்றுமுள்ள குடும்பத்தினருக்கும் நமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜாஜியின் கருத்துக்கள்

நிக்ஸன் கோரும் விசித்திர உரிமை!

மேற்கு பாகிஸ்தானில் இந்தியா ஒரு தலைப் பட்சமாகப் போர்நிறுத்தம் செய்ததில் அமெரிக்காவுக்கும் ருஷியாவுக்கும் பெரிய பங்கு உண்டு என்று ஜனாதிபதி நிக்ஸன் உரிமை கோருவதாக நியூயார்க்கிலிருந்து டிசம்பர் 27ந் தேதியன்று செய்தி வெளியாயிற்று. நிக்ஸன் இவ்விதம் உரிமை கோருவது முற்றிலும் தவறாகும் என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி கூறியுள்ளார். எதிர்த் தரப்பை எதிர்பாராமல் இந்தியா தானாகப் போரை நிறுத்தி விருப்பதால் ஸ்ரீமதி இந்திரா காந்தி பெற்றுள்ள நற்பெயரை அவருக்குக் கிட்டாமல் செய்யப் பார்க்கிறார் நிக்ஸன்! இந்தியாவுக்கோ அல்லது இந்திய — பாகிஸ்தான் உப கண்டத்துக்கோ எந்த நன்மையும் செய்ததாகக் கூற ஸ்ரீ நிக்ஸனுக்கு உரிமையில்லை. இவ்விஷயத்தில் அவர் எவ்வளவு ஊறு விளைவித்திருக்கிறார் என்பதைப் பிரத்தியட்ச உண்மைகளைக் கொண்டு தெளிவாகக் காட்டலாம்.

அமெரிக்காவில் அடுத்த அரசு

அமெரிக்க ஜனாதிபதியின் வெள்ளை மாளிகைக்குப் புதிய யஜமானர் வருவார். புதிதாகப் பதவிபெறும் கட்சி இப்போதுள்ள அமெரிக்க ஆளும் கட்சிக்கு மாறாக இருக்கக் கூடும். செஞ்சீனத்துடன் விந்தை உறவு கொண்ட ஜனாதிபதி நிக்ஸன் அமெரிக்க மரபுக்கே துரோகம் விளைவித்துவிட்டார் என்பது நிச்சயம். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் விளைவுகளை இது பாதிக்காமலிராது.

இந்தியாவை அதனுடைய சோதனைக் காலத்தில் அமெரிக்கா கைவிட்டது பெருத்த சோகக் கதையாகும். இந்த அம்சத்தில் நிக்ஸனுக்குப்பின் பதவிக்கு வருபவர் எப்படி நடப்பார் என்று ஜோஸ்யம் சொல்வதற்கில்லை. வெளிநாடுகளின் விஷயத்தில் ஈடுபடாமல் ஒதுங்கி யிருப்பதென அமெரிக்கா தீர்மானித்திருப்பதே, இந்தியா பற்றிய அதன் கொள்கைகளில் பெரிய மாற்றம் எதுவும் ஏற்படுவதற்குத் தடையாக நிற்கும். இருப்பினும் நிலவரம் முற்றிலும் இன்றுள்ளபடியே இராது.

அமெரிக்காவிடமிருந்து கணிசமான பொருளுதவி இனி இந்தியாவுக்குக் கிடைக்காது என்பது நிச்சயம். இவ்விதமாக இந்தியா பிறரைச் சார்ந்திராமல் சுய பலத்திலேயே நிற்குமாறு நிர்ப்பந்திக்கப்படுவது நமக்கு நல்ல மறுமலர்ச்சியே தரும் என்று நம் நாட்டுச் சிந்தனையாளரில் பலர் கருதுகிறார்கள்.

புதிதாக ஏற்படும் அமெரிக்க அரசு பழைய கடனை நாம் உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யாமல் தவணையை நிறுத்தி வைத்து, வட்டியையும் ரத்து செய்தால் அதுவே நம் பொருளாதாரம் நல்ல முறையில் தொடங்க உதவி புரிந்ததாகும்.

ஆன்மதீரம் வீணாகாது!

ஏதோ ஓர் அற்புதம் நடந்து இந்தியாவும், எஞ்சியுள்ள பாகிஸ்தானும் பரஸ்பரம் நட்புப் பூண வழி காண வேண்டும். இந்தியா எல்லாவிதமான அச்சங்களையும், துவேஷங்களையும் உதறி எறிய வேண்டும். இந்தியாவுக்கு இருபுறமும் நட்பு நாடுகள் சூழ்ந்திருப்பதுதான் நல்லது. சுற்றிலும் ஆபத்தை வைத்துக் கொள்வது நல்லதல்ல.

இப்போது பின்னலிட்டுள்ள குழப்பத்திலிருந்தே ஆண்டவன் அருளில் ஓர் அற்புதம் தோன்றினால் தெற்காசியாவில் ஜனநாயகத்தைக் காக்க ஓர் உபாயத்தைப் பெறலாம். ஸ்ரீமதி இந்திரா காந்தி பாகிஸ்தானை எதிர்பாராமலே தீரத்துடன் போரை நிறுத்தியது வியர்த்தமாகாது: ஆத்மிகத் தைரியம் என்றுமே வீணாவதில்லை.

நட்புக்கு முயலுவோம்

'இந்தியாவும் பாகிஸ்தானும் அடியோடு பிரிந்து போகாமல் வெளி விவகாரம், பாதுகாப்பு ஆகியவற்றில் சமஷ்டியாக இணைந்து செயல்பட வேண்டும்' என்று ஆதியில் நான் யோசனை கூறி, காந்திஜியின் ஒப்புதலை இதற்குப் பெற்றது உண்மை. ஆயினும் சரியோ தப்போ, நல்ல காரணங்களுக்காகவோ அல்லது வறட்டுப் பிடிவாதத்தாலோ தெற்காசியாவின் மகத்தான உபகண்டமான பாரதம் இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டுப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. இப்போது அந்தப் பழைய சமஷ்டி யோசனையைப் பற்றிப் பேசுவது பொருத்தமில்லை. குறிப்பாக, போர் முடிந்துள்ள இந்தச் சமயத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு நாடாக வேண்டும் என்ற கருத்தைச் சொன்னாலே அது பாகிஸ்தானை அழிக்கும் துவேஷப் பிரசாரமாகத்தான் மற்றவர்களுக்குத் தோன்றும். யதார்த்த உண்மையாக நிலைப்பட்டுவிட்ட தேசப் பிரிவினையை மாற்றுவது குறித்துப் பேச இது உகந்த சந்தர்ப்பம் அல்ல. முதலில் பாகிஸ்தானை நட்பு நாடாக்கிக் கொள்வதற்கே நாம் உழைக்க வேண்டும். இரு நாடுகளிடை நம்பிக்கையும் நல்லெண்ணமும் உறுதிப்பட்டபின், அவசியமாயின் சமஷ்டி ஜனநாயக முறைக்கு முயற்சி எடுக்கலாம். அவசரப்பட்டுக் கொண்டு இப்போதே இணைப்புப் பற்றிப் பேசுவது நல்லெண்ணத்துக்கு ஊறு விளைவித்து, இப்போதிருப்பதைக் காட்டிலும் நிலைமையை மோசமாக்கிவிடும்.

அன்னை ஆனந்தமயீ

சமீபத்தில் குறுதியாறு பெருகிய கிழக்கு வங்கத்திலே எழுபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு ஓர் அமுதச் சுனை ஊற்றெடுத்தது.

ஆனால் அந்த அமுதச் சுனைக்கு எழுபத்தைந்து வயது என்றால் பக்தர்கள் அதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். பரம்பொருளுக்கு வயதேது? அந்தப் பரம்பொருளுடனேயே இழைந்த பேரருளுக்கும் வயது ஏது? அந்தப் பேரருளாகிய பராசக்தியின் அவதாரம்தான் அன்னை ஆனந்தமயீ என்று அவரது அடியார்கள் தங்களது அநுபவத்தின் மீது கூறுவார்கள்.

ஏன், அன்னை ஆனந்தமயீயே அவ்விதம் கூறியதுண்டு. அன்னை தமது வாழ்வின் பல தசைகளில் புரிந்த பலவிதமான காரியங்களையும் சாதனைகளையும் பற்றிப் பேச்சு எழும்போது அவர் சொல்வார்: ''நான் குழந்தைப் பருவத்திலிருந்து ஆத்மிகத்தில் சிறிது சிறிதாக வளர்ந்தேன் என்று எண்ண வேண்டா. பாலியம், யௌவனம், மத்திமப் பிராயம், முதுமை அனைத்திலுமே — நான் இல்லறத்திலிருந்தபோதிலும் சரி, அதிலிருந்து வெளியேறிவிட்ட பிறகும் சரி — என்றுமே நான் பூரணமான ஒன்றாகத்தான் இருக்கிறேன். பூரணமாக இருந்துகொண்டே குழந்தையாக, யுவதியாக, பெரியவளாகப் பலவிதங்களில் என்னை வெளிப்படுத்திக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்திருக்கிறேன். சாதகியாக இருந்து சாதனையையும் விளையாட்டாகச் செய்தேன்.''

சில மகாபுருஷர்கள் தங்களது தெய்விகத்தை ஒளித்து வைத்துக் கொள்வர். அன்னை சாரதாமணி, நமது காமகோடி ஆசாரியாள் ஆகியோர் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். சில மகா புருஷர்கள் தங்களது தெய்விக ஆற்றலை மறைக்காமலே வெளிப்படுத்துவார்கள். ஸாயிபாபா, ஆனந்தமயீ ஆகியோர் இந்த வகையைச் சேர்ந்தவர்கள். பூமிக்குள்ளே வளரும் கிழங்கு, வெளியிலே குலுங்கும் பழம் என்று இரண்டு விதமும் இயற்கையில் உண்டல்லவா?

* * *

1896-ம் ஆண்டு ஏப்ரில் 30ந் தேதியன்று கிழக்கு வங்கத்தில் கியோரா என்ற கிராமத்தில் ஓர் அந்தணக் குடியில் வந்து பிறந்தாள் ஆனந்தமயீ—காசியப கோத்திரத்தைச் சேர்ந்த விபின் விஹாரி பட்டாசாரியர் என்ற சத் புருஷருக்கும், மோக்ஷதா சுந்தரி தேவி என்ற உத்தமிக்கும் இரண்டாவது குழந்தையாக. பட்டாசாரியர் அற்புதமாகப் பாடுவார். ஓயாமல் தெய்விக கீதங்களைப் பாடுவார். கிராமவாசிகள் அவரைச் சூழ்ந்து கொண்டு பக்தி இன்பத்தையும், பண் இன்பத்தையும் அநுபவிப்பார்கள். ஆனந்தமயீ பிறக்கு முன்பே, பல தேவ தேவியர் தமது குடிலுக்கு எழுந்தருளுவது போல் மோக்ஷதா சுந்தரி பலமுறை கனவு கண்டாராம். கனவின் நனவாக வந்துதித்த குழந்தைக்கு நிர்மல சுந்தரி என்று பெயர் சூட்டினார்கள்.

வங்கம் தந்த திவ்விய அன்னை சாரதாமணி போலவே நிர்மலசுந்தரியும் பள்ளிப் படிப்பு அதிகம் பெறவில்லை. வீட்டு வேலையிலேயே அவளது இளமை கழிந்தது. தந்தையார் துதிப் பாடல்கள் போதித்தார். தாயார் குலதெய்வமான நாராயணமூர்த்தியின் வழிபாட்டுமுறைகளைச் சொல்லிக் கொடுத்தார். நிர்மலாவும் குழந்தை வேஷத்தில் அவற்றைப் பயின்றாள்.



பிற்காலத்தில் மாதாஜி ஆனந்தமயீ அவ்வப்போது ஓர் அதீத அநுபூதி நிலையில் மூழ்கியிருப்பதுண்டு. அந்நிலையைக் 'கியால்' என்பார்கள். பால்யத்திலும் கூட ஒருசில சந்தர்ப்பங்களில் இந்தக் கியால் நிலைக்கு நிர்மலா தாவியதாகத் தெரிகிறது.

1909-ம் ஆண்டு. நிர்மலாவுக்கு வயது பன்னிரண்டு. அத்பரா என்ற ஊரைச் சேர்ந்த ரமணி மோகன் சக்கரவர்த்தி நிர்மலசுந்தரியின் கரம் பிடித்தார். சிறிது காலத்திலேயே கரம் பிடித்த கணவர், அவள், பாதத்திலே சிரம் பொருத்த வேண்டிய மகிமை படைத்தவள் என்றுணர்ந்தார். ரிஷிகளின் வாரிசாகப் பிரமச்சரியத்தில் வாழ்ந்தார். உரிய காலத்தில் மனையாளைக் குருவாகக் கொண்டார்.

கடைசியில் 1938-ம் ஆண்டில் தமது மரணப் படுக்கையில் இருந்து கொண்டு அவளை ''மா' (அம்மா) என்றே அழைத்தார்.

கல்யாணமான பின் முதல் நாலாண்டுகள் நிர்மலா புக்ககத்தில் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அவளது மூத்த ஓரகத்தி அவளை ஓயாமல் வேலை வாங்கி உபத்திரவித்தாள். நிர்மலாவும் தனது மனத்தில் துவேஷ மலம் சிறிதும் தலைகாட்டாமல், நிர்மலமாக உழைத்துக் கொட்டினாள்.

1918ல் கணவருடன் பஜித்பூரில் வசித்து வந்தாள் நிர்மலா. அப்போது ஒருமுறை அவள் குளத்தில் நீராடுகையில் அவளுக்குக் 'கியால்' வந்தது. 'சாதகியாக வேஷம் போட்டுக் கொண்டு விளையாடினால் எப்படியிருக்கும்?' என்று அப்போது தோன்றியது. உடனே அந்த லீலையைத் தொடங்கி விட்டாள்.

ஆத்ம ஸ்வரூபத்தை மறைக்கும் மாயத் திரையைக் களைவதற்காக மற்றவர்கள் சாதனைகள் புரிவர். ஆத்ம ஸ்வரூபத்திலேயே நிலைத்திருந்த நிர்மலாவுக்குத் திரையைக் களையும் அவசியமே இல்லை. விளையாட்டாகவே சாதனையைத் தொடங்கினாள். நமது சாஸ்திரத்தில் கூறியுள்ள சாதனைகளின் சத்தியத்தை உலகுக்கு நிரூபித்துக் காட்டவே இப்படி விளையாடினாள் என்று பக்தர்கள் கருதுகிறார்கள். ஆறு ஆண்டுகள் கிரியை, ஆசனம், முத்திரை, சமாதி என்றிப்படிப் பல சாதனை நிலைகளில் நீந்தி அவற்றின் லட்சியத்தில் மூழ்கியிருந்து மகிழ்ந்தாள் நிர்மலா.

அவளது தோற்றமே மாறத் தொடங்கியது; அவளது பார்வையில் எங்கும் பதியாத ஓர் எட்டாத் தன்மை மேவியது. அநேகமாக எல்லா மகா புருஷர்களுக்கும் ஏற்படுவது போலவே, நிர்மலாவுக்கும் ஒரு வேடிக்கையான அனுபவம். உற்றார் உறவினர் அவளைப் புரிந்துகொள்ளவில்லை. பெரிய மாந்த்ரீகரை வரவழைத்து அவளது 'பேயை' ஓட்டச் சொன்னார்கள். மாந்த்ரீகர் உச்சாடனங்களைத் தொடங்கினார். தம் முன்னிருப்பது பேய் பிடித்த ஒரு சாமானியப் பெண் அல்ல என்று கண்டார். ''பகவதியின் சந்நிதானத்தில் அல்லவா இருக்கிறேன்?'' என்று கூறி அவளுக்குத் தண்டம் சமர்ப்பித்தார் மாந்த்ரீகர்.

1922-ம் ஆண்டு, சிராவண பூர்ணிமையாகிய நன்னாளில் நள்ளிரவில் நிர்மலா தனக்குத் தானே தீக்ஷை தந்து கொண்டாள். குரு—சிஷ்யர், போதனை — மந்திரம், மனனம் செய்பவர் — மந்திர இலட்சியமான தெய்வ மூர்த்தி அனைத்துமே ஒன்றாயின. உலகம் அறிந்தவரைக்கும் சம்ஸ்கிருதக் கல்வியே பெற்றிராத நிர்மலா சகல மந்திரங்களையும் தானாக ஜபிக்கலானாள். தாந்திரிக யந்திரங்கள், சக்கரங்கள் அனைத்தும் தாமாகவே அவள் கண் முன் தோன்றின. அவற்றை எழுதி அவற்றுக்குரிய சவிஸ்தாரமான பூஜைகளை யாரும் கற்பிக்காமலே புரிந்து ஆனந்தித்தாள்.

1924ம்- ஆண்டு டாக்காவில் இருந்தபோது மிக அடர்ந்த கியால் நிலையிலேயே அவள் ஆழ்த் திளைத்திருந்தாள். அப்போது வெகு கடுமையான அநுஷ்டானங்களை அவள் பின்பற்றிய போதிலும், அவளது ஆரோக்கியம் சிறிதும் பாதிக்கப்படாமல், அவள் முழு நிலாவாக விளங்கியது அனைவருக்கும் ஆச்சரியமா யிருந்தது.

1926-ம் ஆண்டுதான் பொதுமக்கள் ஒரு நாமசங்கீர்த்தன விழாவிலே நிர்மலாவின் பாவ சமாதியை நேருக்கு நேர் கண்டனர். அன்றிலிருந்து நிர்மல சுந்தரி 'மா'வாக, மாதாஜியாக, ஆனந்தமயீயாகப் போற்றப்படுகிறாள். நிர்மலம் என்பது ஆத்மாவின் உள் தன்மை. ஆனந்தம் என்பது ஆத்மா வெளிப் போந்து அன்பு பொழியும் நிலை. நிர்மல சுந்தரி இப்போது வெளி உலகுக்கு அன்னையாக வந்த, ஆனந்தமயீ யாகிவிட்டார்!

மா ஆனந்தமயீ தேச சஞ்சாரம் மேற்கொண்டார். செல்லுமிடமெல்லாம் தமது அன்பினால் அடியாரை இழுத்து ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்தினார். 1928ம் ஆண்டு புனித வாரணாசியில் ஒரு பொதுச் சபையில் முதன் முறையாக ஆத்மிக போதனைகளை அளித்தார் — சமய விஷயமான கேள்விகளுக்கு விடை அளித்தார்.

1937ல் கைலாசத்தை அடைந்தார். மானஸரோவரின் அழகில் மகிழ்ந்தார். அதன் பின் தேசம் முழுவதும் பல இடங்களில் சஞ்சரித்து எண்ணற்ற மானுடருக்குப் புண்ணியம் கூட்டி வருகிறார். பிருந்தாவனம், வாரணாசி, தில்லி முதலிய பல இடங்களில் அவருக்கு ஆசிரமங்கள் உள்ளன.

அன்னை ஆனந்தமயீ புதிதாக எந்த ஒரு மதத்தையும், எந்த ஒரு சம்பிரதாயத்தையும் ஏற்படுத்தவில்லை. சத்தியமான சமய மார்க்கங்கள் அனைத்தும் தமக்குச் சம்மதமே என்கிறார். பல மார்க்கங்களில் செல்லும் பல வகைப்பட்டவர்களும் அவற்றின் ஒரே இலட்சியமான அன்புப் பூஞ்சோலை இந்த அன்னையே என்று கண்டு அவரை வழிபடுகிறார்கள். அங்கு வேதாந்தத்தின் ஞானம் விளங்குகிறது; பக்தியின் பிரேமை பிரகாசிக்கிறது; தாந்திரீகர்களின் சடங்குகளும் சாதனைகளும் சம்பூர்த்தி பெறுகின்றன. இவை அனைத்தும் ஒரே வைரத்தில் செதுக்கிய வெவ்வேறு பட்டைகள்தாம் என்றும் தெரிகிறது. இவை அனைத்திலும் பங்கு கொண்டு தாமும் ஆனந்தித்து, மற்றோரையும் ஆனந்தப்படுத்தும் அன்னை, அவற்றுக்கெல்லாம் உட்பொருளாகவும், அவற்றினின்று மேம்பட்ட அன்புருவாகவும் அவரது பக்தர்களுக்கு அருள் புரிகிறார். அவரை நாடி வரும் எல்லோருக்கும் அவரவருக்கேற்ற தனி விதத்தில் அநுக்கிரகம் செய்கிறார் அன்னை ஆனந்தமயீ. ''இந்த வாத்தியத்தை நீங்கள் எப்படி வாசித்தாலும், அதன்படி அந்தந்த ராகத்தைச் சரியாக இசைக்கும்'' என்று தம்மைப் பற்றி அன்னை அடிக்கடி கூறுவார். அப்படிச் சொல்வதில் அவருக்கு ஆனந்தம்! ஆனால் விவேகிகளான பக்தர்கள் தாங்களே வாத்தியமாகி ஞான வித்தகியான அந்த ஆத்மகான விதுஷி அதைத் தம் இஷ்டப்படி இசைக்கட்டும் என்று சரணாகதி செய்துவிட்டு ஆனந்தம் காண்கிறார்கள். மிகப் பெரிய ஆத்மிக சாதகர்கள் பலர், மாதாஜியின் உணர்வு எப்போதுமே தங்கு தடையின்றி பரப்பிரம்ம சைதன்யத்தில் ஒன்றியிருக்கிறது என்கிறார்கள். அன்னையோ அந்தப் பெரிய சாதகர்களிலிருந்து அடிநிலையில் உள்ள

பாமரர் வரையில் அனைவரையும் ஒன்றாகவே பார்க்கிறார் — தாமாகவே பார்க்கிறார். "எனக்கு யாருமே அந்நியர் இல்லை" என்கிறார். தாமே தம்முடன் பல வேஷங்களில் விளையாடிக் கொள்வதாகச் சொல்கிறார்.

அன்னை ஆனந்தமயீ நம்மையும் தாமாகச் சொல்லிக் கொள்கிறார். அவருக்குப் பேதம் தெரியவில்லை. ஆனால் நமக்கு எத்தனை விதமான பேதங்கள் தெரிகின்றன? அவர் சொல்வது போலவே நாமும் "நாம் தான் அன்னை ஆனந்தமயீ" என்று உணருவதற்குச் சாதனை தொடங்க வேண்டாமா? அவருக்குள் ஒளிர்கின்ற ஆன்ம ஜோதி எதுவோ அதுவே நமக்குள்ளும் ஒளிர்கிறது. இப்போது ஒளிந்துள்ள அந்த ஒளியை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாமா? புதிதாக அந்த ஒளியை நாம் சிருஷ்டிக்க வேண்டியதில்லை. ஏற்கனவே நம் உயிரின் உயிராக அது இருந்து கொண்டு தான் இருக்கிறது. மாயையின் பல படுதாக்களை இழுத்து விட்டுக் கொண்டு அதை நாம் ஒளிக்கிறோம். இந்தப் படுதாக்களை அறுத்தெறிய வேண்டாமா?





அதற்கு ஒரு சக்தி வேண்டியிருக்கிறது. நமது சத்சங்கற்பத்தை மீறிப் பூர்வ வாசனை நம்மை இழுப்பதால் அந்தச் சக்தியை நாம் பெறத் தவறுகிறோம். நம் அனைவருக்கும் உள்ளேயிருக்கும் ஒளி வெளியிலும் ஓர் உருவம் தாங்கி வந்து நமக்குச் சங்கற்ப சக்தியை அநுக்கிரகிக்கிறது. அப்படி வந்திருக்கும் ஒருவர் அன்னை ஆனந்தமயீ. அன்னையிடம் வேண்டிக்கொண்டு நோய் தீர்ந்தவர்கள், பதவி உயர்வு பெற்றவர்கள், பல விதமான இன்னல்களிலிருந்து விடுபட்டவர்கள் எண்ணற்றவர். நோயில் பெரிய நோய் அஞ்ஞானம்தான்; பதவியில் உயர்ந்த பதவி ஆத்மஞானம்தான்; இன்னலிலிருந்து நிரந்தரமாக விடுபடுவது என்பது வீடு எனப்படும் மோக்ஷத்தை இன்றே, இங்கேயே அநுபவிப்பதுதான். அன்னையிடம் இதையே நாம் விவேகத்துடன் பிரார்த்திக்க வேண்டும். பிரார்த்தனைகூட வேண்டாம். மௌனமாக அவரது அநுக்கிரக வெள்ளத்தில் மிதந்தால் போதும்.

ஆனந்தமயீ அன்னையின் அநுக்கிரக வெள்ளத்தை அநுபவிக்கச் சென்னை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. பொங்கல் திருநாளன்று திருவனந்தபுரத்தில் நடைபெறும் லட்ச தீபத் திருவிழாவுக்காகத் தில்லியிலிருந்து வருகிறார் அன்னை ஆனந்தமயீ. வழியில் சென்னை மாநகரத்தில் ஜனவரி 7ந் தேதி வெள்ளிக்கிழமை காலையிலிருந்து 9ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை வரையில் தங்குகிறார். எத்தனையோ பேரநுக்கிரகங்களுக்குப் பாத்திரமாகும் புண்ணியத்தைப் பெற்றுள்ள **கல்கி பூங்கா** மாதாஜி பொன்னடி சாத்தி, மூன்று நாட்கள் தங்கியிருக்கும் பெரும் பேற்றையும் பெறப்போகிறது.

இந்த மகோத்சவத்தை எண்ணி எண்ணி மகிழ்ச்சிப் பரவசம் அடைகிறோம். அன்னை ஆனந்தமயீயின் அன்பு கமழும் தெய்வத் திருவுருவத்தை இவ்விதழ் அட்டையில் வெளியிட்டு அஞ்சலி செலுத்துகிறோம்.



AIYARS-CS,231 TM

படிப்படியாகப் பக்குவமாவோம்!



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

'நாம் பிறந்ததற்கு என்ன பிரயோஜனம்? எதற்காகப் பிறந்தோம்?' என்று அடிக்கடி நினைக்க வேண்டும். அந்தப் பிரயோஜனத்தை அடைவோமா என்று நினைக்க வேண்டும். 'நமக்கு ஏன் பாபம் வருகிறது? கோபம் வருகிறது? காமம் வருகிறது? இவையெல்லாம் ஏன் வரவேண்டும்? எப்போதும் ஆனந்தமாக, சந்தோஷமாக இருக்கக் கூடாதா?' — என்று தோன்றுகிறது. இதற்குப் பதில் ஒன்றும் நமக்குப் புரியவில்லை.

எல்லாம் நல்லதற்குத்தான். ஒரு மரத்திலே புஷ்பத்திலிருந்துதான் காயும் பழமும் உண்டாகின்றன. புஷ்பமாக இருக்கும்போது மூக்குக்கும் பழமாக இருக்கும்போது நாக்குக்கும் உபயோகப்படுகின்றன. பழம் நல்ல மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் இருக்கிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய் விடுகிறது. உடனே கீழே விழுந்து விடுகிறது. அதுபோல் இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்துவிட்டால் தானாகவே எல்லாப் பற்றும் போய்விடும். புளிப்பு இருக்கும் வரை பற்று இருக்கும். அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும்.



காயிலும் ஜலம் வரும். அதாவது மரமும் காயை விட்டுவிட விரும்பவில்லை; காயும் மரத்திலிருந்து விடுபட விரும்பவில்லை. ஆனால் நிறைந்து மதுரமாக ஆகிவிட்டால் தானாகவே பற்றும் போய்விடும்; பழம் தானே இற்று விழுந்துவிடும். மரமும் பழத்தை விடுகிறது; பழமும் மரத்தை விடுகிறது. இரண்டும் ஜலம் விடாமல் — அதாவது அழாமல் — ஆனந்தமாக இருக்கும். படிப்படியாக வளர்ந்து மனம் முழுதும் மதுரமான ஒவ்வொருவனும் இப்படியே ஆனந்தமாக சம்ஸார விருட்சத்திலிருந்து விடுபட்டு இருப்பான். பழமாக ஆவதற்கு முன் ஆரம்ப தசையில் எப்படிப் புளிப்பும் துவர்ப்பும் வேண்டியிருக்கின்றனவோ அதுபோலக் காமம், வேகம், துடிப்பு எல்லாமும் வேண்டியவைதாம் போலிருக்கிறது! இவற்றுக்கு நாம் ஆரம்ப தசையில் ஆட்படும்போதே, இவற்றிலிருந்து பூரணமாக விடுபட முடியாது. ஆனாலும், இவையெல்லாம் ஏன் வருகின்றன என்று அடிக்கடி நினைத்தாவது பார்க்க வேண்டும். 'இதனால் ஏதாவது பிரயோஜனம் உண்டா? அவசியமாக வருகிறதா? அநாவசியமாக வருகிறதா' என்று நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படி நினைக்கவில்லையென்றால் அவை நம்மை ஏமாற்றிவிடும். ஏமாந்துவிடுவோம். புளிப்பு இருக்க வேண்டிய சமயத்தில் புளிக்க வேண்டும். துவர்ப்பு இருக்க வேண்டிய சமயத்தில் துவர்க்க வேண்டும். ஆனாலும் அந்தந்த நிலையோடு நிற்காமல், பிஞ்சு அனவரதமும் பழமாகிக் கொண்டே இருப்பது போல் நாமும் மேலும் மேலும் மாதுரியமான அன்பை நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் நாமாகப் போய் மோக்ஷத்தைத் தேட வேண்டாம். எந்தக் காலத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தால் தானாக மோக்ஷம் என்கிற மதுர நிலை வந்துவிடும். அப்படி இல்லாமல் தகாத பருவத்தில் முயற்சி செய்தால் பிஞ்சிலே பழுத்த மாதிரிதான்.

நாம் இப்போதே பரம ஞானம் வேண்டுமென்று அதைத் தேடிப் போக வேண்டாம். இந்த ஜன்மத்திலே வரவில்லையென்றால் எத்தனை ஜன்மம் கழித்தாவது வரட்டும் என்று கருதி, நம் கடமைகளைச் செய்து கொண்டிருப்போம். நிறையத் தர்மத்தை அநுஷ்டானம் பண்ணுவோம். அப்படிச் செய்தால் படிப்படியாகப் பரம ஞானமும் தானே வந்துதான் ஆகவேண்டும்.



இன்றைய முன்னணி பிரபல

பழனி டாக்டர் எஸ். காளிமுத்து

R. M. P. (Ind.) V. V. C., A. M. I. H.

அவர்களின் விஜயம்



சந்திக்கும் விலாசங்கள்

10-ந் தேதி திருப்பத்தூர் (N. A.): சங்கர் கபே பகல் 1 மணி முதல் 2-30 மணி வரை.

10-ந் தேதி ஆம்பூர் : N. A. B. லாட்ஜ், மாலை 3-30 மணி முதல் 5 மணி வரை.

11ந் தேதி வேலூர் (N.A.): அஜீஸ் மேன்ஷன்ஸ் காலை 8 மணி முதல் 11 மணி வரை.

11-ந் தேதி குடியாத்தம் : அலங்கார் லாட்ஜ் பகல் 1 மணி முதல் 3 மணி வரை.

12-ந் தேதி பெங்களூர் ஸிடி : நியூ எவரெஸ்ட் ஹோட்டல், காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை.

13-ந் தேதி கிருஷ்ணகிரி : ஸ்ரீ ராம் லாட்ஜ், காலை 8 மணி முதல் 10 மணி வரை.

13-ந் தேதி தர்மபுரி : சீனிவாசா லாட்ஜ் காலை 11 மணி முதல் 12 மணி வரை.

13-ந் தேதி சேலம் : லக்ஷ்மி ராஜபவன் லாட்ஜில், பகல் 2 முதல் 5 மணி வரை.

15-ந் தேதி ஈரோடு : நவபவனம் லாட்ஜ் காலை 8 மணி முதல் 12 மணி வரை.

15-ந் தேதி திருப்பூர் : ஸ்ரீ கிருஷ்ணா லாட்ஜில் பகல் 2 மணி முதல் 4 மணி வரை.


15-ந் தேதி பொள்ளாச்சி : ஹோட்டல் கிருஞ்சலி, மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை.

16-ந் தேதி கோவை : விஜயா லாட்ஜ், காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.

21 & 22-ந் தேதி பம்பாய் : சாரதா பவன் (மாதுங்கா), காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை.

பழனி சித்தர் வைத்தியசாலை

போன்: 316] **பழனி** [தந்தி: சித்தர்



Racold

POP-UP TOASTER

For crisp brown toasts in a jiffy

DISTRIBUTORS FOR TAMIL NADU KERALA & MYSORE

THE ALUMINIUM & GLASSWARE EMPORIUM

Head Office:
289, Netaji Road
Madras-1
Phone : 21776 - 21066

Branch :
No. 3, Ist, Cross
Kempegowda Extensio
Bangalore - 9 Phone :

கல்கியின்
அலை ஓசை

அலை ஓசையில் இலக்கிய நயம்

சாகித்ய அகாடெமியின் பரிசுபெற்ற முதல் தமிழ் நாவலும், ருஷ்ய மொழியில் பல லட்சம் பிரதிகள் விற்பனையாகி யிருப்பதும், தாம் எழுதியவற்றுள் தலை சிறந்ததெனப் பேராசிரியர் கல்கி அவர்களாலேயே மதிக்கப்படுவதுமான அலைஓசையைப் படிக்க ஆர்வத்துடன் காத்திருக்கும் லட்சக் கணக்கான வாசகர்களுக்கு ஒரு மகிழ்ச்சியளிக்கும் அறிவிப்பு:

அலைஓசையின் முதல் பதினைந்து அத்தியாயங்கள் வரை நீங்கள் படித்ததும், மீண்டும் ஒரு தடவை முதலிலிருந்து ஆரம்பித்துப் படித்துப் பாருங்கள். அவற்றுள் இலக்கிய நயம் மிக்கதென நீங்கள் கருதும் பகுதியை (சுமார் பத்துப் பதினைந்து வாக்கியங்கள்) எடுத்து எழுதுங்கள். எதனால் அந்தப் பகுதியை இலக்கிய நயம் மிக்கதென நீங்கள் கருதுகிறீர்கள் என்பதனைப் பத்துப் பன்னிரண்டு வரிகளில் தெரிவியுங்கள்.

உங்கள் கடிதம் கல்கி காரியாலயத்துக்கு 1972 மார்ச் 15ந் தேதிக்குள் கிடைக்க வேண்டும். சிறந்த கடிதத்துக்கு ரூ.100/= பரிசாக வழங்கப்படும். உறையின் மேல் 'அலை ஓசை—இலக்கியப் பரிசுத் திட்டம்' எனக் குறிப்பிடவும்.

இரண்டு பரிசுத் திட்டங்கள்

புகைப்படங்களில் பழமொழிகள்

'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற பழமொழியை விளக்குவதுபோல் ஓர் அழகிய புகைப்படம் எடுத்து அனுப்புங்கள். சிறந்த படத்துக்குப் பரிசு ரூ. 50 — முடிவு தேதி ஜனவரி 22, 1972.

'யானைக்கொரு காலம் வந்தால், பூனைக்கொரு காலம் வரும்' என்ற பழமொழிக்கு ஒன்றுக்கொன்று தொடர்பானதாக இரண்டு படங்களை அனுப்பலாம். அல்லது ஒரே படத்திலும் பழமொழியை விளக்கலாம். சிறந்த படம் அல்லது படங்களுக்குப் பரிசு ரூ. 50 — முடிவு தேதி ஜனவரி 29, 1972.

புகைப்படக் கலை நுணுக்கங்களில் கருத்துச் செலுத்தப்பட வேண்டும். படங்கள் தபால் கார்டு அளவினதாய் இருந்தால் நலம். பரிசு பெறுவிடினும் பிரசுரமாகும் இதர படங்களுக்கு வழக்கமான சன்மானம் உண்டு. உறையின் மேல் 'புகைப்படப் போட்டி' எனக் குறிப்பிடவும். பிரசுரமாகாத புகைப்படங்களைத் திரும்பப் பெற விரும்புவோர் போதிய தபால் தலைகளுடன் கூடிய சுய விலாசமிட்ட உறைகளை உடன் அனுப்ப வேண்டும்.




மேற்படி போட்டிகள் அனைத்திலும் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. கடிதப் போக்குவரத்தே கிடையாது. விலாசம்: ஆசிரியர் கல்கி, சென்னை—31.

...இட்டால் இதமளிப்பு



டெட்டால் அரவணைப்பு

**காயங்களைத் தூய்மைப் படுத்துவதோடன்றி
ஆற்றவும் துணை டெட்டால்.**



பட்ட காயம் எதுவாயினும் இட்டுப் பயன்காணத் தட்டாமல் உதவுவது டெட்டால். உங்கள் டாக்டரே கூறுவார்: ஒழுங்குதவறாமல் காயத்தின்மீது அடிக்கடி இட்டால், கிருமிகள் அணுகாமல் காக்க உதவுவது டெட்டால் ... பரிபூரணமான ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு அது.

**குளி நீரிலே இட்டால்: புத்துணர்வூட்டுகிறது டெட்டால்.
க்ஷவரத்திற்கான நீரிலே: பாதுகாக்கிறது டெட்டால்.**

புதுமைக் கோல டெட்டால் - *பரிபூரண ஆன்ட்டிஸெப்டிக் பாதுகாப்பு*

லிண்டாஸ்-DTL. 2 - 140 TM (R)



சில நாட்களுக்குமுன் என் தந்தையார், திருப்பூரிலிருந்து பொள்ளாச்சி போகும்படி நேர்ந்தது. ஏ. பி. டி. திருப்பூர் பொள்ளாச்சி பஸ்ஸில் ஏறினார்கள். பஸ் புறப்பட்ட பிறகே வீட்டுச் சாவியை மறந்துவிட்ட விவரம் ஞாபகத்துக்கு வந்தது. சாவி இல்லாமல் பொள்ளாச்சி போயும் பயனில்லை. எனவே, அடுத்த நிலையமான பல்லடத்திலேயே இறங்கித் திருப்பூர் திரும்பி விட்டார்கள். கண்டக்டரிடம், பொள்ளாச்சி வரை வாங்கிய 'ந்ரு' டிக்கட்டில், தான் பல்லடம் வரைதான் பிரயாணம் செய்ததாகக் குறிப்பை எழுதி வாங்கிக் கொண்டார் என் தந்தை. பிறகு, திருப்பூரிலிருந்து, ஏ.பி.டி. தலைமை அலுவலகத்துக்கு அந்த டிக்கெட்டைத் தபால் மூலம் அனுப்பினோம். மேற்கண்ட விவரங்களையும் எழுதியிருந்தோம். ஆச்சரியப்படத்தக்கவிதத்தில், ஒரே வாரத்தில், ஏ.பி.டி. கம்பெனியாரிடமிருந்து, பல்லடத்திலிருந்து பொள்ளாச்சி செல்வதற்கான தொகை வாபஸ் செய்யப்பட்டு மணியார்டர் மூலம் எங்களை வந்தடைந்தது. இது மாதிரி நிகழ்ச்சி வெளிநாட்டில் நடந்ததென்றால் உடனே 'ஆஹா!' என வியக்கிறோம். இங்கும் நடக்கிறது.

திருப்பூர் 1
14–12–71 எஸ். கிருஷ்ணன்

★

நாங்கள் அன்றாடம் கடையிலிருந்து அரிசி வாங்கித்தான் சாப்பிடுவது வழக்கம். பொதுவாகவே நவம்பர் மாதத்திலிருந்து தினந்தோறும் அரிசி படிக்கு ஐந்து பைசா வீதம் ஏறிக் கொண்டே வந்தது. அதனால் தினமும் கடைக்குச் செல்லும்போது ஐந்து பைசா அதிகமாக எடுத்துச் செல்வது வழக்கம்.... டிசம்பர் 12ந் தேதி கடைக்குச் சென்ற நான் பிரமித்து நின்றேன்.

டிசம்பர் 11ந் தேதி வரையில் 2-10 விற்ற அரிசியை 2-50, 2-60 என்றார்கள். வேறு வழியின்றி முக்கால் படி அரிசி வாங்கிக்கொண்டு திரும்பினேன். ஏற்கனவே கள்ளுக் கடைகள் திறந்திருப்பதால் ஏழைகளுக்குக் கால்வயிற்றுக் கஞ்சிக்கு உள்ள பணம்தான் கிடைக்கும். அரிசியின் விலையும் இப்படி ஏறினால் மக்கள் என்ன செய்வது? படித்துவிட்டு வீட்டில் இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெற வசதியிருந்தாலும் பரவாயில்லை. ஏற்கனவே வீட்டுக்குப் பாரம். இதில் வயிற்றுக்கும் இன்ன டாட்டம். இது என்ன கொடுமை? இந்த நிலை மாறுமா?

ஸ்ரீரங்கம்
12–12–71 காஞ்சனா

★

கடந்த சில நாட்களாகச் சென்னை வீதிகளில் தென்படும் குடும்ப நலத் துறையினர் வெளியிட்ட குடும்பக் கட்டுப்பாடு பிரசாரச் சுவரொட்டியைக் கண்டு அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. 'நாம் இருவர், நாம் பெறுவதும் இருவர்' என்ற வாசகத்துடன் காணப்படும் அந்தச் சுவரொட்டிகளிலும், மாண்புமிகு மு.கருணாநிதி அவர்களின் புகைப்படத்தை இணைப்பதைக் கண்டு வியந்தேன். அரசுதான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் மூலகர்த்தா என்றாலும், அரசின் முதல்வர் படத்தைச் சுவரொட்டிகளில் வெளியிட்டு விளம்பரம் செய்வது எவ்வளவு வேடிக்கையான உத்தி!

சென்னை — 17
15–12–71 வாதிராஜ்

★

இரண்டு நாட்களுக்குமுன், நான் பாலர் அரங்கம் செல்ல நேர்ந்தது. (மன்னிக்கவும். இப்போது கலைவாணர் அரங்கமல்லவா?)— அங்கே இளம் சிறார்கள்தான் அதிகமான அளவில் படம் பார்க்க வருகிறார்கள். பெரியவர்கள் அனுமதிக்கப்பட்டாலும், பெயரை மாற்றினாலும், பாலர்கள் கூட்டமே மிகுதி. நான் சென்ற போது, 'போதும் ஐயா' என்ற தலைப்பில் தமிழக அரசின் குடும்பக் கட்டுப் பாட்டுப் பிரசாரப் படம் காட்டப்பட்டது. ''நாட்டிலே உற்பத்தியைப் பெருக்கிடுவீர் என்றால் சிலர் வீட்டிலே உற்பத்தியைப் பெருக்கிடுகின்றார்'' என்ற நம் டாக்டர் முதல்வர் அவர்களின் கவிதையோடு, அரசு விளம்பரத்தில் அன்னாரின் திருவுருவம் காட்சி அளித்தது. குழந்தைகள் அதிகமாகச் சேரும் இடங்களில் எதைக் காட்டுவது என்று அரசினர் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

திருவல்லிக்கேணி
20–12–71 பாசி. இராமச்சந்திரன்



அம்மா

ரா. கணபதி

14. தக்ஷிணேசுவரம் அழைத்தது!

பதிவிரதத்திலேயே ஈடுபட்ட எனக்கு மூவுலக இன்பங்களிலும் எண்ணமில்லை. என் தந்தையின் இல்லத்திலிருந்தது போலவே கடுங் கானகத்திலும் சுகமாக வசிப்பேன்.

— ஸ்ரீமத் ராமாயணத்தில் தேவி ஜானகி

அறுபது மைல்கள் நடந்தாக வேண்டும், ஜயராம்பாடியிலிருந்து தக்ஷிணேசுவரம் அடைய. சாரதைக்கு அது ஆனந்தப் பயணமாகவே இருந்தது. வயல்களையும், குளங்களையும், கிராமங்களையும் கடந்து தந்தையுடனும், மற்ற ஆதி கங்கா யாத்ரீகர்களுடனும் தன்னுடைய அதிசய அகத்துக்காரரின் அகத்துக்குப் போகிறாள்! அவரது 'அகம்' பவதாரிணியின் ஆலயமே என்பது சகலவிதத்திலும் உண்மையன்றோ?

சாலை ஓரத்து மரத்தடியிலேயே இரவில் உறங்குவார்கள். காலையில் மீண்டும் நடையைக் கட்டுவார்கள். இப்படி மூன்று நாட்கள் சென்றன. ஆனந்தத்தின் இடையிலேயே இன்னும் தக்ஷிணேசுவரம் வந்த பாடில்லையே என்ற ஆதங்கச் சாயலும் விழத் தொடங்கியது. அந்த ஆதங்கத்தை அதிகப்படுத்துவதேபோல் சாரதைக்குக் காய்ச்சல் வேறு கண்டுவிட்டது!

அவளுக்கு மலேரியா ஜுரம் அவ்வப்போது ஏற்படுவது உண்டல்லவா? இந்தச் சமயம் பார்த்துப் பரதேவதை அதை அனுப்பி வைத்து விளையாட்டுப் பார்த்தாள். அதோடு நீண்ட நடையின் சலிப்பு வேறு! ஆயினும் சகிப்புத் தன்மையின் வடிவமான நம் தேவி சுகவீனத்தை வெளிச் சொல்லாமல் நடந்து கொண்டேயிருந்தாள். நடை தடுமாற ஆரம்பித்தது. தடுமாறித் தடுமாறி நடந்தாள். அதற்கப்புறம் தடுமாறிக்கூட நடக்க முடியவில்லை. அப்படியே துவண்டு விழுந்தாள், தாமரைத் தண்டு நூலிழைபோல். தாப ஜ்வரமும் கண்டது.

பெரும் கவலையுடன் ஒரு குடிசைக்கு அவளை அழைத்துச் சென்று படுக்க வைத்தார் ராமசந்திரர். முக்கி முனகிக் கொண்டு தமது திருக் குமாரி படுத்திருப்பதைக் கண்டு தந்தை மனம் கனத்தது.

இந்தப் பாரத தேசத்தின் ஸ்திரீ தர்மத்தைத்தான் என்னென்பது? புருஷன் என்றால் இப்படி ஒரு பிரேமை! அவன், 'இருக்கிறாயா, செத்தாயா?' என்று இவளைக் கேட்காவிட்டாலும்கூட அவனிடமே ஓடுகிறது இந்தப் பெண் நெஞ்சு. அவனுக்குப் பைத்தியம் என்று ஊரெல்லாம் சொன்னாலும் இவளுக்கு நம்பிக்கை வருவதில்லை. அப்படியே அவனுக்குப் பைத்தியமானாலும் அதற்காக அவனை விடுவதா, அப்போது தானே உடன் இருந்து அவனைப் பராமரிக்க வேண்டியது அத்தியாவசியம் என்று முடிவு செய்கிறது பெண்ணின் பிரேமை உள்ளம். மற்றப் பெண்கள் கணவனிடம் காட்டும் அன்பிலே தேக நசைக்கும் இடம் உண்டு. அந்த ஏதோ ஓர் 'ஆனந்த'த்துக்காக அவர்கள் பல இடர்ப்பாடுகளை ஏற்பதில்கூட விசேஷமில்லை. ஆனால் நம் சாரதைக்கு இப்படிப்பட்ட இன்ப நாட்டமும் இல்லாமலே அவள் பதிதேவருக்காகக் கிளம்பினாளே, அது பூஜைக்குரிய புனித அன்பு அல்லவா! அந்தப் புனிதத்தைப் பொன்னாகப் புடம் போடவே இப்போது பராசக்தி அவளைத் தணலாக எரியும் காய்ச்சலில் புரட்டி எடுக்கலானாள்.

''மலேரியா எனக்கு நன்றாகப் பழகிப் போனதுதான். அதைப் பற்றிக் கவலையும் இல்லை, பயமும் இல்லை. இந்தச் சரீரமே போனாலும்கூட அதைப் பற்றியும் விசாரம் இல்லை. ஆனால் **இந்தச் சமயத் தில்தானா** காய்ச்சல் நேர வேண்டும்? என் ஸ்வாமியைத் தரிசித்தபின் எந்தக்

கேடு வந்தாலும் மகிழ்ச்சியுடன் ஏற்பேன். ஆனால் அவரைப் பார்க்கும் முன்பே இந்தக் கண்ணை மூடி விடுவேனோ? சிம்மவாஹினியின் திருஉள்ளம் அது தானோ?' — சாரதையின் உடல் காய்ந்தது. உள்ளமும் காய்ந்தது.

திடீரென்று உடலிலே ஒரு குளிர்ச்சி. உள்ளத்திலும் குளிர்ச்சி. சந்தனமும் சந்திரிகையும் பச்சைக்கர்ப்பூர மும் பனிநீரும் கலந்து மேனியிலும் மனத்திலும் ஊடுருவுவது போன்ற உணர்ச்சி! கனத்த இமைகளைத் திறந்து பார்த்தாள் சாரு! அவள் கண்ட காட்சியில் அப்போதே இமையின் கனம் இலேசாகியது.

சொல்லரிய அழகியான ஒரு சியாமள வண்ண மங்கள மங்கை சாரதைக்கு நெருக்கமாக அமர்ந்து அவளது தலையைக் கோதிக் கொடுக்கிறாள், அவளது உடல் முழுவதையும் தடவிக் கொடுக்கிறாள். அந்த ஸ்பரிசத்தின் மென்மையும் தண்மையும் வார்த்தை யால் வடிக்க முடியாதனவா யிருக்கின்றன! மழையில் நெருப்பு அணைவதுபோல் இந்த அணைப்பில் அப் போதைக்கப்போதே தணலான காய்ச்சல் தணிகிறது; உடல் நோவு பறந்தோடுகிறது!

''என் அன்பே, நீ எங்கேயிருந்து வரே?'' என்று கேட்டாள் சாரதை, எல்லையற்ற நன்றியுடனும் பிரேமையுடனும்.

''தக்ஷிணேசுவரத்திலிருந்துதான்!'' என்றாள் சியாமள சுந்தரி. அவள் குரலிலும் சந்தனம், சந்தி ரிகை, பச்சைக் கர்ப்பூரம், பனி நீர் இவற்றின் தண்மை; அதோடு தேனின் தீஞ்சுவையும் கூடி யிருக்கிறது!

''ஆஹா! தக்ஷிணேசுவரத்திலிருந்தா? நான்கூட அங்கே போறதாத்தான் கிளம்பினேன். அவரைப்





பார்ப்பேன், அவருக்குப் பணிவிடை பண்ணுவேன்னுதான் நினைச்சுண்டிருந்தேன். ஆனா, இப்பப் பயங்கரமாப் படுக்கை போட்டதைப் பார்த்தா அந்த ஆசை பகல் கனவாப் போயிடுமோன்னு பயந்துட்டேன்'' என்றாள் சாரதாமணி.

''கவலைப்படாதே, ஆமாம், கவலையே படாதே'' என்ற அற்புத அபய மொழி கருநிற அழகியின் திருமுகத்திலிருந்து வழிந்தது. ''நீ நிச்சயமா தக்ஷிணேசுவரத்துக்குப் போகத்தான் போறே! சீக்கிரமே உனக்கு உடம்பு வாசியாகப் போறது. **அவனைப்** பார்க்கத்தான் போறே. உனக்காகத்தானே நான் **அவனை** அங்கே இருக்கிப் பிடிச்சு வெச்சுருக்கேன்?'' என்றாள்.

''அப்படியா?'' என்று அதிசயித்தாள் சாரதை. ''என் அன்பே, நீ எங்களுக்கு என்ன உறவாகணும் ?'' என்று வினவினாள்.

''நான் உன் கூடப் பிறந்தவள் — உனக்குத் தெரியல்லே ?''

''வாஸ்தவம். அதனாலேதான் சமயம் பார்த்து வந்தே!''

கருமையின் கருணையிலேயே கரைந்து உறக்கத்தின் ஆறுதலான இருளுக்குள் இழைந்தாள் சாரதை.

குஞ்சு விரல்கள் தன் தலையில் தாளம் போடுகிற உணர்விலே உறக்கம் கலைந்தாள் சாரதாமணி. கருணைக் கருமையுடன் ஒரு பெண் குழந்தை தலைமாட்டில் அமர்ந்திருந்தாள். அவளுடைய காலில் புழுதி கப்பியிருந்தது.

''என் பிரியக் குழந்தே! உன் காலை அலம்பிக்கிறதுக்கு இங்கே யாரும் ஜலம் தரவில்லையா ?'' என்று கேட்டாள் சாரதாமணி.

''கால் அலம்பிக்க வேண்டியதில்லே, அம்மா! ஏன்னா இப்பவே நான் கிளம்பிண்டிருக்கேன். உன்னைப் பார்க்கத்தான் வந்தேன். பயப்படாதே அம்மா, உனக்கு ஜுரம் இப்பவே சரியாப் போயிடும்'' என்று தித்திக்கச் சொல்லிவிட்டுக் குழந்தை மறைந்தாள்.

'கூடப் பிறந்தவள்' என்றாள் ! 'அம்மா' என்று கூப்பிட்டுக் கொண்டு பெண்ணாக வந்தாள்! அம்மா, பெண், அக்கா, தங்கை எல்லாம் கடைசியில் ஒன்றேதான் !

சிம்மவாஹினி இவள் நினைத் வுடனே வந்துவிட்டாள்! 'ஹிம்ஸ' என்ற சப்தமே மாறி, 'ஸிம்ஹ' என்று வந்தது. தீமைக்கு ஹிம்ஸை தருவாள் ஸிம்ஹவாஹினி. ஹிம்ஸையே ஹம்ஸமான மென்மையுடன் வந்தருள் புரிந்தது இங்கே. இது பரம ஹம்ஸ பத்தினி அல்லவா? ஹம்ஸவாஹினியான பிரம்மாணிக்கு ஸிம்ஹவாஹினி, சகோதரி என்றும் மகள் என்றும் உறவு வைத்துக் கொண்டு வந்து ஹிம்ஸை தீர்த்தாள் ! அவள் நினைத்த இடத்திலேயே ஆவிர்பவிக்கக்கூடியவள்! ஆயினும் அன்பின் அடர்த்தியில் தன் தெய்விகத்தைக்கூட மறந்ததே போல் தக்ஷிணேசுவரத்திலிருந்தே புழுதிக் காலுடன் வந்திருக்கிறாள். மனிதன் தெய்வத்தன்மை எய்தும் அற்புதத்தைவிடத் தெய்வம் மனிதத்தன்மை எய்தும் அற்புதம் பேரழகாக இருக்கிறது!

* * *

தெய்வ தரிசனம் தந்த தெம்புடன், தெளிவுடன் மறுநாள் காலை வெகு வெகு என்று உற்சாகமாக நடையைத் தொடர்ந்தாள் சாரதை. சிறிது தூரம் சென்றதும் வாடகைக்கு ஒரு பல்லக்குக் கிடைத்தது. சாரதை அதில் பிரயாணத்தைத் தொடர்ந்தாள். 'உழைக்கின்ற சாருவுக்கும் பல்லக்குச் சொகுசா?' என்று எண்ணியோ என்னவோ, காய்ச்சல் திருப்பிக் கொண்டது. ஆனால் அது கடுமையாக இல்லை. தந்தையிடம் அது பற்றி அவள் சொல்லவும் இல்லை.

கடைசியாகப் பல்லக்குப் பயணமும் முடிந்தது. நிர்மல கங்கையைப் பரிசலில் கடந்தனர். பரிசல் மிதந்தது. அம்மாவின் ஸ்பரிசத்தில் ஹம்ஸமாக மிதந்தாள் சாரதை, பரமஹம்ஸத்தை நோக்கி.


இரவு ஒன்பது மணி. வெளியே எங்கும் அமைதி. கங்கா மாதா சலசலத்து ஓடுகிறாள். சாரதையின் இதயத்தில் ஒரே ஆர்வத் துடிப்பு. நாலு முழு ஆண்டுகள் காணாதிருந்த பிரேம ரூபத்தைக் காணப் போகிறோம் என்ற கிளுகிளுப்புடன் புண்ணிய தக்ஷிணேசுவரத்து மண்ணிலே புண்ணிய பாதத்தை வைத்தாள் சாரதை. காற்றிலே சிறிது நழுவிய முக்காட்டையும் இழுத்து நன்றாக முகத்தை மூடிக் கொண்டாள் நாண ராணி சாரதை— அந்த இருட்டு வேளையிலும்! பதிதேவரைக் கண் குளிரக் காண்போமா என்ற துடிப்பிலும்!

அவரைக் காணாமல் முக்காட்டை இழுத்து விட்டாலும், இதோ அந்த அமிருதக் குரல், காமார்புகுரில் அவளுள் புகுந்து புத்துயிர் பொலிவித்த புனிதக் குரல், அவள் காதுகளில் பாய்கிறது. அவளுடைய ஸ்வாமி பேசுகிறார், எட்ட இருந்த தமது அறையிலிருந்தே:

''அடேய் ஹ்ருதே! நல்ல முகூர்த்தம் வந்துடுத்தாடா? இதுதான் **அவ** முதல் தடவையா இங்கே வரது!''

அவர் இருக்கிற இடத்தில் எப்போதும் சுப முகூர்த்தம் தானே?

பாதுகாப்பான பூச்சு



நன்றி—நீடித்த டூலக்ஸுக்கு

டூலக்ஸ் ஒருபொழுதும் திட்டுத்திட்டாகவும் உரிந்தும் போகாது. நீடித்திருக்கும் பரப்பு—முற்றிலும் ஒரே சீராக இருக்கும்.

உங்கள் வீட்டிலும் நீடித்திருக்கின்ற டூலக்ஸ் பெயின்ட் பூசியிருக்கிறீர்களா? அதன் செலவு, நீங்கள் நினைப்பதைவிட குறைவுதான்.

★ **பரந்த பரப்பிற்கு பூசக்கூடியது:**
டூலக்ஸை குறைவாக உபயோகித்து அப்பழுக்கில்லாமல் விரிவாக பரந்த இடத்திற்குப் பூசமுடியும்—குறைந்த அளவே தேவைப்படுகிறது; செலவும் குறைவாகிறது.

★ **பூரணமாகக் கழுவக்கூடியது:**
சோப்புநீர் கொண்டு கறைகள், தூசு அழுக்கு ஆகிய வற்றை சுலபமாகக் கழுவிவிடலாம்.

★ **மங்காத, உரிந்துபோகாத முற்றிலும் ஒரே சீரான பரப்பு:**
தரப்பரிசோதனை செய்யப்பட்ட கூட்டுப் பொருள்களினாலானது டூலக்ஸ்.



தேர்ந்தெடுக்க 121 வண்ணஜாலம்:
உங்களுக்கு உகந்தது எந்த நிறம் என்று நீங்கள் எப்பொழுதாவது எண்ணியதுண்டா? தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அநேகவித நிறங்களுள் உங்கள் வீடு அழகுடன் திகழ்வதற்கு உள்ளம் உற்சாகமூட்டும் எண்ணிறந்த நிறத் திட்டங்கள் இருக்கின்றன. உங்கள் கன்ட்ராக்டருடன் கலந்துபேசி அவரது ஆலோசனையைக்கேட்டு டூலக்ஸ் நிறவகை அட்டையைப் பாருங்கள்.

டூலக்ஸ்—இந்தியாவில் தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்:
தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்.

ACCI/P 6666

டூலக்ஸ்—இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், லண்டனின் டிரேட் மார்க்.
பதிவுபெற்று உபயோகிப்பவர்கள்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கோர்ப்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட்.

'ததேவ லக்னம் ஸுதினம் ததேவ'- அல்லவா? அதோடு படகிலே வரும் போதே பஞ்சாங்க ரீதியிலான அமங்கள வேளையைக் கடந்தாகி விட்டது என்றும் அவளுக்குத் தெரியும்.

நாண ராணி சாரதை,—அடங்கி ஒடுங்கிப் பின்னாலேயே நிற்கும் சாரதை — தன்னுடன் வருகிறவர்கள் என்ன செய்கிறார்கள் என்ற பிரக்ஞையே இன்றி, விறுவிறு என்று தனது ஸ்வாமியின் குரல் வந்த திக்கில் விரைந்தாள்.

நாலாண்டுகளுக்குப் பின் நாயகனின் முன் விழுந்து எழுந்தாள். நாலாண்டுத் தாபமும் அதோடு நொறுங்கி விழுந்தது.

''என் அம்மா! ஆஹா, கடைசியில் நீ இங்கே வந்தே விட்டாய். பேஷான காரியம் செய்தாயம்மா!'' என்று அன்பின் ரசகுண்டுகளாக ஒவ்வோர் அட்சரத்தையும் மொழிந்தார் பகவான் ராமகிருஷ்ணர்.

ஊரெல்லாம் அவருக்குப் பைத்தியம் என்று சொன்னபோதும் அதை அவளால் நம்ப முடியவில்லை. கங்கைக் கரையில் அந்தக் கனிவுக் குரலைக் கேட்டவுடன், 'இந்தத் தெளிவு மூர்த்திக்கா மூளை குழம்பியதாகச் சொன்னார்கள்? அப்படிச் சொன்னவர்களுக்குத்தான் மூளை குழம்பியிருக்கிறது!' என்று எண்ணினாள். இப்போது நேருக்கு நேரே அவரது அன்புப் பேச்சைக் கேட்டவுடன், 'என்னுடைய பகவான் என்னுடைய பகவானாகவேதான் இருக்கிறார். பகவானுக்குப் பைத்தியம் பிடிப்பதில்லை' என்று கண்டுகொண்டாள்.

அவளது உடம்பு ஆடியது — சமீபத்து நோயும், இப்போதைய உவகைப் பெருக்கும் சேர்ந்து அவளை ஆட்டி வைத்தன.

''உட்காரம்மா, உட்காரு'' என்ற ராமகிருஷ்ணர், ''யாரடா அங்கே, அம்மா தரையிலே உட்காரப்படாது, பாய் கொண்டு வந்து விரியுங்கோ'' என்று கோஷித்தார்.

ஒரே அன்பு வெள்ளம்தான்.

சாரதை பாயில் அமர்ந்தாள்.

பதிதேவரிடம் பேசினாள்.

அவரும் பேசினார்.

எந்தக் கணவனும் எந்த மனைவியும் பேசியிராத தூய திருமொழிகளை, பாவனப் பெருமொழிகளை, எளிய அன்பு மொழிகளைப் பரிமாறிக் கொண்டனர், பர்த்தாவும் பத்தினியும்.

''தாயே, உனக்கு வர வழியில் காய்ச்சலா கண்டது? உனக்கு உடம்புக்கு வரப்படுமோ? நன்னா குணமாயிடுத்தா....?'' என்று பரிந்து பரிந்து கேட்டார் ராமகிருஷ்ணர்.

''நன்னாத் தேவலைன்னா... அதைப் பத்திக் கவலையே படாதேள்....''

''நீ அப்படிச் சொன்னாலும் உன் குரலே நடுங்கறதே! என்ன பரிதாபம்! நீ காலம் தாழ்த்தி வந்திருக்கே! என் மதுர் மட்டும் இப்போ உயிரோடு இருந்தா உனக்கு ராஜோபசாரம் பண்ணுவார். அவர் போனது எனக்கு வலது கையே உடைஞ்ச மாதிரி....''

தக்ஷிணேசுவர ஆலய ஸ்தாபகியான ராணி ராஸமணியின் மாப்பிள்ளை மதுரநாதர் ராமகிருஷ்ணரின் மகிமையை முற்றிலும் உணர்ந்து அவருக்கு மனமாரத் தொழும்பு புரிந்தவர். சாரதை தக்ஷிணேசுவரம் சென்றடைந்தது 1872ம் ஆண்டு மார்ச் மாதத்தில். மதுரநாதர் சில மாதங்களுக்கு முன்பு காலமாகி விட்டார்.

ராமகிருஷ்ணர் எதையோ நினைத்துக் கொண்டு சிரித்தார். வலது கை போச்சு! ஆனால் அவரது இடது பாகம் முழுவதும் இப்போது வந்து எதிரே உட்கார்ந்திருக்கிறது!

இடது பாகம் மட்டும்தானா? 'லலிதே! நீ பரமேசுவரனின் இடது பாதியாக இருப்பவள் என்று சொல்கிறார்களே, அதுவும் தப்பு. உன் சிவப்பு அவனது வலது பாகத்தையும் விழுங்கிவிட்டது. நீயே பூரணரூபியாகச் செக்கச் செவேலென்று விளங்குகிறாய்!' என்று ஆதி சங்கரர் பாடினார். யாக்ஞவல்கியரும் இவ்விதமே மைத்ரேயியிடம் கூறியதாக ஸுரேசுவராசாரியர் உபநிஷத பாஷ்யத்தில் சொல்கிறார்: மகரிஷி யாக்ஞவல்கியரின் ஞானச் செல்வம் அனைத்திலும் போதனை பெற விழைகிறாள் அவரது பத்தினி மைத்ரேயி. அந்த ஞானத்தைப் பெற்றுவிட்டால், அதன்பின் 'இருப்பதெல்லாம் ஒன்றுதான், கணவனும் அதுதான், தானும் அதுவேதான், அதாவது கணவனும் தானும்கூட ஒன்றேதான் என்ற அநுபவத்தை எய்திவிடுவாள். இதை எண்ணி யாக்ஞவல்கியர், ''பிரியே, உமாதேவி தனது பரமப் பிரேமையினால் சூலபாணியின் இடப் பாகத்தைப் பெற்றுக் கொண்டாள்; நீயோ என் ஆத்மாவைப் பூரணமாகவே வௌவிக் கொள்ள விரும்புகிறாய்'' என்றாராம்!

ஜயராம்பாடியில் தொடங்கிய பாடத்தைப் பூர்த்தி செய்து, ஜபயோக சாதனை, ஞான போதனை இவற்றையும் பரிபூரணமாக ராமகிருஷ்ணரிடம் அப்பியசித்து அவராகவே ஆகிவிடுவதற்குத்தான் சாரதை இப்போது தக்ஷிணேசுவரத்துக்கு வந்திருக்கிறாள். 'தான் அறப்பெய்யும் முகில்'போல், தனது

ஆத்ம பூரணத்துவத்தை அவளுள் பொழியவே ஆர்வத்துடன் முன்வந்தார் கருணை முகிலாம் ராமகிருஷ்ணர்.

இத்துணை அன்பும், பரிவும், கரிசனமும் உள்ளவர் ஏன் நாலாண்டுகள் அவளைச் சோதித்தார்? இதற்கு பாகவதத்தில் விடை காண்கிறோம்.

'ராஸக் கிரீடைக்கு முன்பு கண்ணன் திடுமெனக் கோபியரிடமிருந்து பிரிந்து சென்று அவர்களை அழஅழ வைக்கிறான். பிறகே தரிசனம் தருகிறான். அவனை இழந்து விட்டுப் பிறகு பெற்றதில் அவர்களது ஆனந்தம் அளவுகடந்து போகிறது. ''அன்புப் பெண்களே, ஓர் ஏழை புதையல் கண்டெடுத்துவிட்டு, அதன்பின் அதனை இழந்தால் அவனுக்குப் புதையலைத் தவிர வேறெந்த சிந்தையுமின்றி அதையே எண்ணுவான் அல்லவா? அவ்வாறே ஜீவராசிகள் என்னை ஆழ்ந்து தியானம் செய்ய வேண்டும் என்பதற்காகவே என் தரிசனத்தை மறைத்து விலகியும் போவேன்'' என்கிறான் கண்ணன்.

கோபிகைகளை அவன் நாலு யாமம் கூடக் காக்க வைக்கவில்லை; சாரதையையோ நாலு வருடம் காக்க வைத்து விட்டார்! சரீர விரகம் வேறு, ஆத்ம விரகம் வேறல்லவா? 'பிரிந்திருக்கிறோம் என்று தவிக்கும்போதே, 'இதில் பிரிவேது' என்ற ஞானமும் உள்ளூறத் தோய்ந்து நிற்பதல்லவா ஆத்ம விரகம்?

எத்தனை கலக்கத்துக்குள்ளும் ஒரு தெளிவு சாரதைக்கு உண்டு என்று முன்னரே கண்டிருக்கிறோம் அல்லவா? அந்தத் தெளிவினால்தான் நாலு வருடத்தில் பிரிவுத் துயர், பாசத் துயர், உடல் நோய், உளநோய் அனைத்தையும் தாங்கிக் கொண்டு, இப்போது புத்தம் புது புஷ்பமாக ராமகிருஷ்ணரின் சரண மலரில் வந்து விழுந்துவிட்டாள்!

"படுக்கப் போகிறேன்'' என்று கிளம்பினாள் சாரதை.

அவளுடன் வந்தவர்கள், நஹவத் என்ற சங்கீத மண்டபத்திலும், கோயிலைச் சூழ்ந்த மற்ற இடங்களிலும் தங்கியிருந்தார்கள். நஹவத் மாடியில்தான் ராமகிருஷ்ணரின் தாயான சந்திராமணி தேவி வசித்து வந்தாள். சாரதையும் இரவை அங்கு கழிக்கவே புறப்பட்டாள், உடல் தடுமாற. ''அம்மா, நீ உடம்பு பூரணமாகக் குணமாகிறவரைக்கும் இங்கேயே தங்கியிருக்கலாம். நஹவத் ரொம்ப நெரிசலாக இருக்கும். அங்கே நீ ஒய்வு எடுத்துக்கறதுக்கும், வைத்தியர் வந்து பார்க்கறதுக்கும் சிரமமாயிருக்கும். உன்கூடப் பல பேர் வந்திருக்கிறார்களே, அதுலே யாராவது ஒரு கிழவியைக் கூட வைச்சுண்டு நீ இங்கேயே இருந்துவிடு'' என்றார் ராமகிருஷ்ணர்.

மறுக்க முடியாத அன்புக் கட்டளை.

அதன்படியே கிழவி ஒருத்தியின் 'துணை'யுடன் கணவரது அறையில் அந்த இரவு சயனம் கொண்டாள் சாரதை. வேகங்கள் புயலாகப் புழுதி வீசுகிற இதயங்களிலெல்லாம் அமிருத விந்துக்களைத் தெளித்துப் புழுதியை அடக்கும் அற்புதத் தம்பதி!

''அடடா, உன் சாப்பாட்டுக்கு ஏற்பாடு பண்ணவே இல்லையே. ஹ்ருதே, மாமிக்கும் கூட வந்திருக்கறவாளுக்கும் அம்பாள் பிரசாதம் இருக்கா பாரு'' என்றார் ராமகிருஷ்ணர்.

''மணி பத்தாகிறதே, மாமா! பிரசாதமெல்லாம் தீர்ந்து போச்சு'' என்று கூறிய ஹ்ருதயராம் அவலைக் கொண்டுவந்து கொடுத்தார்

மறு நாள் காலை வைத்தியரை வரவழைத்தார் ராமகிருஷ்ணர், சாரதையின் சிகித்சைக்கு. வைத்தியம் இரண்டாம்பட்சம்தான், ராமகிருஷ்ணரின் அன்பான கவனிப்பே சாரதைக்கு நாலு நாட்களில் பூரண ஆரோக்கியம் கொடுத்து விட்டது.

உடல் சூடு முற்றும் குறைந்தது. 'தண்ணென்றிருந்ததடி, புதிதோர் சாந்தி பிறந்ததடி' என்றாயிற்று. மனத்தில் மண்டி எரிந்த புனித விரகத் தீயும் தணிந்தது. அதைவிட முக்கியமாக, விராகத் தீயும் அணைந்தது. காமார்புகுரில் சாரதையின் பிள்ளை ஆசை கொழுந்து விட்டபோது அதனை நிர்தாட்சண்யமாகச் சமனம் செய்த ராமகிருஷ்ணர் எவரிடமும் பாசமே வைக்காமல் விராகியாகுமாறு அவளைப் பணித்தாரல்லவா? எல்லோரையும் தன் அன்பில் முழுக்கடிக்கும் அவளுக்கு எவரிடமுமே பாசம் உண்டாகாமல் விராகமாயிருப்பது சாத்தியமில்லைதான். ஆயினும் ராமகிருஷ்ணரின் வாக்கு முகூர்த்தம், அந்தச் சாத்தியமற்றதும் நடைமுறையாகக்கூடிய சூழ்நிலை ஜயராம்பாடியில் ஏற்பட்டது. தன் கணவரைப் பைத்தியம் என்றே கூறித் தனது இதயத்தை அனைவரும் புண்படுத்திய சூழ்நிலையில் சாரதாமணியின் பாச ஊற்றும் வற்றியது. பரம விராகியாக, யந்திர கதியில் காரியங்களைச் செய்து வந்தாள். இந்த நாலாண்டுகளில் அநுபவித்த விரகமும், விராகமும் அவளது ஞான வாழ்வின் மறுமலர்ச்சிக்கு அற்புத அடிப்படை ஆயின. சில செடிகள் நன்றாகத்

துளிர்த்து வருகிற வரையில் வேர் நனைய நீரை நிறைய ஊற்றுவார்கள். பிறகு சிறிது நாள் ஒரேயடியாகக் காயப்போடு வார்கள். மறுபடி நீர் ஊற்றுவார்கள். காமார்புகுரில் அன்பு மழை பொழிந்த ராமகிருஷ்ணர் அதன் பின் நான்கு ஆண்டுகள் சாரதையைக் காயப்போட்டார். இப்போது காய்ச்சல் அனைத்தும் தீர்ந்தது. உடல் காய்ச்சலும், விரகக் காய்ச்சலும் தீர்ந்ததோடு, அவளது விராகக் காய்ச்சல் தீர்ந்ததே அதுவே நமக்கு முக்கியம்! ஆம், அவள் இனி அம்மா ஆகப் போகிறாள்! ராமகிருஷ்ணர் விரும்பியபடியே, சரீர சம்பந்த மற்ற குழந்தைகளை எங்கெங்கும் காணும் ஸ்ரீமாதாவாகப் போகிறாள்!

'ஸ்ரீமாதா ஸ்ரீமஹாராக்ஞி' என்று தொடங்குகிறது லலிதா சஹஸ்ரநாமம். ஸ்ரீமாதாவைச் சொல்லி, அதையடுத்து, அந்த அம்மாவின் சாம்ராஜ்யம் அகில மெல்லாம் பரவியிருக்கிறது என்கிறது. பொன்மலை முடியிலுள்ள ஸ்ரீபுரத்தைத் தலைநகராகக் கொண்டது அந்த மகா சாம்ராஜ்யம். நம் எளிய ஸ்ரீமாதா சிறிய தக்ஷிணேசுவரத்தின் சின்னஞ் சிறிய 'நஹவத்' தலைநகரத்திலிருந்து கொண்டு தனது அன்பு ஆட்சியைத் தொடங்கப் போகிறாள்!

உடல் நன்கு ஆரோக்கியம் பெற்ற வுடன் நஹவத்துக்குப் போய்விட்டாள்.

நஹவத் அடித்தள அறை சாரதைக்கு ஒதுக்கப்பட்டது. அந்த அறை மிகவும் குறுகிய இடம். அதில் ஏகப் பட்ட கண்டான் முண்டான் வேறு. ராமகிருஷ்ணரைப் பார்க்கக் கல்கத்தாவி லிருந்து ஏராளமானவர் வந்து கொண் டிருப்பாராதலால் பர்தாப் பெண்ணான சாரதை அந்த இருட்டறைக்கு வெளியி லேயே தலைகாட்ட முடியாது. இவை எல்லாவற்றையும்விட அங்கே குளிப்ப தற்கும், இயற்கை அழைப்புக்களை நிறை வேற்றவும்கூட வசதியில்லை. புலரு முன்பே இந்தக் காரியங்களைக் கங்கையில் முடித்துக் கொண்டால்தான் உண்டு.

தன் செல்வ மகள் அங்கு படுகிற கஷ்டம் ராமசந்திரருக்குச் சிரமமாக இருந்தது. அவளும் மாப்பிள்ளையும் உலக ரீதியில் குடித்தனம் நடத்தப் போவதில்லை என்றும் அவருக்கு நிச்சய மாயிற்று. எனவே ''ஊருக்குப் போக லாமா?'' என்றார் மகளிடம்.

''போய் வாருங்கள்!'' என்று தீர் மானமாகப் பதில் சொன்னாள் தேவி.

கற்பு என்பது சௌகரிய, அசௌக ரியங்களையா கவனிக்கும்? பிறந்த மண்ணை, சொர்க்கத்துக்கும் மேலே என்று சொல்லித் தலையிலே தரித், ாள். கணவன் அருகே இருக்கிறான் என்றால் அந்த இடம் சொர்க்கத்தின் மேலுக்கும் மேலே அல்லவா?

ராமசந்திரர் தனியாக ஜயராம்பாடி திரும்பினார். சியாமசுந்தரி ஆனந்த சோகக் கண்ணீருடன் அவரை வரவேற்றார்.

''மகள் என்பவள் பிறனுடைய சொத்துத்தான். சகுந்தலையைக் கணவனிடம் அனுப்பிய பின் அந்நியச் சொத்தை வைத்துக் காப்பாற்றி அதை உரிமையாளரிடம் திருப்பிய பின் ஏற் படும் திருப்தி பிறக்கிறது'' என்று சாகுந் தலத்தில் கண்வ மகரிஷி சொன்னார் அல்லவா? அந்தத் திருப்தி ஏற்பட்டது ராமசந்திரருக்கும் சியாமசுந்தரிக்கும்.

சாரதையின் பதி சுசுருஷை வாழ்வு மீண்டும் தொடங்கியது. அதோடு, மாமியாரின் சுசுருஷையும் சேர்ந்தது. ராமகிருஷ்ணரைத் தேடிவரும் அடியார் களுக்கான சுசுருஷைகளையும் தொடங் கினாள் — அதாவது ஒரே சமயத்தில் மனைவி, (மாற்றுப்) பெண், அன்னை மூன்றுமாகத் தொடங்கினாள். ஆனால் மனைவி என்று இல்லற இன்பம் கேட்க வில்லை; பெண் என்று சலுகை கேட்க வில்லை; அம்மா என்று அந்தஸ்து கேட்க வில்லை. மனைவியாக, பெண்ணாக, அம் மாவாக அன்புடன் உழைக்க மட்டுமே செய்தாள். இந்த மூன்று உறவுகளுக்கு ஆதாரமா யிருந்தது இன்னோர் உறவு! குரு—சிஷ்ய உறவே அது!

கணவரிடம் போதனையை மீளப் பெறத் தொடங்கினாள் சாரு. முன்பு விவரம் தெரியாத பெண்ணாக இருந் தாள். இப்போது நாலு வயது கூடி விட்டதால் சுற்றுப்புறம் இப்படிப்பட்டது, சூழ்ந்துள்ளவர்கள் இப்படிப்பட்ட வர்கள் என்பதையெல்லாம் அவள் எடை போட்டு உணர முடியுமல்லவா? எனவே, அவளுக்கு முதல் உபதேசமாக, ''எதைச் சொன்னாலும், எதைச் செஞ் சாலும் எந்தச் சமயத்திலே அதைப் பண்ணறோம், எந்த இடத்திலே அதைப் பண்ணறோம், யாரைக் குறிச்சு அதைப் பண்ணறோம்ங்கிற மூணு அம்சத்தையும் கவனிச்சு, அதுக்கெல்லாம் இசைவான மாதிரியே பண்ணணும். மநுஷ்ய வாழ்க் கையிலே இதுதான் ரொம்பப் பெரிய பாடம். தர்மம், பிரேமை என்கிற ஆதாரத்தை மாற்றிக்காமலே, அதுக்கு மேலே எழுப்பற பேச்சையும், காரியத் தையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றாப்போலே சரி செஞ்சுக்கணும்'' என்றார் பதி.

அந்த உபதேசத்தின் உண்மை விளக்கமாகவே இதன் பின் அமைந்தது அம்மாவின் வாழ்க்கை. (தொடரும்)



அலை ஓசை — வாசகர்களின் வரவேற்பு

'கல்கி' அவர்கள் அமரத்துவம் அடைந்து பதினேழாண்டுகள் ஆகின்றன. எனக்கும் பதினேழு வயதுதான் ஆகிறது.

'அலை ஓசை' பிரசுரமாகப் போகிறது என்று கேட்டு ஆனந்த வெள்ளத்தில் மூழ்கினேன்.

தில்லி — 22
7—12—71 லக்ஷ்மி

★

பொங்கல் இதழிலிருந்து கல்கியில் 'அலை ஓசை' மறுபடியும் வருவது அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

பம்பாய்-74 லலிதா, மீனு, கல்பகம்,
6 - 12 - 71 சாரதா, சரஸ்வதி, ஜயஸ்ரீ

★

கல்கி வாசகர்களுக்காகத் தாங்கள் அளிக்கும் ஈடு இணையற்ற பொங்கல் பரிசான அலை ஓசையின் நாதத்தைக் கேட்க, இப்போது முதலே ஆவலோடு காத்திருக்கிறோம்.

திருவனந்தபுரம்
6 — 12 — 71 எஸ்.எஸ்.மணி

★

'அலைஓசை' பல வருடங்களுக்கு முன்பு வெளியானபோது ஓவியர் சந்திரா அவர்களின் படங்களில் பார்த்த கதா பாத்திரங்களின் உருவங்கள் என் மனத்தில் அச்சடித்தது போல் பதிந்துவிட்டன.

புது தில்லி — 11
10—12—71 எஸ். விஜயா

★

பொன்னியின்செல்வன் முடியப் போகிறதே என்று வருத்தப்பட்டேன். 'அலைஓசை' ஆரம்பமாகப் போகிறது என்பதை அறிந்ததும் அந்த வருத்தம் ஓடிவிட்டது. பொன்னியின் செல்வன் காரணமாய்க் கல்கியின் விற்பனை எண்ணிக்கை 30,000 கூடியது என்று சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் ''அலை ஓசை'' ஆரம்பமாகும் போது 50,000 பிரதிகள் மேலும் கூடும் என்பது நிச்சயம்.

ஹைதராபாத் — 44
4 — 12 — 71 எஸ். தியாகராஜன்

★

அமரர் 'கல்கி'யின் அலைஓசை மீண்டும் கல்கி இதழ்களில் பரிமளிக்கப் போகிறது என்ற அறிவிப்புக் கண்டு பெரும் மகிழ்ச்சி கொண்டேன். காலத்தால் அழியாத இவ்விலக்கிய நவீனத்துக்காக முகப்பில் வரையப்பட்டிருந்த (5—12—71) சித்திரம் கண்டு விவரிக்க முடியாத உணர்ச்சி வசப்பட்டேன். அமரர் 'கல்கி'யைத் தத்ரூபமாகக் காணும் பாக்கியத்தை அளித்த திரு நடராஜனுக்குப் பாராட்டுக்கள்.

பெங்களூர் — 5
3—12—71 குமார்

★

அமரர் கல்கி அவர்களுடைய 'அலைஓசை' நாவல் மீண்டும் தொடராக வெளிவரும் செய்தி கண்டு பெருமகிழ்வு பெறுபவர்களில் யானும் ஒருவன். காலத்துக் கேற்பப் புதுமை செய்யும் போதே ஆன்மீகத்தினின்றும் பழைமையிலிருந்தும் கல்கி நெறி பிறழாமல் இருக்கும் நிலை கண்டு பெருமைப்படுகிறோம்.

திருப்பூர் — 1
3 — 12 — 71 கி. பீமராவ்

★

நான் அமரர் கல்கியின் 'பொன்னியின் செல்வன்' ஆரம்பித்த அன்று கல்கி வாங்க ஆரம்பித்தேன். இக்காவியம் விரைவில் முடியப் போகிறதே என்று வருத்தப்பட்டேன். மீண்டும் அமரர் கல்கியின் 'அலை ஓசை' ஆரம்பமாக இருக்கிறது என்ற விளம்பரம் பார்த்து எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டேன்.

எஹர்
4 — 12 — 71 ம. இராசேந்திரன்

★

மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்ட நானும் என் தோழியரும், பொன்னியின் செல்வனைப் படிப்பதற்காகவே தமிழ் கற்றோம். அந்த நாவலை இரண்டாம் முறையாக வெளியிட்டதற்காக எங்கள் மனமார்ந்த நன்றி. கல்கியின் நாவல் அலை ஓசை வெளிவந்தபோது நாங்களெல்லாரும் 5, 6 வயதுள்ள குழந்தைகள். பேராசிரியர் கல்கியின் மற்றொரு நாவலை வெளியிட முன் வந்ததற்கு, எங்கள் ஆவலைப் பூர்த்தி செய்ததற்கு நன்றி.

சென்னை
1 — 12 — 71 குமாரி உஷா சங்கர்

★

அமரர் கல்கியின் 'அலைஓசை' மீண்டும் தொடராக வெளிவருவது கண்டு மகிழ்ந்தேன். அவர் படைப்புக்களை அதிகம் படித்திராத என் போன்ற இளம் தலைமுறையினருக்கு இது ஒரு வரப்பிரசாதமாகும்.

பெங்களூர் — 2
8 — 12 — 71 இமயன்



பொன்னியின் செல்வன்

அமரர் கல்கி

அத்தியாயம் எண்பத்திரண்டு

சீனத்து வர்த்தகர்கள்

ஆதிகாலத்திலிருந்து பற்பல தேசங்களிலும் மக்கள் வருங்கால நிகழ்ச்சிகளைப் பற்றி அறிவதற்குப் பிரயத்தனங்கள் செய்து வந்திருக்கிறார்கள். ஏழை எளியவர்களையும் படிப்பில்லாத பாமர மக்களையும் போலவே அரச குலத்தவர்களும் புலமைமிக்க அறிவாளிகளும் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்க முயன்றிருக்கிறார்கள். சோதிட சாஸ்திரிகள், ஆருடக்காரர்கள், நிமித்தங் கூறுவோர், குறி சொல்லுவோர், ரேகை பார்ப்போர் முதலியவர்கள் கல்வியறிவிலும் நாகரிகத்திலும் சிறந்த சமூகங்களிலும் பல்கிப் பெருகியிருந்திருக்கிறார்கள். அதைப் போலவே, சோதிட சாஸ்திரத்தின் உண்மையைப் பற்றிச் சந்தேகித்து அந்தக் கலையையே கண்டனம் செய்தவர்களும் இருந்து வந்திருக்கிறார்கள்.

அறிவிற் சிறந்த மங்கையர் திலகமான இளையபிராட்டி குந்தவையின் உள்ளத்திலும் இத்தகைய போராட்டம் அடிக்கடி எழுந்துகொண்டிருந்தது. ஆயினும் சோழ சாம்ராஜ்யத்தின் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப்பட நேர்ந்த போதெல்லாம், அந்தக் கவலை குந்தவை தேவியைச் சோதிடர் வீட்டைத் தேடிப் போகும்படி செய்தது.

நியாயமாகப் பார்க்கப் போனால், இப்போது குந்தவையின் உள்ளம் சுந்தர சோழச் சக்கரவர்த்தி பெற்றிருந்த மன அமைதியைப் பெற்றிருக்க வேண்டும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் என்னென்னவோ நேர்ந்து, அருள்மொழிவர்மர் சோழ சிங்காதனம் ஏறி முடிசூட்டிக் கொள்வது நிச்சயமாகிவிட்டது. பின்ளைப் பிராயத்திலிருந்து குந்தவை தன் இளைய சகோதரனிடம் கொண்டிருந்த

எல்லையில்லா வாஞ்சையை நாம் அறிந்திருக்கிறோம். கரங்களில் சங்கு சக்கர ரேகைகளுடன் பிறந்த அருள்மொழி வர்மனால் சோழப் பேரரசு மகோந்நதத்தை அடையப் போகிறது என்று அவள் உள்ளத்தில் பலமான நம்பிக்கை குடிகொண்டிருந்தது. காவேரி வெள்ளத்தில் தவறி விழுந்தவனை, தெய்வமே போன்று வந்த பெண்மணி ஒருத்தி எடுத்துக் காப்பாற்றிய நிகழ்ச்சியும் இன்னும் இது போன்ற வேறு பல சம்பவங்களும் அவளுடைய நம்பிக்கையை மேலும் மேலும் வலுவடையச் செய்து வந்தன. அந்த நம்பிக்கை மெய்யாகும் காலம் இப்போது நெருங்கி வந்திருந்தது. ஆனாலும் அந்த அரசிளங் குமாரியின் உள்ளத்தில் இன்னமும் அமைதி ஏற்படாமற் போன காரணம் என்ன?



அருள்மொழிவர்மனைப் பற்றிக் கூறியது போலவே கொடும்பாளூர் இளவரசி வானதியின் ஜாதக விசேஷத்தைப் பற்றியும் பலர் கூறி வந்தார்கள். உண்மையாக நாளையும் கோளையும் ஆராய்ந்து வருங்காலத்தை உணர்ந்துதான் கூறினார்களோ, அல்லது அச்சமயம் குந்தவை தேவிக்கு உகப்பாக இருக்கட்டும் என்றுதான் சொன்னார்களோ தெரியாது. ஒருமுகமாகப் பலர் சேர்ந்து கூறும் வாக்கு சில சமயம் அதிசயமாக உண்மையாகிவிடுவதைப் பார்க்கிறோம். இன்னும் சிலருடைய வாக்கிலேயே ஏதோ விசேஷம் இருக்கிறது. அவர்கள் சொன்னது சொன்னபடி பலித்து விடுகிறது.

குடந்தையிலிருந்து திருவையாற்றுக்கு வந்து குடியேறிய சோதிடர், அன்றைக்கு மார்கழி மாதத் திருவாதிரை நாள் என்பதை நினைவு கூர்ந்து, ''சோழ குலத்துக்கு மிக்க சிறப்பை அளிக்கப் போகும் நன்னாள் அது!'' என்று சற்று அழுத்தமாகக் கூறி வைத்தார்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு அதே மார்கழித் திருவாதிரையில் சோழர் குலத்தில் ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. அந்தக் குழந்தை வளர்ந்து உரிய பிராயம் அடைந்தபோது, சந்திர குப்தன், அசோகன், விக்ரமாதித்தன், ஹர்ஷவர்த்தனன் ஆகியவர்களுடன் ஒப்பிடக்கூடிய சக்கரவர்த்தியாக விளங்கினான். இராஜேந்திரன் என்ற அபிஷேகப் பெயர் பெற்று இலங்கை முதல் கங்கை வரையில் லட்சத் தீவு முதல் ஸ்ரீ விஜயத் தீவு வரையில் வெற்றி கொண்டு ஆணை செலுத்தினான்.

ஜோசியர் கூறிய வார்த்தை இவ்விதம் அதிசயமான முறையில் பின்னால் பலித்துவிட்டது. ஆனால் அன்றைக்கு அவர் அவ்விதம் கூறியபோது குந்தவைக்கு அதில் பூரண நம்பிக்கை ஏற்படவில்லை. வானதிக்கோ சோதிடரின் வார்த்தைகள் கோபத்தையே உண்டாக்கின. அந்தக் கோபத்தை உடனே காட்டுவதற்கு ஒரு வழியும் ஏற்பட்டது.

சோதிடச் சுவடியைத் தூக்கி அந்தப் பெண்ணரசி பூனையின் மேல் எறிந்து விட்டு, ''சோதிட சாஸ்திரத்துக்கும் உபயோகம் உண்டு!'' என்று கூறினாள்.

அதைக் கேட்ட சோதிடர் திரும்பிப் பார்த்து விஷயம் இன்னதென்பதைத் தெரிந்துகொண்டு, ''இளவரசி! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பார்கள். அதுபோல் தங்கள் திருக் கரம் பட்ட மகிமையினால் இந்த ஓலைச் சுவடியும் ஓர் உயிரைக் காப்பாற்றியது. வருங்காலத்தில் எத்தனை எத்தனையோ உயிர்களுக்கு அபயம் அளித்துக் காப்பாற்றப் போகும் மலர்க் கரம் அல்லவா?'' என்றார்.

வானதி, ''அக்கா! இந்தச் சோதிடர் முகஸ்துதி கூறுவதில் மிகவும் கெட்டிக்காரர். வாருங்கள், போகலாம்!'' என்றாள்.

''தேவி! இன்றைக்கு நான் சொல்லும் வார்த்தைகள் தங்களுக்குப் பிடிக்கவில்லை. ஒரு காலத்தில் நான் கூறியவையெல்லாம் உண்மையாகியே தீரும். அப்போது இந்த ஏழையை மறந்துவிடாதீர்கள்!'' என்றார் சோதிடர்.

குந்தவைப் பிராட்டி குறுக்கிட்டு, ''ஐயா! இந்தப் பெண்ணுக்குத் தங்கள் வார்த்தைகள் பிடிக்காமலில்லை. கேட்கக் கேட்க இவள் மனத்துக்குள் சந்தோஷமாக இருக்கிறது. ஆனால் 'யோசனையில்லாமல் ஏதோ ஒரு சபதம் செய்து விட்டோமே' என்று ஆத்திரப்படுகிறாள்! அந்த ஆத்திரத்தைத் தங்கள் ஓலைச் சுவடியின் பேரில் காட்டினாள்! அதைத் தாங்கள் பொருட்படுத்த வேண்டாம்!'' என்று கூறினாள்.

''நல்லவர்களுக்கு வரும் ஆத்திரமும் நல்ல பயனையே அளிக்கும்! தங்களை இனிய மொழியால் அழைத்த என் அருமைக் கிளி பிழைத்தது அல்லவா?'' என்றார் சோதிடர்.

பின்னர் குந்தவை சோதிடரிடம் இன்னும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தாள். முக்கியமாக அருள்மொழிவர்மருக்குத் திருமணம் எப்போது நடக்கும் என்று கேட்டாள். அதைப் பற்றி இளையபிராட்டி குந்தவைக்குக் கவலை ஏற்படக் காரணம் இருந்தது.

ஏனெனில், நேற்றைய தினம் சேநாதிபதி பூதிவிக்கிரமகேசரி இளைய பிராட்டியிடம் வந்து, ''தாயே! நான் கொடும்பாளூர் போகிறேன். என் சகோதரன் மகள் வானதியையும் அழைத்துச் செல்லலாம் அல்லவா?'' என்று கேட்டார்.

குந்தவை திடுக்கிட்டு, ''மாமா! இது என்ன அவசரம்? பட்டாபிஷேகத்துக்கு இல்லாமலா போகிறீர்கள்?'' என்றாள்.

''தாயே! பட்டாபிஷேகத்தின்போது வந்து விடுவேன். அது வரையில் இங்கு ஏன் காத்திருக்க வேண்டும்? நான் வரும்போது பெரும் சைன்யத்துடன் வந்தேன். தெய்வாதீனமாக, நம்முடைய மனோரதம் சண்டை ஒன்றுமில்லாமலே நிறைவேறுவதாகிவிட்டது. சக்கரவர்த்தித் திருமகன் முடிசூட இணங்கிவிட்டார். அதை எல்லாச் சிற்றரசர்களும் ஒப்புக் கொண்டு விட்டார்கள். இனி இவ்வளவு பெரிய சைன்யத்தை இங்கு வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இவ்வளவு பேருக்கும் உணவு அளித்து நிர்வகிப்பதும் தஞ்சை நகரத்தாருக்குச் சிரமமாக இருந்து வருகிறது. ஆகையினால் என் சைன்யத்தை அழைத்துப் போய் அங்கங்கே பிரித்து விட்டு விட்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது!'' என்றார் சேநாதிபதி.

''அப்படியே செய்யுங்கள்! ஆனால் என் தோழி வானதியை எதற்காக அழைத்துப் போக வேண்டும்?'' என்று கேட்டாள் குந்தவை.

''தேவி! அதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. நேற்று சிற்றரசர்களாகிய நாங்கள் எல்லாரும் கூடி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். தங்கள் பாட்டனார் அரிஞ்சய தேவரின் தந்தையாகிய பராந்தக சக்கரவர்த்தி பெண்ணரசிகள் அறுவரை மணந்திருந்தார். என்னுடைய குலத்திலிருந்தும், மிலாடுடையார் குலத்திலிருந்தும், பழுவேட்டரையர், மழவரையர், சம்புவரையர் குலங்களிலிருந்தும் ஒவ்வொரு பெண்ணை மணந்து கொண்டிருந்தார். ஆகையால்

அவருடைய காலத்தில் சிற்றரசர்களிடையில் பூசல் ஏதும் இல்லாமலிருந்தது. தங்களுடைய பாட்டனார் அரிஞ்சயரும் அவ்வாறே பல சிற்றரசர் குலப் பெண்களை மணந்து கொண்டார். அவர் வெற்றிகொண்ட வைதும்பராயர் குலத்திலிருந்து தங்கள் பாட்டியாரை மணந்து கொண்டார். ஆனால் தங்கள் தந்தை இந்த நல்ல வழக்கத்தை அனுசரிக்கவில்லை. தங்கள் அன்னையாகிய மலையமான் மகளாரை மட்டும் மணந்தார். அதனால் சிற்றரசர்களுக்குள்ளே பொறாமையும் பூசலும் விளைந்தன. இனி, இந்தச் சோழ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கொள்கிறவர்கள் பராந்தக சக்கரவர்த்தியையும் அரிஞ்சய தேவரையும் போல் பல சிற்றரசர் குலங்களிலிருந்தும் பெண் கொள்ள வேண்டும் என்று நேற்றைக்கு ஏகமனதாக முடிவு செய்திருக்கிறோம். பொன்னியின் செல்வரின் முடிசூட்டு விழா நடந்த பிற்பாடு அவரிடம் இவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்ள எண்ணியிருக்கிறோம். வானதியை ஏன் ஊருக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன் என்று தாங்கள் ஊகித்துக் கொள்ளலாமே? அவளை இங்கே விட்டிருந்தால் நான் உடன்படிக்கைக்கு விரோதமாக நடக்கப் பார்க்கிறேன் என்று மற்றவர்கள் சந்தேகிக்கக் கூடும்!'' என்றார் கொடும்பாளூர் வேளார்.

இதைக் கேட்ட குந்தவைக்கு உள்ளத்தில் பெரிதும் ஆத்திரம் உண்டாயிற்று. அதை அவள் வெளிக்காட்டிக் கொள்ளாமல் ''சேநாபதி! அன்னை தந்தையை இழந்த தங்கள் தம்பி மகளுக்கு நானே தந்தையும் தாயுமா யிருக்க வேண்டும் என்று முன்னொரு சமயம் கேட்டுக் கொண்டீர்கள். அதை மறந்துவிட்டீர்களா? வானதியைக் கொடும்பாளூருக்கு அனுப்ப முடியாது. அவளை விட்டுக் கண நேரமும் என்னால் பிரிந்திருக்க இயலாது. நான் வேண்டுமானால் வானதியையும் அழைத்துக் கொண்டு பழையாறைக்குப் போய் விடுகிறேன். முடிசூட்டு விழாவுக்குக்கூட வராமல் அங்கேயே இருந்துவிடுகிறோம். கல்யாணத்தைப் பற்றிய பேச்சே இப்போது வேண்டாம். பட்டாபிஷேகம் ஆன பிறகு சிற்றரசர்களின் விருப்பத்தைப் பொன்னியின் செல்வரிடம் சொல்லுங்கள்! பிற்பாடு பார்த்துக் கொள்ளலாம்!'' என்றாள்.

சேனாதிபதியும் அதை ஒப்புக் கொண்டு போய் விட்டார்.

குந்தவை தேவி சோதிடரைத் தேடிக் கொண்டு வருவதற்கு இது ஓர் அதிகப் படியான காரணம் ஆயிற்று. ஆகையினாலேயே பொன்னியின் செல்வரின் திருமணத்தைக் குறித்து அவ்வளவு கவலையுடன் சோதிடரிடம் கேட்டாள்.

அதே சமயத்தில் வானதியின் நினைவு பழையதொரு சம்பவத்துக்குப் போயிருந்தது. அதிலும் ஒரு பறவையும் பூனையும் பாத்திரங்களாயிருந்தன. பூனையுடன் ஒரு யானையும் யானைப் பாகனும் அதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள்.

மரக் கிளையிலிருந்து தொங்கிய ஒரு பறவையின் கூட்டை அந்தக் காட்டுப் பூனை தாக்கி அதிலிருந்த பறவைக்குஞ்சுகளைக் கபளீகரம் செய்ய முயன்றது. தாய்ப் பறவை கூட்டைச் சுற்றி வந்து பூனையைத் தடுக்கப் பார்த்தது. வானதி அதைக் கண்டு செய்வதறியாது அலறினாள். நதியில் நீந்திக் கொண்டிருந்த இளைஞன் ஒருவன் ஓடி வந்து பார்த்தான். பிறகு அவன் விரைந்து சென்று ஒரு யானையின் மீது ஏறி வந்தான். பறவைக் கூண்டையும் அதிலிருந்த பச்சிளங் குஞ்சுகளையும் அந்தக் காட்டுப் பூனையின் வாயிலிருந்து காப்பாற்றினான்.

அந்த இளைஞன் யானைப் பாகன் என்று வானதி அப்போது கருதினாள். பின்னால் அவன்தான் பொன்னியின் செல்வன் என்று தெரிந்தது. ஆகா! அவன் வெறும் யானைப் பாகனாகவே இருந்திருக்கக் கூடாதா? அல்லது சாதாரண வீரனாயிருந்திருக்கக்கூடாதா? அவன் சுந்தர சோழச் சக்கரவர்த்தியின் திருமகனாக இருப்பதால் அல்லவா தான் இத்தகைய தொல்லைகளுக்கு ஆளாக நேர்ந்தது? தன்னையொத்த தோழிமார்களும், பூங்குழலி போன்றவர்களும், சோழ நாட்டுப் பட்டத்தரசியாக விரும்பும் கள்ளநோக்கமுடையவள் என்று தன்னைப் பற்றி அவதூறு கூறும்படி நேர்ந்தது.......!

வானதி இத்தகைய நினைவுகளிலும் குந்தவை வருங் காலத்தைப் பற்றிச் சோதிடம் கேட்பதிலும் ஈடுபட்டிருந்த சமயத்தில், சோதிடரின் வீட்டுவாசலில் ''சீனத்துப் பட்டு வேண்டுமா? சீனத்துப் பட்டு!'' என்று பெருங் குரல் ஒன்று கேட்டது. வேறு குரல்களும் கேட்டன.

குந்தவையும் வானதியும் தாங்கள் வந்து நேரமாகி விட்டது என்பதை உணர்ந்து எழுந்தார்கள்.

அப்போது சோதிடரின் சீடன் உள்ளே வந்து, ''சுவாமி! சீனத்து வர்த்தகர்கள் இருவர் வந்திருக்கிறார்கள். தங்களிடம் சோதிடம் கேட்க வேண்டுமாம்! அவர்களை நாளைக்கு வரும்படி சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

குந்தவை, ''வேண்டாம்! இப்பொழுதே வரட்டும். நாங்கள் விடை பெற்றுக் கொள்கிறோம்'' என்று கூறிவிட்டு வானதியின் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு புறப்பட்டாள்.

இளவரசிகள் இருவரும் வாசலில் வந்தபோது, அங்கே ஒரு யானை நிற்பதையும் அதன் பேரில் இரண்டு சீன வர்த்தகர்கள் பெரிய துணி மூட்டைகளுடன் உட்கார்ந்திருப்பதையும் பார்த்தார்கள். கீழே நின்ற யானைப் பாகனிடம் அந்தச் சீனத்து வர்த்தகர்கள் ஏதோ கேட்டுக் கொண்டிருப்பதாகத் தோன்றியது.

அவர்கள் மீது அதிக கவனம் செலுத்தாமல் இளவரசிகள் தங்களுடன் வந்த வீரனை அழைத்துக் கொண்டு சோழ மாளிகை போய்ச் சேர்ந்தார்கள்.

அத்தியாயம் எண்பத்துமூன்று

அப்பர் கண்ட காட்சி

அன்று முன் இரவில் திருவாதிரைத் திருவிழாவை முன்னிட்டு ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் திருவையாற்றின் விசாலமான மாட வீதிகளில் திருவோலக்கம் எழுந்தருளினார்கள்.

வெள்ளிப்பனி மூடிய கைலயங்கிரியை நினைவூட்டுமாறு வெள்ளியினால் அமைத்த கைலாச வாகனத்தில் அன்று சுவாமியையும் அம்மனையும் அலங்கரித்து வீற்றிருக்கச் செய்திருந்தார்கள்.

ஊர்வலத்தின் முன்னணியில் யானைகளும், ஒட்டகங்களும், பெரிய பெரிய ரிஷபங்களும் சென்றன. அவற்றின் மீது ஏற்றியிருந்த பேரிகைகளும் முரசுகளும் எட்டுத் திசைகளும் எதிரொலி செய்யும்படி முழங்கின. அவற்றின் பின்னால் வரிசை வரிசையாகப் பல வகைத் திருச்சின்னங்களை ஏந்தியவர்கள் சென்றார்கள்.

விதவிதமான வாத்தியங்களை வாசித்தவர்கள் கோஷ்டி கோஷ்டியாகச் சென்றார்கள். நடன கணிகையர் ஆங்காங்கு நின்று நடனம் ஆடிவிட்டுச் சென்றார்கள். நந்தி பகவானும், சண்டிகேசுவரரும், விநாயகரும், வள்ளிதேவயானை

சமேதரரான முருகக் கடவுளும் தனித் தனி விமானத்தில் அமர்ந்து சென்றார்கள். கடைசியாக, பார்வதியும் பரமேசுவரனும் கைலாச வாகனத்தில் அமர்ந்து சேவை தந்துகொண்டு வந்தார்கள்.

இன்னும் பின்னால் தேவார கோஷ்டியினர் வீணை, மத்தளம், தாளம் முதலிய இசைக் கருவிகளுடன் அப்பரும் சம்பந்தரும் சுந்தரரும் பாடிய திருவையாற்றுத் திருப் பதிகங்களை இசையோடு பாடிக் கொண்டு நடந்து வந்தார்கள்.

முன்னாலும் பின்னாலும் ஆயிரமாயிரம் ஜனங்கள் வீதிகளை அடைத்துக்கொண்டு மெள்ள மெள்ள ஊர்வலத்தோடு போய்க் கொண்டிருந்தார்கள்.

ஜனங்கள் அவரவர்களுடைய மனப் போக்குக்கு ஒத்தபடி, சிலர் யானை ஒட்டகை முதலியவற்றைப் பார்ப்பதிலும், சிலர் வாத்திய கோஷ்டிகளின் கீதங்களைக் கேட்பதிலும், சிலர் தேவ கணிகையரின் நடனங்களைப் பார்ப்பதிலும், பெரும்பாலோர் திருவோலக்கம் வந்த தெய்வமூர்த்திகளைத் தரிசித்து பரவசமடைந்து துதிப்பதிலும் ஈடுபட்டிருந்தார்கள்.

கண்ணுக்கெட்டிய தூரம் முன்னும் பின்னும் நூற்றுக்கணக்கான தீவர்த்திகள் பிரகாசித்து அந்த அபூர்வமான தெய்வ ஊர்வலத்தை ஒரு கனவுலோகக் காட்சியாகச் செய்து கொண்டிருந்தது.

இந்தக் காட்சியைச் சோழமாளிகையின் மேன் மாடத்திலிருந்து குந்தவையும் வானதியும் பூங்குழலியும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். முதன் முதலில் வந்த முரசு சுமந்த யானைகளிலிருந்து கடைசித் தேவார கோஷ்டி வரும் வரையில் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தார்கள். பரவச நிலையிலிருந்த பக்தர்களையும் பலவித வேடிக்கைகளில் மனத்தைச் செலுத்தியிருந்த பாமர மக்களையும் பார்த்தார்கள். நந்தி தேவர் முதல் சிவன் பார்வதி வரையில் வீதி வலம் வந்த தெய்வ வடிவங்களையும் அவர்கள் தரிசித்து மகிழ்ந்தார்கள்.

அவ்வளவு ஜனக் கூட்டத்துக்கு மத்தியில் ஒரு யானையின் மீது இரண்டு சீன வர்த்தகர்கள் ஏறிக் கொண்டு வருவதையும், அவர்கள் அவ்வப்போது யானை மேலிருந்து கீழிறங்கி ஜனக் கூட்டத்தினிடையில் மறைந்து விடுவதையும், பிறகு மறுபடியும் வந்து யானை மீது ஏறிக் கொள்வதையும் கண்டார்கள்.

''ஆகா! இந்தச் சீனர்கள் இருவரும் உண்மையில் வர்த்தகர்களா? அல்லது அயல்நாட்டிலிருந்து வேவுபார்க்க வந்த ஒற்றர்களா?'' என்ற ஐயம் குந்தவையின் உள்ளத்தில் ஏற்பட்டது.

சோழ இராச்சியத்து அரசுரிமை சம்பந்தமாகச் சில நாளாக ஏற்பட்டிருந்த தகராறுகள் — குழப்பங்கள் பற்றிய

இக்கட்டான நிலை விடுபட்ட கலை!

நாடகக்கலையில் நீண்ட காலம் ஈடுபட்டுப் பல நல்ல நாடகங்களை டைரக்ட் செய்தும் நடித்தும் புகழ் பெற்றவர் 'சாம்பு' திரு என்.எஸ். நடராஜன். நாடக டைரக்டர் திரு என். எஸ். நடராஜன் தமக்கு ஏற்பட்ட இக்கட்டான நிலையொன்றை நினைவுகூர்கிறார்.

''திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சபாவில் 'சோ'வின் 'இப் ஐ கெட் இட்' நாடகத்தை டைரக்ட் செய்து கொண்டிருந்தேன். நாடகம் ஆரம்பிப்பதற்குப் பூஜை மணி ஒலித்து விட்டது. அப்பொழுது தான் அந்நாடகத்தில் சினிமா நடிகை வேஷத்தில் தோன்ற வேண்டிய கிருஷ்ணன் வந்துசேரவில்லை என்பதை என்னிடம் சொன்னார்கள். அம்பத்தூரில் ஒரு நிகழ்ச்சியில் ஐந்தரையிலிருந்து ஆறரை மணிக்குள் கலந்து கொண்டுவிட்டு, டாக்ஸியைப் பிடித்துக் கொண்டு நாடகம் நடக்கும் நேரத்துக்கு வந்துவிடுவதாகத் தம் சக நாடகத் தோழரிடம் சுருசுருவென்று அவர் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்று அப்பொழுதுதான் தெரிந்தது. ஆனால் குறித்த நேரத்துக்கு அவர் வர இயலவில்லை.

''நாடகத்தில் 'பிராம்ப்டர்' டயலாக் எடுத்துச் சொல்லிச்



சொல்லிப் பழக்கமானவர். ஆகவே 'அப்பா, பிராம்ப்டர்! புத்தகத்தை என்னிடம் கொடு. நான் அந்த வேலையைப் பார்த்துக் கொள்கிறேன். நீ சினிமா நடிகை வேஷத்தைப் போட்டுக் கொண்டு இன்றைய நாடகத்தைச் சமாளிக்க வேண்டும்' என்றேன். 'பிராம்ப்ட'ருக்கு ஒரே ஆனந்தம். ரொம்பவும் அலட்டிக் கொள்ளாமல் நாற்காலியைப் பிடித்துக் கொண்டே அன்று 'பிராம்ப்டர்' சினிமா நட்சத்திரமாக நடித்துச் சமாளித்துவிட்டார். எங்கள் குழுவின் நன்றிக்கு உரியவரானார். அன்று அவர் கைகொடுத்து உதவியதை என் வாழ்க்கையில் என்றும் மறக்க முடியாது!'' என்று நாடகத் துறையில் ஜாம்பவானான திரு என். எஸ். நடராஜன் கூறுகிறார்.

— குண்டுமணி



செய்திகள் உலகெங்கும் பரவியிருக்கக் கூடியது இயல்பேயாகும்.

அதை முன்னிட்டு, பகை அரசர்கள் இந்த ஒற்றர்களைச் சீனநாட்டு வர்த்தகர்களின் தோற்றத்தில் அனுப்பி வைத்திருக்கக் கூடும் அல்லவா ?

இதைப் பற்றிக் குந்தவையும் வானதியும் பேசிக் கொண்டிருந்தது பூங்குழலியின் காதில் விழுந்தது. அந்தப் பெண் 'தேவி! அவர்கள் கோயில் கோபுர வாசலில் என்னை அணுகிச் 'சீனத்துப் பட்டு வேணுமா?' என்று கேட்டார்கள். நான் அவர்களிடம் 'சோழ மாளிகைக்கு வாருங்கள்; தஞ்சையிலிருந்து இளவரசிகள் வரப் போகிறார்கள்; அவர்கள் ஒருவேளை வாங்குவார்கள் !' என்று சொல்லியிருக்கிறேன். ஆகையால் ஒருவேளை இங்கு வந்தாலும் வருவார்கள் ! உங்கள் சந்தேகத்தை நேரிலேயே கேட்டுத் தீர்த்துக் கொள்ளலாம் !'' என்றாள். அச்சமயம் கைலையங்கிரி வாகனத்தில் அமர்ந்திருந்த ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் சோழ மாளிகையின் வாசலுக்கு வந்திருந்தார்கள். அங்கே சுவாமியை நிறுத்தச் செய்து தீபாராதனை முதலியன நடந்தன. தெய்வ ஊர்வலத்துடன் வந்த செம்பியன் மாதேவியும் அவருடைய புதல்வரும் விமானம் அங்கிருந்து சென்ற பிறகு அரண்மனைக்குள் பிரவேசித்தார்கள். இளவரசிகள் மேன் மாடத்திலிருப்பதை அறிந்து அங்கேயே வந்து சேர்ந்தார்கள்.

உற்சவத்தின் சிறப்பைக் குறித்துச் சிறிது நேரம் சம்பாஷணை நடந்தது. பின்னர், சிவஞான கண்டராதித்தரின் தேவி தம் அருமை மகனைப் பார்த்து, ''குழந்தாய்! இந்தத் திருவையாற்றில் அப்பர் பெருமான் தாம் கண்ட காட்சியைப்பற்றி ஒரு பதிகம் பாடியிருக்கிறாரே! அதை நீ ஒருமுறை பாடு, கேட்கலாம்! தேவார கோஷ்டியார் பாடக் கேட்டது எனக்கு அவ்வளவாகத் திருப்தி அளிக்கவில்லை!'' என்றார்.

இளவரசிகளும், பூங்குழலியும் அந்தக் கோரிக்கையை ஆமோதித்தார்கள்.

பின்னர் சேந்தன் அமுதனாகிய மதுராந்தகத் தேவர் அந்தப் பதிகத்தைத் தமது இனிய குரலில் பாடினார்.

''மாதர் பிறைக் கண்ணியானை
மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப்
புகுவாரவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடுபடாமல்
ஐயாறு அடைகின்றபோது
காதன் மடப் பிடியோடுங்
களிறு வருவன கண்டேன்!
கண்டேனவர் திருப்பாதம்!
கண்டறியாதன கண்டேன்!''

இந்த அடியுடன் தொடங்கிப் பின் வரும் பத்து அடிகளையும் மதுராந்தகர் தம்மை மறந்த நிலையில் பாடினார்.

கேட்டுக் கொண்டிருந்தவர்களும் தங்களை மறந்திருந்தார்கள்; அன்று அப்பர் பெருமான் கண்ட காட்சிகளையெல்லாம் அவர்களும் கண்டார்கள்.

பாடல் முடிந்து சிறிது நேரம் வரையில் அங்கே மௌனம் குடிகொண்டிருந்தது. பின்னர், குந்தவை செம்பியன் மாதேவியைப் பார்த்து, ''அம்மா! அப்பர் இந்தப் பதிகம் பாடிய வரலாற்றை முன்னொரு முறை எனக்குச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது இன்னொரு தடவை சொல்லுங்கள்; இவர்களும் கேட்கட்டும்!'' என்றாள்.

மற்றவர்களும் வற்புறுத்திக் கேட்டதன் பேரில் பெரிய பிராட்டி செம்பியன் மாதேவி அந்த வரலாற்றைக் கூறினார்.

அப்பர் ஸ்வாமி பிராயம் முதிர்ந்து உடல் தளர்ச்சியுற்றிருந்த சமயத்தில் கைலையங்கிரிக்குச் சென்று இறைவனைத் தரிசிக்க விரும்பினார். நெடுந்தூரம் வடதிசை நோக்கிப் பிரயாணம் செய்தார். மேலே நடக்க முடியாமல் களைத்து விழுந்தார். அச்சமயம் ஒரு பெரியவர் அங்கே தோன்றி, ''அப்பரே! கைலையைத் தேடி நீர் எங்கே செல்கிறீர்? பொன்னி நதிக் கரையிலுள்ள திருவையாற்றுக்குச் செல்லுங்கள். பூலோக கைலாசம் அதுதான்!'' என்று அருளிச்செய்து மறைந்தார். அது இறைவன் வாக்கு என்று அறிந்த அப்பர்

திரும்பித் திருவையாறு வந்தார். அந்த ஸ்தலத்தை நெருங்கி வந்தபோதே அவருடைய உள்ளம் பரவசம் அடைந்தது. பல அடியார்கள் கையில் பூங்குடலையும் கெண்டியில் காவேரி நீரும் ஏந்தி ஐயாறப்பனைத் தரிசிப்பதற்காகச் சென்று கொண்டிருப்பதைப் பார்த்தார். அவர்கள் இறைவனுடைய புகழைப் பாடிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் பின்னால் அப்பரும் சென்றார். அப்போது திருவையாறு நகர்ப்புறத்தில் ஆணும் பெண்ணுமாக இரு யானைகள் வந்தன. அந்தக் களிறும் பிடியும் சிவமும் சக்தியுமாக அப்பருக்குக் காட்சி அளித்தன. ஆலயத்தை அடைவதற்குள் இவ்வாறு பல விலங்குகளையும் பறவைகளையும் ஆண் பெண் வடிவத்தில் அப்பர் பார்த்தார். கோழி பெடையோடு கூடிக் குலாவி வந்தது. ஆண் மயில் பெண் மயிலோடு ஆடிப் பிணைந்து வந்தது; அருகில் இருந்த சோலையில் ஆண் குயிலோடு பெண் குயில் பாடிக் களித்துக் கொண்டிருந்தது; இடிமுழக்கக் குரலில் முழங்கிக் கொண்டு ஏனம் ஒன்று அதன் பெண் இனத்தோடு சென்றது; நாரையும் அதன் நற்றுணையும் சேர்ந்து பறந்து சென்றன; பைங்கிளியும் அதன் பேடையும் பசுமரக் கிளைகளில் மழலை பேசிக் கொண்டிருந்தன. காளையும் பசுவும் கம்பீரமாக அசைந்து நடந்து சென்றன. இவ்வாறு ஆணும் பெண்ணுமாக அப்பர் சுவாமிகளின் முன்னால் தோன்றியவையெல்லாம் சிவமும் சக்தியுமாக அவருடைய அகக் கண்ணுக்குப் புலனாயின. உலகமெல்லாம் சக்தியும் சிவமுமாக விளங்குவதைக் கண்டார்.. ''இந்த உலகமே கைலாஸம்; தனியாக வேறு கைலாஸமில்லை'' என்று உணர்ந்தார். இத்தகைய மெய்ஞான உணர்ச்சியோடு மேலே சென்றபோது, ஐயாறப்பரும் அறம் வளர்த்த நாயகியும் கைலாஸ வாகனத்தில் எழுந்தருளி வீதி வலம் வருவதையும் பார்த்தார். தாம் அன்று புறக் கண்ணாலும் அகக் கண்ணாலும் பார்த்து அனுபவித்ததையெல்லாம் ஒவ்வொன்றாக இனிய தமிழில் இசைத்துப் பாடி அருளினார். இத்தனை காலமும் தாம் கண்ணால் கண்டும் கருத்தினால் அறியாமலிருந்தவற்றை இன்று திருவையாற்றில் கண்டு அறிந்துகொண்டதாக ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ''கண்டறியாதன கண்டேன்'' என்று திரும்பத் திரும்ப வியந்து வியந்து கூறினார்.



''உங்கள் நாட்டியப் பள்ளி நன்றாக நடக்குதா?''
''வரவர மாணவிகள் குறைந்து போய் நாட்டியப் பள்ளியே ஆடிண்டிருக்கு!''

முதிய எம்பிராட்டியார் கூறி வந்த இந்த வரலாற்றை எல்லாரும் மெய்மறந்து கேட்டுக் கொண்டு வந்தார்கள்.

■

வரலாறு முடிந்த பிறகு கொடும்பாளூர் இளவரசி ஒரு கேள்வி கேட்டாள்: ''அம்மா! அப்பர் சுவாமிகள் விலங்கினம்—பறவை இனங்களின் காதலைக் குறித்து இப்படியெல்லாம் வியந்து வியந்து கூறியிருக்கிறாரே? மனித இனத்தைப் பற்றி மட்டும் ஏன் குறிப்பிடவே இல்லை?''

''மனித குலத்தில் பிரதிப் பயனை விரும்பாமல் உண்மையான அன்பு கொண்ட ஆண் — பெண்கள் இல்லவே இல்லை. அதனாலேதான் அப்பர் மனித குலத்து ஆண் பெண்களைக் குறிப்பிடவில்லை!'' என்றாள் பூங்குழலி.

''அது சரியல்ல மகளே! உன்னையும் என் மகனையும் அப்பர் சுவாமிகள் பார்த்திருந்தால், மனித குலத்தின் காதலையும் சேர்த்துக் கொண்டு பாடியிருப்பார்!'' என்றார் செம்பியன் மாதேவி.

''ஆமாம்; ஆமாம்!'' என்று மற்ற இரு பெண்மணிகளும் ஆமோதித்தனர்.

இந்தச் சமயத்தில் அந்த மாளிகையின் வாசலில் ஏதோ சலசலப்பு உண்டாயிற்று. சேவகன் ஒருவன் உள்ளே வந்து, ''சீனத்துப் பட்டு வர்த்தகர்கள் இருவர் வந்திருக்கிறார்கள். இளவரசிகளைப் பார்த்துவிட்டுத்தான் போவோம் என்கிறார்கள்!'' என்றான்.

இளைய பிராட்டி வியப்பும் கோபமும் அடைந்து, ''அவர்கள் யார் அவ்வளவு அதிகப்பிரசங்கிகள்? இப்போது ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி அவர்களைப் போகச் சொல்!'' என்றாள்.

இதற்குள் பூங்குழலி, ''தேவி! அவர்களை நான் வரச் சொல்லியிருந்தேன். மன்னிக்க வேண்டும்!'' என்றாள்.

''அப்படியானால் வந்துவிட்டுப் போகட்டும்!'' என்றாள் இளையபிராட்டி.

சற்று நேரத்துக்கெல்லாம் சீனத்து வர்த்தகர்கள் இருவரும் இரண்டு மூட்டைகளுடனே அங்கு வந்தனர்.

(தொடரும்)



பேசாத காரணம்

கரிச்சான் குஞ்சு

சூரியன் மறைந்து இடந்தான்; மப்பும் மந்தாரமுமாய் இருந்தது; இரவு வந்துவிடவில்லையே தவிர இருட்டி விட்டது. இலேசாக ஆரம்பித்த தூறல் மழையாக விழத் தொடங்கியிருந்தது. திண்ணையில் சீட்டாட்டத்தை முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தால் முடித்துவிட்டுத் திண்ணையில் ஏழெட்டுப் பேர்கள் நெருக்கமாய்ச் சாய்ந்தும் படுத்தும் அரட்டை அடித்துக் கொண்டிருந்தோம்.

ஊரில் இருக்கும் ஒரு சின்னப் பணக்காரர் நடுப் பண்ணை ராசு. ஏழெட்டு வேலி நிலம் உண்டு அவருக்கு; சொந்தப் பண்ணை; பாக்கி இருக்கிற நாலைந்து பேர்களும் பத்து மா பதினைந்துமாவுக்கு மேல் நிலம் இல்லாதவர்கள்; அவர்களுடைய பூர்வீகச் சொத்துக்களெல்லாம் இப்போது கை மாறிக் கிடந்தன. குடியானத் தெரு நல்ல ஏற்றம். அநேகமாய் எல்லோருமே நிலபுலம் வாங்கிவிட்டார்கள். அக்கரைத் தெரு ராவுத்தர்களிலும் சிலர் எங்கள் ஊர் நிலங்களை வாங்கிவிட்டார்கள். இந்த நிலையில் நடுப் பண்ணை ராசுவைத் தவிர மற்றவர்கள் எல்லாருக்குமே, மாவுக்கு 'எட்டு மேனி'யென்று குடியானவர்கள் பார்த்து மனம் வைத்து அளந்தால்தான் உண்டு; ஆகவே யாருக்கும் எதையும் பேச அதிகாரம் இல்லாமல் போய்விட்டது. இந்த அழகில் ஊரில் ஒற்றுமையும் கிடையாது; அடிக்கடி சண்டை சச்சரவுகள். எந்தப் பக்கம் வலுக்கிறதோ, அதைப் பார்த்து சாஸ்திரிகள் சேர்ந்து கொள்வார். ஊரில் அவர் ஒரு பெரும் புள்ளி. எதிர்ப் பக்கத்தில் ராசு சேர்வான். இருவருமே நேரிடையாக எதிர்த்துக் கொள்ளமாட்டார்கள்; ஆனால் ஒருவரை யொருவர் எப்போது கவிழ்க்கலாம், காலை வாரிவிடலாம் என்ற திட்டம் போட்டுக் கொண்டே வேலை செய்வார்கள்; ராசுவுக்குப் பல கெட்ட பெயர்கள் உண்டு ஊரில்; அவற்றுள் பல வருஷங்களாய் நிலைத்து விட்ட கதை ஒன்றில் இப்போது மிக முக்கியமான கட்டம். இதில் ராசுவைத் இக்கு முக்காடச் செய்து, ஊரில் அவன் கொட்டத்தை அடக்கிவிடுவதாக சாஸ்திரிகள் பிரமாதமாக வேலை செய்கிறார் என்பது எங்களுக்குத் தெரியும்; ராசு எங்களிடம் வந்து, கூடக் கலந்து அரட்டை அடிப்பதுமில்லை; எங்களை மதிப்பதும் இல்லை. ஆகவே, சாஸ்திரிகளுக்கு மறைமுகமாக எங்கள் ஆதரவு உண்டு; அவரும் அவ்வப்போது எங்களிடம் வந்து, திண்ணையில் உட்கார்ந்து அரட்டையில் கலந்து கொள்வார். ராசுவுக்கு இதுவும் தெரியும். ஆகவே அவன் எங்கள் மேல் இன்னும் அதிகமாக ஆத்திரப்பட்டுக் கொண்டிருந்தான்: ''ஆச்சு, இன்னும் ஒரு மாசத்தில் ராசுவை என் காலில் விழ வைக்கிறேன்....'' என்று சாஸ்திரிகள் கறுவிக் கொண்டிருந்தார்.

நாங்கள் சீட்டாடி விட்டுப் பேசிக்கொண்டிருந்தோம். தெருக் கோடியிலிருந்து, சாஸ்திரிகள் தாழங் குடையைப் பிடித்துக் கொண்டு வந்தார்; வந்தவர் எங்களைப் பார்த்துவிட்டு நின்றார்.

''ராசுவோட பெரிய பிள்ளை சமாசாரம் தெரியுமா?'' என்று கேட்டார் கூடகமாக.

''ஆமாம்; கேள்விப்பட்டேன். இத்தனை வருஷமா இல்லாம, இப்பத்தான் ரோஷம் வந்ததோ அவனுக்கு; அப்பாவைக் கன்னு பின்னுவென்று கேட்டானுமே.....!''

''அடிதடி ஆகியிருக்கணும்; நல்ல வேளையாய் நான் இருந்தேனோ பிழைத்ததோ? 'நன்னாயிருக்காதுடா. ஊரில் பெரிய மனுஷன் உங்கப்பன். நீயும் வயசு வந்த பிள்ளை. எத்தனையோ வருஷங்களாய் நிலைத்துப் போன சங்கதி. இன்னிக்குக் கிறியாத்தி, விட்டுத் தொலைத்துவிட முடியுமா? ஏதோ தலையெழுத்து.... தொந்தம் வந்துவிட்டது. செஞ்சவரையில் சரின்னு நீயும் சாச்சாப்பலே போய் விடு' என்று சமாதானம் பண்ணினேன்'' என்று கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சிரித்தார் சாஸ்திரிகள்.

''உங்களுக்குத்தான் தெரியுமே, சமயத்தில் எப்படிக் குத்த வேண்டும் என்று....''

''பின்னே விடுவேனா? என் பிள்ளையைப் பற்றி ராசு பெரிய புரளிபண்ணிவிட்டானே.''

''ஆமாம்.... நல்ல வேளையாய். அந்தக் குடும்பமே ஊரை விட்டுக் கிளம்பிற்றே, பிழைத்தீர்கள்.....''

''அடேடே, காலமோ கெட்டுக் கெடக்கிறது. அங்கங்கே அப்படி அப்படித்தான். எங்கே எது வாழுகிறது? அக்குணி வீட்டுக்கு அடிக்கடி இந்த ராசு போவதும் வருவதுமா

யிருந்த காலம் இன்னும் யாருக்கும் மறந்திருக்காது. தவிர, இது மாத்திரம் இல்லே. இன்னும் பல தொடிசுகள் உண்டு இந்த ராசுப் பயலுக்கு. என் காதிலும் விழுந்திருக்கிறது; கண்ணிலும் பட்டிருக்கிறது. எல்லாருக்கும் தெரியும்......''

''இப்போ, சொந்தப் பிள்ளேயே கேட்டுட்டானே, முகத்தைக் கொண்டு போய் எங்கே வெச்சுக்கறது ?''

'' உத்தியோகத்துக்குப் போய்விட்டால் அவனுகளுக்கு இதெல்லாம் எங்கே தெரியப் போகிறது என்று ராசு நினைத்தான்.''

''இரண்டு பிள்ளேகளேயும் உத்தியோகத்துக்கு இவன் அனுப்பிய நோக்கமே அது தானே....? இவனுவது பட்டணத்திலே இருக்கான்; சின்னவன் பம்பாயில்லேன்னு இருக்கான்.......''

''பம்பாயிலே இருந்தால் என்ன? கல்கத்தாவிலே இருந்தால் என்ன? சட்டையும் கிட்டையும்தான் மாறுமே தவிர, மற்றது மாறுதுடா; சின்னவனுக்கும் இந்தப் பங்கு வித்ற சேதி தெரியும். அதோடு அக்குணி பெண் என்ற பெயரில் நிற்கிறதே ஒரு குதிரை....''

''தலேயிலே எழுத்து.... கஷ்டம்; ராசு கோயில் குருக்களே அடிக்கப் போய்விட்டான். தெரியுமோ உங்களுக்கு? அன்னிக்கு நீங்கள் ஊரில் இல்லே......''

'' என்ன சமாசாரம் அது; நேற்றைக்குத் தான் கேள்விப்பட்டேன்; புதிதாய் வந்த பையன் அந்தக் குருக்கள்— அவன் சாது ஆச்சே....''

''அதனுல்தான் வந்தது விபரீதம். ராசு ஏதோ அர்ச்சனே பண்ணக் கொடுத்தானும் ; நாழி ஆகிவிட்டது. ராசு கோயிலுக்குப் போகவில்லே. அக்குணி மாமா பெண் அந்தப் பக்கமாய்ப் போயிருக்கிறுள்; குருக்கள் அவளிடம் பிரசாதத்தைக் கொடுத்து. 'அப்பா அர்ச்சனேக்குக் கொடுத்தார்; இதைக் கொண்டு போ ' என்று கொடுத்தாராம். 'எங்கப்பாவா' என்று விழித்தாளாம் அவள். 'ஆமாம், நடுப் பண்ணே அய்யர்வாள்தானே, உங்கப்பா?' என்றுனும் அவன்.''

'' அடே, அசடே; அதுவும் சரிதான். சோனிப் பயல் அக்குணி; பெண்ணு குதிரை மாதிரி இருக்கு; அக்குணி பெண் என்று நம்ப முடியாதே......''

''ராசு போய்க் கத்தினுனும். நாங்கள் போனதும் பேசாமல் போய் விட்டான்....''

''பின்னே, பேச வாய் ஏது? மானங் கெட்டவன்......''

''அது சரி, பம்பாயில் இருக்கிற ராசு பிள்ளே பற்றி ஏதோ சொன்னீர்களே?''

''ஆமாம், அக்குணி பெண் கல்யாணத்துக்கும் ராசுதான் செலவழிக்கப் போகிறுன் என்று அவனுக்குச் சேதி எட்டியிருக்கு. என் தங்கை பிள்ளேயும் பம்பாயிலேதானே இருக்கிறுன்; அவன் வந்தான்; அரைசல் புரைசலாய் விசாரித்தான் என்னிடம்; நானும் பட்டுக்காமல் எல்லா விவரங்களேயும் சொல்லிவிட்டு, 'எலே, இது பெரிய இடத்துச் சமாசாரம்; நமக்கேன் வம்பு; நீ போய் அவனிடம் ஒன்றும் சொல்லி வைக்காதே' என்றும் சொல்லி வைத்தேன்; அவனு விடுவான்? மஹா புத்திசாலி அந்தப் பயல், ஓடுகிற பாம்புக்குக் காலே எண்ணுவான். இதை விடுவானு...... ?''

'' சரி, நன்னு விசிறி மூட்டிவிட்டாச்சு ; இனிமேல் அணேயாது......''

''சரி, நாழியாகிவிட்டது. மழையும் சற்று விட்டிருக்கிறது.......'' என்று சாஸ்திரிகள் புறப்பட்டார். இதற்குள், ஒரு நாளும் அந்தத் திண்ணேப் பக்கமே எட்டிப் பார்க்காத ராசு, '' என்ன சாஸ்திரிகளே, கண்ணிலேயே காணுேமே....?'' என்று கேட்டுக் கொண்டே வந்தான். அவனுடன் அக்குணி மாமாவும் வந்தார். இருவரும் சாஸ்திரிகளே ''அஞ்சே நிமிஷம். ரொம்ப முக்கியமான சமாசாரம்'' என்று கைப்பிடியாக அழைத்துக் கொண்டு போனுர்கள்.

ராசு வீட்டுக் கூடத்தில் போய் சாஸ்திரிகள் உட்கார்ந்தார். உடனே, கடுமையும் கெஞ்சலும் கலந்த குரலில் ராசு சொன்னுன்: ''சாஸ்திரிகளே, நீர் இன்று தபாலில் போட்ட கவர் இதோ என்னிடம் வந்துவிட்டது; அதாவது நீர் பட்டணத்துக்கு, அக்குணி பெண்ணுக்குப் பார்த்திருக்கும் மாப்பிள்ளே வீட்டாருக்குப் போட்ட கடிதம், முத்திரை போடாமல் என்னிடம் வந்துவிட்டது, அக்கரைத் தபாலாபீசிலிருந்து. அதில் எழுதி இருப்பதைப் படித்தேன். நீர் கேட்கும் எதையும் நான் கொடுக்கத் தயார். இந்தக் கல்யாணத்தைக் கெடுத்து விடாதீர் ; இது நான் ரொம்ப யோசித்துச் சொல்வது. இதோ இப்பவே முடிவு தெரிய வேண்டும். மறுத்துப் பதில் பேசினீரானுல், கைகால் ஒடிந்து — கட்டை மூலேத்து வீட்டோடு கிடப்பீரோ, அல்லது தாங்காமல் செத்துத்தான் போய் விடுவீரோ தெரியாது. இரண்டில் ஒன்று உடனே தெரிய வேண்டும்.....''

''ராசு.....'' என்றுர் சாஸ்திரிகள்.

'' ராசு ரொம்பப் பொல்லாதவன் ; ஆனுல் மயிரிழையில் கட்டுப்படுவான். என்ன சொல்கிறீர்? இன்றேடு நம்முடைய விவகாரம் முடிய வேண்டும். இன்று முதல் நாம் இருவரும் பிரிக்க முடியாத சிநேகிதர்களாய் மாற வேண்டும். அல்லது நம் இருவரில் ஒருவர் நாளேக் காலே விடிவதைப் பார்க்கக் கூடாது. ஆனுல் அநேகமாய் அது நீராகத்தான் இருப்பீர். வெளியில் மழை சோ என்று பெய்கிறது. கும்பிருட்டு. ஜாக்கிரதை! '' ராசுவின் குரலில் கடுமை மட்டும் மிஞ்சியிருந்தது. அக்குணி மாமாவையும் வெளியே அனுப்பிக் கதவைத் தாழ்ப்பாள் போட்டான் ராசு.


சற்று நேரத்துக்கெல்லாம் சாஸ்திரிகள், ராசுவின் ஆள் துணே வர வீட்டுக்கு வந்து சேர்ந்தார். மறுநாள் காலே வெளியூருக்குப் புறப்பட்டுப் போனுர். இரண்டு நாட்கள் கழித்துத் திரும்பி வந்தார். மாலே போதோடு புறப்பட்டுத் தெருவோடு போனவர் சீட்டாட்டத் திண்ணேயில் உட்கார்ந்தார். நாங்கள் யாருமே அவருடன் முகம் கொடுத்துப் பேசவில்லே. ராசுவுக்கு எதிரியாய் இந்த ஒருவரும் அவனுடன் சேர்ந்து விட்டாரே, ஏற்கனவே வலுவுள்ள சாஸ்திரிகள் கை இன்னும் வலுத்துவிட்டதே என்ற வருத்தம்தான் காரணம்.

உறுதியான கட்டடங்கள்: கிராமங்களில்-1



சென்னை கே. ஆர். & கம்பெனி ஸ்ரீ ஆர். சுப்ரமணியன் அவர்கள் குமாரன் சிரஞ்சீவி **ஆர். கணேஷுக்**கும் சென்னை ஸ்ரீ ஆர். எஸ். மணி அவர்கள் குமாரத்தி சௌ. **லலிதா**வுக்கும் சென்னையில் சமீபத்தில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்



உண்மை உறங்காது!

என்னதான் புதுமை செய்தாலும், ஒரு பங்களாவின் வாசற்படியையோ, கிணற்றையோ அடியோடு புரட்சிகரமாக [மாற்றிவிட முடியாது. மேல் மாடி மேலேதான் இருந்தாக வேண்டும்; கிணறு கீழேதான் இருந்தாக வேண்டும்! அதே போல், நாடகத்தின் 'சஸ்பென்ஸ'க்காகச் சேர்க்கப்படும் சந்தேகத்தை, புதுமை செய்வதாகச் சொல்லிக் கொண்டு தவிர்த்துவிட முடியாது. (அதாவது சந்தேகம் என்றால் கணவன் அல்லது மனைவி ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் சந்தேகம் என்று கொள்க!)

நாடகம் சாதாரணமானது தான் என்றாலும் நடிகர்களின் திறமையான நடிப்பினால் புதுமையும் புத்துயிரும் பெற்றிருக்கிறது. கருத்துப் பொதிந்த சுவையான வசனம் நாடகத்தின் உயிர்நாடியாக விளங்குகிறது. விரைவில் பொன் விழாக் கொண்டாட விருக்கும் இந்த நாடகத்துக்கு இருக்கும் வரவேற்பு பாராட்டத்தக்கது.

இந்த நாடகத்தின் வெற்றிக்குக் காரணம் நாடகத்தை இயற்றிய திரு கே. கே. வைத்தியநாதனே டைரக்ஷன் பொறுப்பையும், ஏற்றிருப்பது தான் என்று நான் நினைக்கிறேன். மூலக் கதை ஒருவர், நாடக ஆக்கம் ஒருவர், வசனம் ஒருவர், டைரக்ஷன் ஒருவர் என்று பொறுப்புக்கள் பிரிந்து விடும்போது சில சமயம் எல்லாத் துறைகளிலும் ஒருமைப்பாடு காண்பது அரிதாகி விடுகிறது; நாடகம் தொய்ந்து விடுகிறது.

நாடகம் என்றால் நகைச்சுவை அதில் இருந்தாக வேண்டும் என்னும் ஆசை இப்பொழுது எல்லா நாடகக் குழுவினரையும் ஆட்டிப் படைத்து வருகிறது. அதற்காக ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத உரையாடல்களை — நகைச்சுவை என்ற நினைப்பில் — கோத்து இருவரை மேடையில் பேசவிட்டு, அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு திரை மறைவில் அடுத்த 'செட்'டைத்தயாரிக்கிறார்கள். நல்ல வேளை! அந்த மரபு இந்த நாடகத்தில் கடைப்பிடிக்கப் படவில்லை.

எம். ஜி. ராஜனின் நடிப்புத் திறமை இந் நாடகத்துக்குத் தனிச் சிறப்பைத் தந்திருக்கிறது; நாற்பது வயதைத் தாண்டிய பாத்திரத்தை ஏற்று அதற்கு ஒரு தனி மெருகேற்றி யிருக்கிறார். அந்த வயதில் ஓர் இளம் பெண்ணை மணந்து கொண்டவனுக்கே உரிய சந்தேகத்தையும், குழப்பத்தையும் அவர் நடிப்பில், நடையில், பேச்சில், பார்வையில் எல்லாவற்றிலும் காண முடிகிறது.

கே. ஆர். தேவகி, நித்யா. அமைதியான நடிப்பு, அடக்கமான பேச்சு — மனசுக்கு நிறைவைத் தரும் தோற்றம். ஒரு நாடகம் சிறக்க இவை போதுமே!

மல்லிகா பாகத்தை ஏற்ற ஆனந்திக்கு அதிக வேலையில்லை. ஆனால் கடைசிக் காட்சியில் நாடகத்தின் அழுத்தமான சஸ்பென்ஸை உடைக்கப் பயன்படும் கெட்டியான பாத்திரம் மல்லிகாதான்! மல்லிகா மட்டும் இல்லையென்றால்...! ஊஹூம்! அந்த 'சஸ்பென்ஸை' நான் வெளியிட மாட்டேன். விநாயகா பைன் ஆர்ட்ஸ் கிளப் குழுவினரே இந்தக் கடைசிக் காட்சிதான் படுமுக்கியம் என்று பலமுறை என்னிடம் குறிப்பிட்டிருக்கும்போது நான் அந்த 'சஸ்பென்ஸ்' காட்சியைப் போட்டு உடைக்கலாமா? அது தர்மமா?

அட்வைஸர் அப்பாசாமியாக வி. ராமரத்தினம் தோன்றினார். அந்தப் பாத்திரத்தை நகைச்சுவையோடு லாகவமாகக் கையாண்டார்.

இந்த நாடகத்தில் இன்னொரு புதுமை! சாதாரணமாக நம் அமெச்சூர் நாடகங்களில் வழக்கமான காட்சி ஒன்றுண்டு. அதிகப்பிரசங்கியான வீட்டு வேலைக்காரனிடம் எஜமான் சகல சங்கதிகளையும் கூறி யோசனை கேட்பார். அது ஒரே கேலிக்கூத்தாக இருக்கும். இந்த நாடகத்தில் அது இல்லை. எஜமான் வேலையாளை வைக்க வேண்டிய இடத்தில் வைத்திருக்கிறார். ஆகவே, வேலையாள் வேலையாளாகவே இருக்கிறான். ராகவன் வேலைக்காரனாக நன்றாக நடித்தார்.


முரளி, தண்டபாணி முதலிய பாத்திரங்கள் நாடகத்தோடு அதிகத் தொடர்பு கொண்டவையல்ல. ஒரு கல்யாணம் என்றால், அங்கு தேவைக்கு அதிகமான பாத்திரங்களும் இருக்கும். அப்படி இருந்தால்தான் கல்யாணம் களை கட்டும். ஆனால் நாடகத்தில்...!

இந்நாடகத்தில் நன்றாய் நடித்த இன்றியமையாத ஒரு பாத்திரம் உண்டு. அது ஒரு ஜடப் பொருள்! — சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு தனி மரத்தின் படம்தான் அது! நாடகத்தின் ஆரம்பத்திலிருந்து அது ஒரு சஸ்பென்ஸாகவே யிருந்து, கடைசிக் காட்சியில் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாகி, சஸ்பென்ஸை விளக்குகிறது! ஆகவே ''உண்மை உறங்காது'' நாடகத்தின் அதி முக்கியமான பாத்திரம் அதுதான்!


— காந்தன்

"மான் விழியாள்" என பிறர் போற்றும் கண்ணழகி!

கண்ணுக்கு களிப்பூட்டும் அவள் கண்ணழகுக்கு காரணம்...ல்யூர் அவுட்டர் ஐ க்ரீம்.



பெரும் பாலோர் கண்களின் கீழ் கருவளையம், சுருக்கம் இவற்றால் அவதியுறுகிறார்கள். வயதாக ஆக இது இன்னும் அதிகரிக்கும். பெண்ணின் வடிவழகுக்கு அடிப்படையான விழியழகைக்



கெடுத்துக் கொள்வதா? அதுவும் ல்யூர் அவுட்டர் ஐ க்ரீம் இருக்கையில்! கண்களைச் சுற்றி தின-மும் தடவி வந்தால், கன்னியரின் களையூட்டும் கண்களைத் தந்துவிடும். ஓய்வும், உறக்கமும் கூடவே அளித்தால், இதனைப் பயன்படுத்தும் மகளிருக்கு மயக்கும் விழிகள் சொந்தமாகிவிடும்.



கண்ணை இமைகாப்பது போல கண் அழகைக் காப்பது ல்யூர் அவுட்டர் ஐ க்ரீம்.


டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்: தென் இந்தியா
டி.டி. கிரிஷ்ணமாச்சாரி & கோ





சமையலுக்குச் சிறந்தது

காமதேனு வனஸ்பதி




காமதேனு

இருமுறை
சுத்திகரிக்கப்பட்ட
தாவர எண்ணெ

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல்
கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை-2 • சேலம் ஜில்லா • தமிழ் நாடு

டின்னுக்கு முழு டிக்கெட்!



பஸ்ஸில் ஏறி உட்கார்ந்த அந்தச் சிறுவன் தனக்கு அரை டிக்கட் வாங்கிக் கொண்டான். அவன் மடியில் ஒரு சிறு டின் (5 லிட்டர் பிடிக்கக் கூடியது) இருந்தது. கண்டக்டர் அவனிடம் "இந்த டின்னுக்கும் நீ ஒரு டிக்கட் வாங்க வேண்டும்!" என்றார். தனக்கு அரை டிக்கட் வாங்கிய அந்தச் சிறுவன் வாயே திறக்காமல் அந்த டின்னுக்கு முழு டிக்கட் வாங்கிக் கொண்டான். அந்த டின்னைப் பக்கத்திலுள்ள இடத்தில் வைத்துக் கொண்டான். பஸ் ஓடிக் கொண்டிருந்தது. அடுத்த ஸ்டாப்பில் கூட்டம் திமுதிமுவென்று பஸ்ஸுக்குள் ஏறியது. கண்டக்டர் சிறுவனிடம் "உன்னுடைய டின்னை எடுத்து மடியில் வைத்துக்கொள். இவர்கள் உட்கார வேண்டும்" என்றார். "முடியாது. டின்னுக்காக ஒரு டிக்கட் வாங்கியிருக்கிறேன்" என்று மறுத்துவிட்டான் சிறுவன். பஸ்ஸிலிருந்த அனைவரும் அவனுக்குப் பக்கபலமாகநின்றனர்.

ஆதாரம்: "சக்ஸ் விக்லி" - தகவல்: சரோஜா ராமச்சந்திரன்

கம்பனும் நெப்போலியனும்

மாவீரன் நெப்போலியன், ஒரு நூல் நிலையம் வைத்திருந்தாரும். அங்கே பல நூல்கள் இடம் பெற்றிருந்தன.

நெப்போலியன் நூல் நிலையத்தில் தமிழ்ப் புத்தகமொன்றும் இடம் பெற்றிருந்தது.

ஆமாம், கம்பன் எழுதிய ராமாயணம்தான் அந்தப் புத்தகம்!

(ஆதாரம்: உலகத் தமிழ் மகா நாட்டில் மால்கம் ஆதிசேஷய்யா கூறிய செய்தி. வானொலியில் கேட்டது.)

-ஏ. சுவாமிநாதன்

அரிய சாதனை!

ஓட்டப் பந்தயப் போட்டி நடக்க விருக்கும் தினத்தன்று காலையில் லாபெயட் பயிற்சியாளர் ஹெரால்ட் ஏ. புருஸ் ரயில் நிலையத்துக்குச் சென்று கார்லைல் கோச் பாப் வார்னரையும் அவரது தயாரிப்பில் வளர்ந்த அத்தனை ஓட்ட பந்தய வீரர்களையும் வரவேற்கத் தயாரானார். ஆனால் ரயில் வந்து நின்றபோது அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. ரயிலிலிருந்து இரண்டே இரண்டு நபர்கள் இறங்கினார்கள். கோச் ஒருவரும் ஒரே ஆட்டக்காரரும் இருப்பதைக் கண்டு புரூஸ் விழித்தார்.

"நீங்கள் கோஷ்டியோடு வருவதாக அல்லவா நினைத்தேன்!" என்றார்.

"எல்லாக் கோஷ்டியும் இங்கேயே இருக்கே!" என்று பாப வார்னர் அங்கே நின்ற ஒரே ஓட்ட வீரர் ஜிம் துரோப்பைக் சுட்டிக் காட்டினார்.

அன்று மதியத்தில் ஜிம் துரோப் லாபெயட் ஓட்டப் பந்தய வீரர்களுக்கு எதிராக அத்தனை போட்டிகளிலும் போராடினார். ஓட்டப் பந்தயம், தடை ஓட்டம், உயரம் தாண்டுதல், அகலம் தாண்டல், வேல் வீசுதல், தட்டு எறிதல் முதலியவற்றில் கலந்து கொண்டார். தனியொருவராகவே அத்தனை பெரிய லாபெயட் கோஷ்டியைத் தோல்வி அடையச் செய்து 71--41 எண்ணிக்கையில் ஜயக்கொடி நாட்டினார். தனிமரம் தோப்பாகாது என்பார்கள். ஆனால் தனியொருவர் ஜிம் துரோப் பல தங்கப் பதக்கங்களையும் பரிசுகளையும் மூட்டை கட்டிக்கொண்டு கார்லைலுக்குப் பெரும் புகழுடன் ரயிலேறினார். ஜிம் துரோப் ஒலிம்பிக் சாம்பியன். அவரது அரிய சாதனைகளைக் கண்டு ஸ்வீடன் மன்னர் ஐந்தாம் குஸ்டாவ் தங்கப் பதக்கங்களையும், விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட கேடயத்தையும் வழங்கிப் பாராட்டியுள்ளார்.

- பி. என். எம்.



ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிரஸ்னேவ், சிகரெட் பிடிப்பதைக் குறைக்க ஒரு புது வழியைக் கையாளுகிறார். அவருடைய சிகரெட் பெட்டியை மூடிவிட்டால் அடுத்த 45 நிமிஷங்களுக்கு அதைத் திறக்க முடியாது. சிகரெட் பெட்டியின் உள்ளேயிருக்கும் கருவிதான் இதற்குக் காரணம். "முதலில் நான் இடைவிடாமல் சிகரெட் பிடித்துக்கொண்டிருந்தேன். அதைக் குறைக்கத்தான் இந்தப் பெட்டியை வைத்துக் கொண்டேன். இப்போது ஒரு நாளைக்கு 17 சிகரெட்டுகள்தான் குடிக்கிறேன்!" என்கிறார் பிரஸ்னேவ்.

ஆதாரம்: 'ஹிந்துஸ்தான் டைம்ஸ்' - தகவல்: ச. ரா.

சென்ட்ரல்

பி.வி.ஆர்.

பெரும் மழை வரும் முன் கருமேகங்கள் வானில் அடைத்துக் கொண்டு நிற்கின்றன. - எல்லோரும் அறிந்த விஷயம்.

அத்தியாயம் 23

வியாழக்கிழமை.

பிற்பகல் மணி 3-30.

ரொஸாரியோ வெள்ளைப் பாண்ட்டை அணிந்தபின் ஷூவுக்கு வந்தார். கறுப்பு ஷூ. மேரி பாலிஷ் போட மறந்திருந்தாள். புழுதியைத் துடைத்தார். ஓரிரு இடங்களில் தோலின் சுருக்கங்கள் ஷூவின் வயது மிக அதிகம் என்பதைத் தெளிவாக்கின. ஏற்கெனவே ஒரு முறை பாட்டாவில் தோல் மாற்றியாகி விட்டது. இப்போது உள்ள தோலுக்கு வயது இரண்டுக்கும் மேலாகி, முன் பக்கமெல்லாம் பாழாகியிருந்தது. வலது ஷூவின் அடியில் எட்டணா வட்டத்துக்கு ஓர் ஓட்டை. ஓரங்களில் தையல் நைந்துபோய், நூல் அங்குமிங்குமாக அசிங்கமாகத் தலை நீட்டியது.

ரொஸாரியோ அலுத்துக் கொண்டே லேஸைக் கட்டினார். மேரியின் மேல் பிசகு இல்லை. அவள் வேண்டுமென்றுதான் பாலிஷ் போடவில்லை. பாலிஷுக்குக்கூட அருகதையற்ற நிலையில் ஷூ முதிர்ந்து விட்டது. நான்கு நாட்களுக்கு முன்பே சொன்னாள்: 'இன்னிக்குத்தான் இது கடைசி நாள். நாளைக்குப் பெங்களூரிலிருந்து திரும்பி வந்ததும் புது ஷூ வாங்கியாக வேண்டும்' என்று. அவர் சிரித்துக் கொண்டே தலையை ஆட்டினார்.

ஷூ நன்றாகத் தேய்ந்து விட்டது. இன்று கண்டிப்பாகக் கடைசித் தடவையாக இது அவருடைய பாதங்களை அசிங்கப்படுத்துகிறது.

எழுந்து கோட்டை எடுத்தார். உலோக பட்டன்கள் பளபளத்தன. அதை அவர் கவனிக்கையில், திடீரென்று மேரி பிரவேசித்தாள்.

''என்ன மேரி, இப்போ மூன்று மணிதானே ஆகுது!''



''காஷுவல் லீவ். மங்களாவும், நானும் ரேணுகாவின் கம்பெனிக்குப் போகப் போகிறோம்.''

''ஓ. மங்களா தன் தங்கையின் பிறந்தநாளைக்கு நம்மை அழைச்சதை நான் மறந்துட்டேன்!''

''எனக்கு ஞாபகமிருக்கு, டாடி.''

''என்ன பரிசு கொடுக்கப் போறே?''

''ரெடிமேட் டெரின் ஃப்ராக்.''

''பிரமாதம். அவளுக்கு என் ஆசிகள்.''

''டாடி...''

''என்ன டார்லிங்?''

''எட்மண்டுக்குக் கண்டிப்பா வேலை வாங்கித் தரேன்னு மிஸ்டர் கேதாரம் சொன்னார்.''

''ஆமாம். எனக்கும் காதில் விழுந்தது. பிறந்த நாளுக்குப் புடவை கட்டிக் கொண்டு போ. கவுன் வேண்டாம்!''

''நைலக்ஸ் புடவைதான் டாடி.... மிஸ்டர் கேதாரம் மிஸ் மங்களாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போறாரு!''

''ஓ, ரொம்பச் சந்தோஷச் செய்தி... இனிமேல் எட்மண்டைப் பற்றி நான் கவலைப்பட வேண்டாம். அவன் நல்ல பையன்தான். சகவாச தோஷத்தால் கெட்டுப்போய் விட்டான். இப்போது சரியாகிவிடுவான்!''

''டீ வேணுமா டாடி?''

''நான் சாப்பிட்டு விட்டேன். உன் மதர் எங்கே போனாள் என்று தெரியவில்லையே, மேரி...''

மேரி பதில் சொல்லவில்லை.

''சரி, எனக்கு ரயிலுக்கு நேரமாயிடுச்சு. இப்பவே மூன்றேமுக்கால்!''

''என்னிக்குத் திரும்பி வருகிறீர்கள் டாடி?''

''நாளை மத்தியானம் வெஸ்ட் கோஸ்டிலே வரேன். எனக்கு மத்தியானம் சாப்பாடு வேண்டாம்!''



''ஓ! ஆகட்டும். மதர்கிட்டே சொல்லிடறேன்.''

''பிறந்தநாள் கொண்டாடும் குழந்தையிடம் என் அன்பைச் சொல்லு. போயிட்டு வரேன்!''

ரொஸாரியோவின் ஷூ வீட்டை விட்டுக் கடைசித் தடவையாக வெளியேறியது.

* * *

வியாழக்கிழமை.

பிற்பகல் நான்கு மணி.

சங்கரியின் கை வலித்தது. கடலை மாவு பவுன் நிறத்தில் பிரகாசிக்க, அதில் ஊறிக் கொண்டே நெய் கொப்புளிக்க, போட்ட சர்க்கரை போதுமா, போதாதா என்ற கவலையுடன், சட்டுவத்தால் அவள் கிளறிக் கொண்டேயிருந்தாள். முகத்தில் வியர்வை முத்து முத்தாய்க் கட்டி நிற்கக் கவலை அதிகமாகிக் கொண்டே போயிற்று.

நாலே காலுக்குள் இந்தத் தின்பண்டத்தை முடித்தாக வேண்டும். வெந்த உருளைக்கிழங்கு இன்னும் தோல் உரிக்கப்படாமல் சிப்பலிலேயே கிடக்கிறது. தோல் உரித்து, இரண்டும் கெட்டானாக உதிர்த்துப் போண்டாவுக்குத் தயாரிக்க வேண்டும். ஏற்கனவே மிக்ஸ்சருக்காகத் தயாரித்து வைத்த ஓமப்பொடி, காராபூந்தி, முந்திரிப் பருப்பு எல்லாவற்றையும் கலந்து, சிறு சிறு பைகளில் போட்டு வைக்க வேண்டும்.



அவர் அன்னை கூறியது இப்போது சரியில்லை

கந்தனின் தாய் வழக்கமாகக் கூறுவாள்: குடும்பத்தில் எப்போதும் அதிக குழந்தைகள் இருக்க வேண்டும். ஏன் தெரியுமா? குழந்தைகள் தங்கி வளருவது சந்தேகம். பல குழந்தைகள், மலேரியா, அம்மை, காலரா போன்ற நோய்களில் இறந்து விடும்.

அது விதியென்று மக்கள் அப்போது கருதினார்கள். இன்று கந்தன் வளர்ந்து பெரியவனாகியிருக்கிறான். அவனுக்கென்று குடும்பமும் இருக்கிறது. இப்போது நோய்கள் பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. அம்மை தடுப்பு ஊசியும், இதர தடுப்பு மருந்துகளும் குழந்தைகளைப் பல நோய்களிலிருந்து காக்கின்றன. குழந்தைகள் இறப்பது விரைவாகக் குறைந்து வருகிறது.



davp 71/345

ஈசுவரா! அவள் ஒருத்தியால் இவ்வளவையும் செய்ய முடியுமா? எப்படிச் செய்வாள்? இந்த மங்களா இன்றைக்கு ஒருநாளாவது வீட்டில் இருந்து கூட மாடச் செய்து, ஒத்தாசையாக இருக்கக் கூடாதா? இரண்டு பிள்ளைகளுக்குக் கல்யாணமாகியும் அவளுக்கு என்ன பிரயோசனம்? இன்னும் அவள் மருமகள் இல்லாத மாமியார்தான்.

மருமகள் இல்லை, மகள் இல்லை. இந்த நாசமாய்ப் போகிற சின்னுவது இருக்கக் கூடாதா? பிளாஸ்டிக் தட்டுக்களையெல்லாம் கழுவித் துடைத்து வைக்கச் சொல்லலாமே? வருகிறவர்கள் சாப்பிடப் போகிற அறைகளைச் சுத்தமாக்கி, சிதறிக் கிடக்கும் புத்தகங்களையும் காகிதங்களையும் ஒழுங்காக எடுத்து வைக்கச் சொல்லலாமே?

உம்! எல்லாம் அவள் தலையெழுத்து. இந்த மைசூர்ப்பாகை அவள் கிளற ஆரம்பித்ததே முட்டாள்தனம். ஹோட்டலிலிருந்து வாங்கித் தொலைத்திருக்கலாம். இது எப்போது கம்பிப் பாகாக வருமோ, ஈசுவரா! சற்று முருகிப் போனாலும் கல்லுதான். பாருங் கல்லுதான். 'சங்கரி! எங்க அம்மா மைசூர்ப்பாகு பண்ணணும், சாப்பிடணும். வாயிலே போடறத்துக்குள்ளே ஐஸ்கிரீம் மாதிரி கரையும்' என்று அவர் எப்போதோ செத்துப் போன அம்மாவுக்கு இன்னும் சர்டிபிகேட் கொடுக்கிறார் அடிக்கடி. ஆனால் கண்டிப்பாகச் சங்கரி, இந்த ஜன்மத்தில் கட்டின கணவரிடம் சர்டிபிகேட் வாங்கப் போவதில்லை. ஏனென்றால், பெண்டாட்டி பண்ணினது நன்றாக இருக்கிறது என்று சொல்லுவதே சுய கௌரவத்துக்குக் குறைச்சல் என்று நினைக்கிறவர் அவர்.

இனிமேல் யாருக்கு இவருடைய சர்டிபிகேட் வேணும்? அவருக்கு அவள் பதினொரு குழந்தைகளைக் கொடுத்து வயிற்றை ஒரு வழியாகச் சுத்தமாகக் கழுவியாகிவிட்டது.

இந்த மைசூர்ப்பாகு ஏன் இப்படி அடம் பிடிக்கிறது? ஜிலேபிக்குக்கூட அரைத்துவிடலாம். மைசூர்ப்பாகு தலைவலி. யாரோ ஒரு மாமி, மைசூர்ப்பாகு பண்ணறது மாதிரி கலபம் வேறு எதிலும் இல்லை என்றாள். யார் அவள்? உம்... ஆமாம்... கோமதி... திருநெல்வேலிக்காரி...நல்லவள்தான்... வெகுளிதான்! ஆனால் கண்டிப்பாக அவள் தான் பிறந்த பிறவியில் மைசூர்ப்பாகு பண்ணிப் பார்த்திருக்க மாட்டாள். யாரோ அவளிடம் சொன்னதைத் திருப்பிப் படித்திருக்கிறாள், அவ்வளவுதான்! திடீரென்று, பாகு திரண்டு உருண்டு வரலாயிற்று. சட்டுவத்தை இடது கைக்கு மாற்றி, வலது ஆள்காட்டி விரலை இறுகி வரும் பாகில் கண் இமைக்கும் நேரம் வைத்து எடுத்தாள். கட்டை விரலோடு ஆள்காட்டி விரலைச் சேர்த்துப் பிறகு விரித்தாள். ஒரு நைஸ் கம்பி ஓடுவது கண்ணுக்கு அழகாகத் தெரிந்தது.

அப்பாடா!

மைசூர்ப்பாகு ஒருமாதிரி முடிந்தது.

முகத்தின் முத்துக்கள் புடவைத் தலைப்பில் மறைந்தன.

* * *

வியாழக் கிழமை.

பிற்பகல் நாலேகால்.

முத்து டைப்ரைட்டரை மூடிவைத்து, கான்வாஸ் துணியினால் போர்த்தினான். அரை மணி நேரத்துக்கு முன்னாலேயே அவன் உதவி மானேஜரிடம் ஒரு மணி நேரம் முன்னால் வீட்டுக்குச் செல்ல அனுமதி கோரிப் பெற்றுக்கொண்டாகி விட்டது. அவனுக்கு இப்போது நல்ல அதிர்ஷ்டம். கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது! ரேணுகா ரொம்ப நல்ல பெண்.

அவன் அந்தக் காலத்தில் மாமரம் ஏறினதை இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருக்கிறாள்! இவ்வளவு லட்சம் சொத்து இருக்கிறவள். அப்பாவுக்கு ஒரே வாரிசு. பல கம்பெனிகளுக்கு டைரக்டர். எதற்கு இந்த அநாமதேயத்தை ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்? ஏழைச் சொந்தத்தை மூடி மூடி வைக்கிற இந்தக் காலத்தில், அவனை ரேணுகா இன்னும் நினைவில் வைத்திருக்கிறாள் என்றால், அது அவளுடைய பெருந்தன்மையை மட்டுமா காட்டுகிறது? அவனுடைய அதிர்ஷ்டத்தையும்தான்.

இத்தனை மாதங்களாக அவன் சென்ட்ரலில் இருக்கிறான். யார் அவனை மதித்துப் பேசியிருக்கிறார்கள்? (மணியைத் தவிர) மங்களா அவனை விருந்துக்கு அழைத்திருக்கிறாள். அவளும் நல்ல பெண்.

'எங்கிருந்தோ வந்தாள்!' குமுதாவும் நல்ல பெண்.

எல்லோருமே நல்ல பெண்கள்.

அவன் மிடுக்காக டிரஸ் செய்து கொண்டு போக வேண்டும். நீல நிற பாண்ட்டையும் கிரீம் கலர் ஷர்ட்டையும் லாண்டரியில் கொடுத்து இஸ்திரி போட வேண்டும். நாற்பது பைசா எதிர்பாராச் செலவுதான். பரவாயில்லை. வருஷத்துக்கு, ஏன் ஒரு மாமாங்கத்துக்கு ஒரு நாள்தானே?

இந்த மாதமோ அடுத்த மாதமோ அவன் சென்னையை விட்டுப் போய் விடுவான். ரேணுகாவின் கம்பெனியில் ஸ்டெனோகிராபர். ரேணுகாவிடமே உதவிக் காரியதரிசி. குறைந்தது ஐந் நூறு ரூபாயாவது அவள் சம்பளம் கொடுப்பாள். வாழ்க, ரேணுகா!

* * *

வியாழக் கிழமை.

பிற்பகல் மணி 4-25.

மூன்றே முக்காலுக்கு மார்வாடியிட மிருந்து சைக்கிளை மீட்டபோது அதில் புழுதி மண்டிக் கிடந்தது. 'என்ன சேட், சைக்கிளை அடகு வைத்தா அதைத் துடைத்து வைக்கக் கூடாதுன்னு சொல்லி யிருக்கா?' என்று கேட்டுக் கொண்டே, மணி மார்வாடியின் அருகே கசங்கிக் கிடந்த கும்ப கோணம் காசித் துண்டை எடுக்கப் போனான்.

''ஐயோவ்... என்னுப்பா, நல்ல துண்டை எடுக்கிறே, ஒன் சைக்கிளைத் தொடைக்க!'' என்று மார்வாடி பதறினார்.

''சரி, வேறே துணி குடு.''

''இங்கே அழுக்குத் துணி வியா பாரம் செய்யறது இல்லே.''

''இந்தக் காசித் துண்டு ரொம்ப லட்சணமா இருக்காக்கும். வட்டி மட் டும் நன்னா வாங்கத் தெரிந்துகொள்..''

கர்ச்சீப்பால் ஸீட்டை யும், ஹாண் டில் பாரையும் துடைத்துவிட்டு அவன் சென்ட்ரலை நோக்கி விரைந்தான்.

நான்கு முப்பத்தைந்துக்குச் சென்ட் ரலை அடைந்த பின்தான் ஏன் இப்படி அவசரப்பட்டோம் என்ற கேள்வி அவ னுள் எழுந்தது. உண்மையில் இன்னும் ஒரு வாரத்துக்கு அவன் வேலைக்கே போக வேண்டாம். செவ்வாய்க்கிழமை மங்களாவிடம் பேசிவிட்டுக் கும்பலின் நடுவே சிக்கிக் கொண்டு தவித்த தங்க பிரேம் மூக்குக் கண்ணாடி, கை நிறை யக் கொடுத்துவிட்டார். மார்வாடி யிடம் கொடுத்த பின்பும் கையில் நூறு ரூபாய்க்கு மேல் இருக்கிறது. மெக் ரெனட்டில் முப்பத்தாறு ரூபாய்க்கு 'ரயில் கேக்' வாங்கியும் கையில் பணம் வெள்ளமாக ஓடுகிறது.

மேய்ந்துவிட்டுத் தானாக வீடு திரும் பும் பசுவைப் போல் அவனுடைய கால்கள் சென்ட்ரலை நோக்கியே செல் கின்றன. இதுவரையில் வெற்றியை அளித்து வந்த சென்ட்ரல் என்றைக் காவது ஒரு நாள் அவனைக் காட்டிக் கொடுத்துவிடுமோ?

அவனுடைய பயமும் அவநம்பிக் கையும், அடுத்து அடுத்து வந்த வெற்றி களால்தான் என்று அவனுக்குத் தோன் றியது. ரொம்ப நன்றாகப் படித்தவன், பரீட்சைக்கு முதல் நாள் பயத்தில் நடுங் குவது போல அவன் ஏன் நடுங்க வேண் டும்? அவன் ஒருவனை ஏமாற்றினால், பலரை இரக்கத்துடன் நடத்தியிருக்கி றான். தெய்வம் மட்டும் வரவு — செலவு கணக்குப் போட்டுப் பார்த்தால், கண் டிப்பாக மணி மாட்டிக் கொள்ளவே மாட்டான்.

* * *

வியாழக்கிழமை.

பிற்பகல் மணி 4—35.

டியூட்டி ரிஜிஸ்டரில் கையொப்ப மிட்டபின் ரொஸாரியோ நாலேகாலி லிருந்து பிளாட்பாரத்திலேயே நின்று கொண்டிருந்தார். பார்ஸல் வேனில் சாமான்களை 'லோட்' செய்தாகிவிட் டது. பார்ஸல் கிளார்க் அவரிடம் ஒரு தாளைக் கிழித்துக் கொடுத்துவிட்டு, ரிஜிஸ்டரில் கையொப்பத்தை வாங்கிக் கொண்டு சென்றான்.

ஓரிரு நிமிடங்கள் அங்குமிங்குமாகப் பார்த்தார் ரொஸாரியோ. ஒலவக் கோடு டி. எம். ஒ. இன்று இந்த ரயிலில் பிரயாணம் செய்கிறார். சிப்பந்திகள் ஏற்கனவே, பெட்டி படுக்கையையும், ஆபீஸ் பைல்களையும் கொண்டு போய் வைத்தாகிவிட்டது. ஆனால் அவர் இன் னும் வரவில்லை. வருகிற நேரம்தான்.

எங்கெங்கெல்லாமோ பார்த்த கண் திடீரென்று ஓர் இடத்தில் நின்றது.

இருபது இருபத்திரண்டு வயது மதிக் கக் கூடிய ஒரு பெண் சிமெண்ட் பெஞ்சி யில் உட்கார்ந்திருக்கிறாள். காலடியில் பெட்டி, படுக்கை, கூடை. அருகே ஓர் உயரமான டின். இடதுபுறம் கூஜா, பழக் கூடை.

மடியில் மூன்று வயதுக் குழந்தை, வாழைப் பழத்தைக் கடித்துக்கொண்டு அதே சமயம் தாயின் மடியிலிருந்து இறங்கத் திமிறிக் கொண்டிருந்தது.

குழந்தையின் கண்கள் ரொஸாரியோ வைப் பிரமிக்க வைத்தன. அதில் எவ் வளவு கறுப்பான விழிகள். விழிகளி லிருந்து சிரிப்பு 'டால்' அடித்தது.

குழந்தையை வாரி எடுத்து முத்த மிட ரொஸாரியோவின் மனம் துடித் தது. ஒரு கணம் மேரியின் ஞாபகம் வந்தது. அவளுக்கு இவளைப் போல் ஒரு குழந்தைஇருந்தால்! ரொஸாரியோ பெருமூச்சு விட்டார். அவர் கொடுத்து வைக்காதவர். இல்லாவிட்டால் பல ராமன் மேரியைக் கைவிடுவானா?

இப்போது குழந்தை பழத் தோலை விசி எறிந்தது. அதைக் கவனிக்காத தாயார் வலது பக்கத்தில் பார்வையைத்



கொஞ்சுமிளம் தென்றலோ, குலவ வரும் மல்லிகையோ!



கம கமக்கும் மல்லிகை மணம். இளமை கொழிக்கும் மேனியெழில். இரண்டையும் உங்களுக்கு வழங்கவே ஜேய் அழகு சோப். வில்லை கரைந்தாலும் சுகந்தம் குறையாத அதன் மென்மை நுரை உங்கள் சருமத்திற்கு நேயமானது. உங்கள் பைந்தளிர் மேனி என்றும் பதினாறாகப் புதுமையுடன் பொலிய உபயோகியுங்கள் ஜேய்—ஜிகினாத் தாளுறை தரித்த ஒரே அழகு சோப்!

உங்கள் புத்தெழில் பெருக ஜேய் அழகு சோப் மனங்கவர் மல்லிகை மணம் கமழ்வது.

டாடா தயாரிப்பு.



1942-ல் ஜப்பானியரோடு பர்மாவில் சண்டையிட்டபோது ஜெனரல் மானக்ஷா ஒரு மேஜர். யந்திரத் துப்பபாக்கி ரவைகள் ஆறு உடலில் புகுந்ததால் மயக்கமடைந்து விழுந்த இவரை, இறந்தவர் கணக்கில் சேர்த்து அப்படியே போட்டுவிட்டுப் போய் விட்டனர். அப்பொழுது அவருக்கு வயது 28. அவருடைய மெய்க்காப்பாளர் அவரைச் சுமந்து வந்து முகாமில் சேர்த்தார். மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ஓர் ஆஸ்திரேலிய சர்ஜன் மானக்ஷாவின் உடம்பிலிருந்து 6 குண்டுகளை எடுத்தார். பிறகு ரங்கூனுக்கு அனுப்பப்பட்டார். ரங்கூனில் 'நீங்கள் பிழைக்க மாட்டீர்கள். சென்னைக்கு ஒரு கப்பல் போகிறது போகிறீர்களா?' என்று கேட்டார்கள். 'இறந்தாலும் இந்தியாவில் இறக்கிறேன்' என்று சொல்லிக் கப்பலேறிச் சென்னை வந்தார். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஓர் ஆபரேஷன் செய்து அவர் உயிரைக் காப்பாற்றினார்கள். 57 வயதாகும் மானக்ஷா அவர் குடும்பத்தில் 5-வது குழந்தை. பிரிவினைக்கு முன் யாஹ்யாகானும் இவரும் இந்திய ராணுவத்தில் சக அதிகாரிகள். கடவுள் பக்தி மிகுந்தவர் இவர்.

ஆதாரம் : ஹிம்மத் - தகவல் : கே. ஆர்.

திருப்பி யாரையோ (கணவராகத்தான் இருக்கும்.) எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

பழத் தோல், ரொஸாரியோவின் கண்ணை உறுத்தியது. பிளாட்பாரத்தில் நடக்கிறவர்களில் யாரேனும் ஒருவர் கால் வைத்தால் வழுக்கி விழுந்து விடுவார். அதுவும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தால் ரொம்பவும் கஷ்டப்படுவார்கள்.

ரொஸாரியோ இரண்டே எட்டில் நடந்து,குனிந்து பழத்தோலை எடுத்தார்.

''என்னுடை பழம்!''

''தாய் திரும்பிப் பார்த்தாள்.

''ஏண்டா, தோலை அவர் மேலே எறிஞ்சியா, ராஸ்கல்!''

''இழேதான் அம்மா எறிஞ்சான்...''

''பழம்.... பழம்....!'' குழந்தை தாயின் மடியிலேயே எம்பிக் குதித்தது.

''ஏண்டா, பிளாட்பாரத்திலேயா எறிகிறது ?''

ரொஸாரியோ சிரித்துக் கொண்டே தம் இடத்துக்குத் திரும்பினார். படித்தவர்களும், புத்தி உள்ளவர்களும்கூடத் தான் தின்றுவிட்டுப் பழத் தோலை நடுத் தெருவில் போடுகிறார்கள். இந்தக் குழந்தைக்கு என்ன தெரியும்?

என்ன அழகான முகம் !

என்ன வசீகரமான கண்கள் !

குழந்தை பூர்ண ஆயுளுடன் இருக்க வேண்டும்.

பழத் தோலை ரயிலுக்கு அடியிலே போட்டார். ரயில் வழுக்கி விழாது !

* * *

வியாழக்கிழமை.

பிற்பகல் 4—40.

எட்மண்ட் ஓடோடியும் ஆறும் பிளாட்பாரத்துக்கு வந்தான். தகப்பனாரின் உருவம் தெரிந்தது.

'' டாடி !''

எட்மண்ட்டைக் கண்டதும் ரொஸாரியோவுக்குத் திகைப்பாக இருந்தது. ஒருவித கோபமும்கூட வந்தது. மீண்டும் பணம் கேட்க வந்துவிட்டானா?

''எப்போ திரும்பி வருகிறீர்கள்?''

''நாளை மத்தியானம்... வெஸ்ட் கோஸ்ட் எக்ஸ்பிரஸில்!''

''கேதாரம் எனக்கு பம்பாயில் வேலை வாங்கித் தரதாச் சொல்லியிருக்கிறாரு!''

''எனக்குத் தெரியும்!''

''அவர் சனிக்கிழமை மெயிலில் திரும்பிப் போகிறார்.''

''அதனால் என்ன?''

''என்னையும் புறப்படச் சொல்கிறார். நானும் அன்னிக்கே புறப்படணும்.''

''அப்போ போ !''

''பணம் ?''

''நாளைக்குத் தர்றேன்.'' வயது வந்த பிள்ளையை எத்தனையோ பேர், பாஸில் அனுப்பிவிடுகிறார்கள். அவருக்கு மட்டும் அந்தப் புத்தி வரமாட்டேன் என்கிறது.

'' கண்டிப்பா நாளைக்குப் பணம் வேணும், டாடி.''

எப்படிக் கொடுக்கப் போகிறார் ? யாரிடம் கடன் வாங்கி? கோவாப ரேடிவ் பாங்கியிலிருந்தா?

ரொஸாரியோவின் காதில் இரண்டாவது மணி கேட்டது. உதவி ஸ்டேஷன் சூப்பிரண்டண்ட் பச்சைக் கொடியைக் காட்டினார்.

ஓலவக்கோடு டி. எம். ஓ. எப்போது அவரைத் தாண்டிக் கொண்டு போனார்? இந்த எட்மண்ட்தான் கார

ணம். டி.-எம். ஓ. ஏதாவது தப்பாக நினைத்துக் கொண்டிருப்பாரோ? அரக் கோணத்தில் சந்தித்து மன்னிப்புக் கேட்பதைத் தவிர வேறு வழியில்லை.

'லாக் புக்'கில் கையொப்பமிட்டாகி விட்டது.... 'பார்சல் ஷீட்' பாக்கெட் டில் இருக்கிறது. முதல் வகுப்பு 'சார்ட்' வந்துவிட்டது. பாக்கெட் கடிகாரத் துக்குச் சாவி கொடுத்து நேரத்தைச் சரி செய்தாகி விட்டது.

திடீரென்று ரொஸாரியோ கையை வேகமாக ஆட்டினர். பச்சைக் கொடி யின் துணி அந்தரத்தில் தவித்தது.

டீஸல் என்ஜினின் குரல் அந்தக் கோடியில் இலேசாகக் கேட்டது.

ஓடி, விரைவுபெற்றுக் கொண்டிருக் கும் ரயிலில், தம்முடைய பெட்டிக்குள், ரொஸாரியோ வேகமாகப் பாய்ந்து நுழைந்தார்.

* * *

வியாழக்கிழமை.

மாலை மணி ஐந்து.

யாரும் இல்லாத வீட்டில், வெளிக் கதவைச் சாத்திவிட்டு, லூஸி படுக்கை அறைக்குள் பிரவேசித்தாள். மாலைச் சூரியனின் கதிர்கள் முகத்தில் அடித் தன., நீல நிறத் திரையால் ஜன்னலை மூடிவிட்டுப் படுக்கையின் மேல் உட் கார்ந்தாள்.

அவள் எதிரே, கட்டிலின் உயரத் துக்கு ஒரு டீப்பாய். டீப்பாயின் மேல் ஒரு கண்ணாடித் தம்ளர். பிளாஸ்க் நிறைய ஐஸ். இரண்டு சோடா பாட் டில்கள். மற்றும் ஒரு பாட்டில்.

காலித் தம்ளரில் மது விழுந்தது. அதன் மேல் இரு ஐஸ் துண்டுகள். தம்ளர் நிறைய சோடா.

ஒரு நிமிடம் அதையே உற்றுப் பார்த்த லூஸி திடீரென்று எழுந் தாள். உருளைக் கிழங்கு வறுவலை அவள் மறந்துவிட்டாள். அவசரம் அவசர மாகச் சமையல் அறைக்குச் சென்று டப்பாவுடன் திரும்பினாள்.

அரை மணியில் பாட்டில் பாதிக்கு மேல் காலியாகியது.

லூஸி பாட ஆரம்பித்தாள். நடனம் ஆட வேண்டும் என்ற வெறி கிளம்பி யது. எழுந்தாள். கால்கள் பின்னின. மீண்டும் உட்கார்ந்தாள். நாலாவது டம்ளர் திரவம்-ஐஸ்-சோடா முடிந்தது.

நடனம் ஆடாவிட்டால் உயிரே நிற்காது என்று லூஸிக்குத் தோன்றியது.

எழுந்தாள். கால்கள் மீண்டும் இரு திசைகளில் இழுத்தன. தன்னை நடனம் ஆடவிடாமல் தடுப்பது அந்த டீப்பாய் தான் என்ற எண்ணம் அவளுள் எழுந் தது. கோபத்தில் உதைத்தாள். டீப் பாயின் காலில் நீட்டிக் கொண்டிருந்த ஆணி கணுக்காலைக் கீறிற்று.

அவளுக்கு வலி தெரியவில்லை. கசிந்த ரத்தம் கண்ணுக்குத் தெரிய வில்லை.

ரொஸாரியோ எழுபது ரூபாய் கொடுக்காமல் போனது நினைவுக்குவர, மீண்டும் ஆத்திரத்தோடு டீப்பாயை உதைத்துத் தள்ளினாள்.

சோடா பாட்டில்கள் உருண்டன. தம்ளர் விழுந்தது. மது பாட்டில் மட் டும் அப்படியே இருந்தது. சிரமப்பட்டு அதைக் குனிந்து எடுத்தாள்.

''நீதான் என் பிரிய தேவதை!''

பாட்டிலை அப்படியே வாயில் கவிழ்த் துக் கொண்டாள்.

தொண்டையில் ஆவி பறந்தது. தொண்டைக் குழாயில் ஒரு வெது வெதுப்பு. வயிற்றில் ஓர் எரிச்சல்.

ஐந்து நிமிடங்களில் லூஸி கீழே கிடந்தாள். தலை டீப்பாயின் அடிப் பாகத்தில் அதன் காலை இடித்துக் கொண்டு கிடந்தது.

லூஸி இந்த உலகத்தையே மறந் திருந்தாள்.

அப்போது மணி ஆறரை.

* * *

வியாழக் கிழமை.

மாலை மணி ஐந்தரை.

கேதாரம் ஸ்பென்சரில் பிறந்த நாள் பரிசாக ஒரு விளையாட்டு ரயில் வாங்கினான்.

வட்டவடிவத்தில் தண்டவாளங்கள். சுற்றிச் சுற்றி வரும் என்ஜின். மூன்று பெட்டிகள். முப்பத்தேழு ரூபாய் கொடுத்தபோது கை கொஞ்சம் வலிக் கத்தான் வலித்தது.

* * *

வியாழக்கிழமை.

மாலை 6—30.


கேரளா எக்ஸ்பிரஸ் சென்னையை விட்டு விலகி, எங்கேயோ எதையோ தாண்டி ஓடிக் கொண்டிருந்தது.

அதில் கார்டாகச் செல்லுகிறவர் ரொஸாரியோ. வயது ஐம்பதைத் தாண்டியாகி விட்டது. கம்பீரமான உயரம்; பார்வை; நடை.

அந்த ஸ்டேஷனில் கேரளா எக்ஸ் பிரஸ் நிற்கக்கூடாது. ஆனால் ஏதோ கோளாறு, நின்றது. இருபது நிமிடங் களுக்குப் பிறகு மீண்டும் புறப்பட்டது.

அப்போது நேரம் 6—41.

(தொடரும்)



அமரர் **கல்கி** எழுதிய

அலை ஓசை

கல்கி ஜனவரி 16, பொங்கல் மலரில் ஆரம்பம்

மற்ற புதிய தொடர் அம்சங்கள்:

கல்யாணக் கதைகள்

வணக்கம், சௌக்கியமா?

— இரு இல்லத்தரசிகளின் சந்திப்பு

பொங்கல் மலரில் சிறப்புச் சிறுகதைகள்

பொன்னித் துறைவன் ※ கல்பனா

மலர்மன்னன் ※ வசுமதி ராமசாமி

ஆகியோர் எழுதுகிறார்கள்

பாப்பா மலர் - வண்ண மடல்

சுவைமிக்க பொங்கல் மலரில் அதிக பக்கங்கள்!




படங்கள் :

இந்தப் பக்கத்தில் :

- ஹரே கிருஷ்ண இயக்கத்தைச் சேர்ந்த இருவர் திருமணம் செய்து கொள்கின்றனர்.
- வீதியில் பகவன் நாமசங்கீர்த்தனம்.

வலது பக்கத்தில் :

- பாஸ்டனிலுள்ள அச்சுக்கூடத்தில் உழைப் பாளிகள்.
- ஸ்ரீ பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபு பாதா.
- புதிய பிருந்தாவனத்தில் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள்.



பக்தி இயக்கம் பரவுகிறது

நமது ஆபீஸ் பையன் சற்று மிரண்ட தோற்றத்துடன் அறையினுள் நுழைந்தான். ''ஸார்! உங்களைப் பார்க்க இரண்டு பேர் வந்திருக்காங்க'' என்றான்.

''இருக்கட்டுமே! அதற்கு ஏன் இப்படி ஒரேயடியாகப் பதறுகிறாய்?'' என்றேன்.

''இல்லே, அவங்களைப் பார்த்தால் அமெரிக்கர்கள் மாதிரி இருக்கு ஸார்!...''

''இருந்தால் என்ன தம்பி? பாகிஸ்தான் பக்கம் பரிஞ்சு பேசற நாட்டிலே யிருந்து வராங்களேன்னு துடிக்கிறியா?''

''அதொன்றுமில்லே ஸார்! இவங்களைப் பார்த்தால் ஐயருங்க மாதிரியும் இருக்கு ஸார்!''

அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே பாதித் திறந்த கதவு வழியாக ஆஜானுபாகுவாக ஒருவரும், சற்றுக் குள்ளமாக மற்றொருவரும் எட்டிப் பார்த்தார்கள். சந்தேகமில்லை, அவர்கள் அமெரிக்கர்கள்தாம்! சந்தேகமில்லை, அவர்கள் பிராமணர்களும்தாம்!

''ஹரே கிருஷ்ண!'' என்றார் ஒருவர், ''ஹரே கிருஷ்ண'' என்றார் மற்றொருவர்.

பஞ்சகச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டி, ஜிப்பா, ஜபமணிமாலை, மழிக்கப்பட்ட தலை, உச்சிக் குடுமி, நெற்றியில் நாமமாக உயர்ந்த கனத்த சந்தனக் கோடு — நானே திகைத்து விட்டேனென்றால், ஆபீஸ் பையன் சற்று மிரண்டு போனதில் வியப்பில்லை அல்லவா?

ஒரு மாதிரியாக என்னைச் சுதாரித்துக் கொண்டு, ''வாருங்கள், அமருங்கள்'' என்று ஆங்கிலத்தில் அவர்களை உபசரித்தேன். ''உங்கள் பெயர்...?''

''ஹரே கிருஷ்ண! என் பெயர் கிரிராஜ் தாஸ்.''



''ஹரே கிருஷ்ணு! என் பெயர் பாவநந்தா தாஸ்.''

இவ்வாறு கூறியபடியே உட்கார்ந்தனர்.

''என்ன இது? எல்லாவற்றுக்கும் ஹரே கிருஷ்ணுதாஞ?'' என்றேன்.

''கரெக்ட். எல்லாவற்றுக்கும் எல்லாருக்கும் ஒரே மந்திரம், தர்ரக மந்திரம் ஹரே கிருஷ்ணு! ஒன்றே தெய்வம், ஒருவனே தேவன், ஹரே கிருஷ்ணு!'' என்றனர்.

''ஹரே கிருஷ்ணு! காப்பி சாப்பிடுங்கள்; கொண்டுவரச் சொல்கிறேன்'' என்றேன்.

''ஹரே கிருஷ்ணு! நாங்கள் காப்பி, டீ எதுவும் சாப்பிடுவதில்லை. சுருட்டு, சிகரெட் பிடிப்பதில்லை. மது போன்ற எந்தப் போதைப் பொருளையும் மருந்து என்ற முறையில்கூடத் தொடுவதில்லை. திருமண பந்தத்துக்கு அப்பால் மங்கையரை மனத்தாலும் நாடுவதில்லை. அசைவ உணவு உண்பதில்லை. பூண்டு, வெங்காயம் சேர்ப்பதில்லை. சூதாடுவதில்லை. நைவேத்தியம் செய்யாமல் எதையும் சாப்பிடுவதில்லை. விரல்களைப் பயன்படுத்தியே உண்போம்; அளவுக்கு மிஞ்சி அல்ல'' என்று அவர்கள் மாறி மாறி அடுக்கிக் கொண்டே போனர்கள்.

'லாட்டரிச் சீட்டில் பிரைஸ் விழுந்தது: புதுசா சைக்கிள் வாங்கினேன்' என்று என்னிடம் பெருமை அடித்துக் கொண்ட சாஸ்திரிகள் ஒருவரின் நினைவு வந்தது எனக்கு. ''கிருஷ்ணு, கிருஷ்ணு! எங்கள் ஊர் சாஸ்திரிகள்கூடக் காப்பிக்கும் மூக்குப் பொடிக்கும் பாதகமில்லை என்பார்களே. நீங்கள் அமெரிக்கர்கள்தாஞ? அல்லது அபூர்வ சகோதரர்களா?''

''அபூர்வம் ஒன்றுமில்லை. அமெரிக்காவில் இன்று ஹரே கிருஷ்ணு இயக்கம் அமோகமான





வெற்றி அடைந்து கொண்டிருக்கிறது'' என்றனர்.

''அப்படியா? விவரமாகச் சொல்லுங்கள்'' என்றேன்.

உச்சிக் குடுமியை உருவிவிட்டு ஒரு தட்டுத் தட்டினார் ஒருவர். முழங்காலை மடக்கி உள்ளங்காலைச் சௌகரியமாக நாற்காலியின் மீது வைத்துக் கொண்டார் இன்னொருவர். இவ்வாறு அமெரிக்க நோக்கில் அநாசார நிலையில் அமர்ந்து மிகுந்த உற்சாகத்துடன் அவர்கள் பேசினார்கள்.

1969ம் ஆண்டு ஜூலை 27ந் தேதி லாஸ் ஏஞ்ஜல்ஸ் நகரில் மூன்று டன் எடையுள்ள தேர் ஆயிரக் கணக்கான அமெரிக்க இளைஞர்களால் இழுக்கப்பட்டுக் கடலை நோக்கிச் சென்றது. பூரியில் இழுக்கப்படுவது போன்ற தேர், லாஸ்ஏன்ஜல்ஸ் நகரில்! பூரியில் நாம் காண்பது போன்ற அதே ஜகந்நாதர், பலராமன், சுபத்திரையின் உருவங்கள் தேரின் மேல் பகுதியில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. இச்சந்நிதிக்குக் கீழே சிம்மாசனத்தில் ஒருவர் கம்பீரமாக அமர்ந்திருந்தார். இவர்தாம் அமெரிக்காவில் ஹரே கிருஷ்ணா இயக்கம் ஆரம்பமாகி அமர்க்களமாகப் பரவ முழுமுதல் காரணமாக இருக்கும் ஸ்ரீ ஏ. ஸி. பக்தி வேதாந்த ஸ்வாமி பிரபு பாதா. பஞ்சகச்சம், உச்சிக் குடுமி, சந்தனப் பூச்சு சகிதம் அவரது பக்தகோடிகள் பலர் அவரைப் பய பக்தியுடன் பார்வையாலேயே பூஜித்துக் கொண்டிருந்தார்கள். வேறு பலர் கையில் ஜால்ராவுடன் நாமசங்கீர்த்தனம் செய்தபடி தெருவில் ஆனந்தக் கூத்தாடினார்கள்.

ஹரே கிருஷ்ணா, ஹரே கிருஷ்ணா;
கிருஷ்ண கிருஷ்ணா ஹரே ஹரே!
ஹரே ராமா, ஹரே ராமா;
ராமா ராமா ஹரே ஹரே!

என்ற கோஷ்டி கானம் விண்ணை முட்டியது! சாலையெல்லாம் தூவப்பட்ட மென்மலர்கள் மீதாகத் தேர் மெதுவாக நகர்ந்து கடற்கரை நோக்கிச் சென்றது. பக்திப் பிரவாகம் கடலில் சங்கமமானதும் அங்கு குழுமியிருந்த பத்தாயிரம் பேர்களுக்குப் பிரசாதம் வழங்கப்பட்டது. பின்னர் மீண்டும் அந்தப் பெருங் கூட்டம் நாமசங்கீர்த்தன இன்பத்தில் திளைத்தது. வானைக் கூரையாகவும் மணல் பரப்பைத் தளமாகவும் கடல் அலைகளைப் பக்த கோடிகளாகவும் கொண்டு அவர்கள் ராம நாமாவிலும் கிருஷ்ண நாமாவிலும் தங்களை இழந்தனர்.... இதே நேரத்தில் தேர்த் திருவிழா பாஸ்டன், நியூயார்க், லண்டன் ஆகிய நகரங்களிலும் நடந்து கொண்டிருந்தது.

இப்படி என்றோ ஒரு நாள் கிருஷ்ணனிடத்தில் மனத்தை லயிக்கச் செய்கின்றனர் என்பதில்லை. அமெரிக்காவில் பதினேழு ஹரே கிருஷ்ண நிலையங்கள் உள்ளன. கனடாவில் மூன்று. இன்னும் டோக்கியோ, லண்டன், பாரிஸ், ஹாம்பர்க், ஸிட்னி ஆகிய நகரங்களிலும் நிலையங்கள் உண்டு. பாஸ்டனில் இவர்களுக்கென்று தனியானதோர் அச்சகம் இருக்கிறது. இந்தியாவில் கோரக்பூரில் ஹரே கிருஷ்ண நிலையம் செயல்படுகிறது.

இந்த இயக்கத்தை அவர்கள் இஸ்கான் (International Society for Krishna consciousness – Iskon) என அழைக்கிறார்கள். தலைமையகம் லாஸ்ஏன்ஜல்ஸ் நகரில் உள்ளது.

நாமசங்கீர்த்தனத்தை இவர்கள் இசைத் தட்டாகப் பதிவு செய்து வெளியிட்டார்கள். மற்ற எல்லா இசைத்தட்டுக்களையும் விட மிக அதிகமாக விற்பனையாகும் இசைத்தட்டாக அது அமெரிக்காவில் நீண்ட நாட்களுக்கு முதலிடம் பெற்றிருந்தது. சங்கீர்த்தன நிகழ்ச்சிகளை இவர்கள் அமெரிக்காவில் பூங்காக்களில், பள்ளிகளில், வீதிகளில், டெலிவிஷனில், தியேட்டர்களில் என்று வசதிப்பட்ட இடங்களிலெல்லாம் சதா நடத்திக் கொண்டேயிருக்கிறார்கள். ''கடவுள் தன்மையை மீண்டும் பெறுவோம்'' (Back to God head) என்ற பெயரில் ஒரு பத்திரிகை வெளியிடுகிறார்கள். அமெரிக்காவில் நூற்று முப்பத்து மூன்று ஏக்கர் நிலம் வாங்கிப் பண்ணை நடத்துகிறார்கள். அதைப் ''புதிய பிருந்தாவனம்'' என அழைக்கிறார்கள். இங்கு விவசாயத்துக்கும், பால் கறப்பதற்கும் இயந்திரங்களைப் பயன்படுத்துவதில்லை என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறார்கள்.

* * *

''**ஸ்ரீ** பக்தி வேதாந்த ஸ்வாமி அமெரிக்காவுக்கு எப்படி வந்து உங்களையெல்லாம் ஆட்கொண்டார்?'' என்று கேட்டேன்.

''அவர், இந்தியாவில் அறுபத்து நாலு கௌடியா வைஷ்ணவ மடங்களை ஸ்தாபித்த ஸ்ரீ பக்தி சித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மகராஜ் அவர்களின் சீடர். குரு, தாம் காலமாவதற்குமுன், அயல்நாடுகளில் கிருஷ்ண பிரேமையை ஆங்கில மொழி மூலம் பரப்ப வேண்டும் என்று சிஷ்யருக்குக் கட்டளையிட்டுச் சென்றார். இது 1936ல் நடந்தது. ஆனால் 1965 வரை ஸ்ரீபக்தி வேதாந்த ஸ்வாமி இதைத் தீவிரமாக எடுத்துக் கொள்ளவில்லை. 1959ல் இவர் சன்னியாசம் பெற்றார். அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாக இந்த எண்ணம் வளர்ந்து குருவின் இறுதி அபிலாஷையை அற்புதமான முறையில் இன்று பூர்த்தி செய்து வைத்திருக்கிறார்.''

''அமெரிக்காவில் மாதா கோயில்களில் உள்ள பாதிரிமார்கள் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்கள்?''

''அமெரிக்காவில் இன்று பெரும்பாலான மாதா கோயில்கள் வெற்றிடமாக இருக்கின்றன. வாழ்க்கை வசதிகள் பெருகப் பெருக மக்கள் இறைவனை மறப்பது இயல்பாகிறது. ஆகவே இறையுணர்ச்சியை வளர்க்க முற்படும் எந்தச் சங்கமானாலும் அதை வரவேற்கவே வேண்டும் என்ற நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. மேலும் நாங்கள் கிறிஸ்துவ மதத்தின் விரோதிகள் அல்ல. எந்த மதத்துக்கும் எதிரிகள் அல்ல. ஹரே கிருஷ்ணா இயக்கம் மத வேறுபாடுகளையெல்லாம் கடந்து நிற்கும் உயர்நிலை-'போஸ்ட்கிராஜுவேட் கோர்ஸ்'!''

''அப்படியானால் பட்டங்கள்கூட ஏதாவது வழங்குகிறீர்களா ?''

''ஓ! மாணவராகச் சேருகிறவர் கீதையிலும் ஈசோப நிஷத்திலும் தேறிய பிறகு 'பக்தி சாஸ்திரி' என்ற பட்டம் தருகிறோம். அதற்

கும் உயர்வாகப் படித்தறிந்தவர்களுக்கு 'பக்தி வைபவா', 'பக்தி வேதாந்தா' ஆகிய பட்டங்களும் வழங்கப்படுகின்றன. இந்த இயக்கத்தில் சேர்ந்து ஏழு ஆண்டுகளுக்குப் பிறகுதான் சன்னியாசம் பெறுவது பற்றி ஒருவர் யோசிக்க முற்படலாம். அதற்குரிய விசேஷத் தகுதிகளை அடைந்தவர் 'ஸ்வாமி' என அழைக்கப்படுவார். அவரது மனைவியைக் கவனித்துக் கொள்ளப் பிள்ளைகள் போதிய வயதடைந்திருக்க வேண்டும் என்பது மற்றொரு நிபந்தனை.''

''இப்படிக் கடுமையான பாட திட்டங்கள் வைத்தால் இந்த இயக்கத்தில் சேரப் பரவலான ஆர்வம் இருக்குமா ?''

''இயக்கத்தில் யார் வேணுமானாலும் சேரலாம். விசேஷப் பயிற்சியும் பட்டமும் பெற விரும்புவோருக்குத்தான் மேற்சொன்ன நிபந்தனைகள். இந்த இயக்கம் கூறுவதெல்லாம் ஒன்றேதான். செய்கிற காரியம் அனைத்தையும் ஆண்டவனுக்குப் பிரீதியாக்குங்கள் ; அவன் அருகில் இருப்பதாகவே எண்ணி எல்லாச் செயல்களிலும் இறங்குங்கள்; இதற்கு ஹரே கிருஷ்ணு என்று மனசுக்குள் நாமசங்கீர்த்தனம் செய்வது பெரிதும் உதவும் என்பதுதான். எங்களைப் போல் குடுமி வைத்துக் கொள்ள வேண்டும், பஞ்ச கச்சம் வைத்து வேஷ்டி அணிய வேண்டும் என்றெல்லாம் நிர்ப்பந்தம் ஏதும் கிடையாது. இது சோம்பலை வளர்க்கும் சித்தாந்தம் அல்ல. சுறுசுறுப்பாக அவரவர் கடமைகளைச் செய்கையிலேயே இறையுணர்வுடன் அவற்றைச் செய்யுங்கள் என்பதொன்றே எங்கள் வேண்டுகோள்.''

''இது வரவேற்கத்தக்கஓர் இயக்கம்தான்; வசதிகள் எல்லாம் கணக்கின்றிப் பெருக அதன் விளைவாக வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் போய் அமெரிக்க இளைஞர்கள் பலர் ஹிப்பிகளாக மாறிக் கெட்டழிகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். பலவித துர் நடத்தைகளுக்கு அடிமைகளாகிறார்கள் என்று அறிகிறோம். அதற்கெல்லாம் இந்த ஹரே கிருஷ்ணு இயக்கம் மருந்தாக விளங்கும் அல்லவா ?''

'' நிச்சயம். அமெரிக்காவில் மட்டுமல்ல; இந்தியாவிலும் இந்த இயக்கம் இளைஞர்கள் ஹிப்பிகளாகவும் நாக்ஸலேட்டுகளாகவும், மாறுவதைத் தடுக்கும். அடிப்படைக் காரணங்கள் வேறுபடினும் அமெரிக்காவில் போலவே இங்கும் வாலிப உலகம் பெரும் பிரச்னையாகத்தானே இருக்கிறது ?''

''அமெரிக்காவில் நிலவும் நிற வேற்றுமைப் பிரச்னைக்கும் இந்த இயக்கம் ஓரளவுக்கு உதவலாமே ?''

'' இந்த இயக்கத்தில் பல நீக்ரோக்கள் இருக்கிறார்கள். எல்லா நாட்டவரும் எல்லா மதத்தவரும் எல்லா நிறத்தவரும் இதில் அங்கம் வகிக்கிறார்கள். நாம் எல்லாரும் சகோதரர்கள். கிருஷ்ணனின் புதல்வர்கள் என்ற எண்ணம் ஏற்பட்டு விட்டால் அப்புறம் நாடுகளுக்கிடையில் எல்லைக்கோடு பிரச்னை ஏன் எழப் போகிறது ?''

'' ஆமாம், துப்பாக்கிகளை உருக்கி, ஜாலராக்களும், சப்ளாக் கட்டைகளும் தயாரிக்கலாம்'' என்றேன் அவநம்பிக்கை தொனிக்க.



ஏழு அங்குலம் நீளமுள்ள ஒரு பென்சிலால் கோடு இழுத்துக் கொண்டே போனால் 35 மைல் நீளமுள்ள கோடு போடலாம்! அந்தப் பென்சிலைக் கொண்டு சராசரி 45000 வார்த்தைகள் எழுதலாம். ஒரு பென்சில் செய்ய 40 விதமான பொருட்கள் தேவை. ஒரு மனிதன் தனிப்பட்ட முறையில் ஒரு பென்சில் தயார் செய்ய வேண்டுமானால் அதற்கு 400 ரூபாய் செலவாகும்!

-சரோஜா ராமச்சந்திரன்

'' அது சாத்தியமில்லாமல் போகாது '' என்றார் பாவநந்தாதாஸ் அழுத்தம் திருத்தமாக. ''வங்க அகதிகள் முகாமில் நாங்கள் சங்கீர்த்தன நிகழ்ச்சி நடத்தினோம். அன்று அதிகாலையில் பால் வழங்கும் இடத்துக்கு யாருமே போகவில்லை! பசி, ஆசை, பற்று, கோபம், விரோதம் எல்லாம் மறந்து ஆண்கள் பெண்கள், குழந்தை குட்டிகள் அனைவரும் கோஷ்டிகானத்தில் கலந்து கொள்ள வந்து விட்டார்கள். அதிகாரிகளுக்கு ஒரே வியப்பு!''

கல்கத்தா பல்கலைக் கழகத்தில் தத்துவம், ஆங்கிலம், பொருளாதாரம் அனைத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றுள்ள பக்திவேதாந்த ஸ்வாமி, இன்று கீதைத் தத்துவம் அமெரிக்கப் பல்கலைக் கழகங்கள் பலவற்றில் விசேஷ பாடமாகப் போதிக்கப்படுவது கண்டு மகிழ்கிறார். ஹரேகிருஷ்ண இயக்கத்தை அமெரிக்க அரசாங்கமே அங்கீகரித்து, கிறிஸ்துவப் பாதிரிமார்களை எப்படி யுத்த சேவைக்கு அழைப்பதில்லையோ, அதேபோல் இந்த சந்நியாசிகளையும் வற்புறுத்தாமல் விடுகிறது. இதுவும், புது தில்லியில் அண்மையில் பத்து நாட்களுக்கு மிகச் சிறப்பாக நடந்த ஹரே கிருஷ்ண விழாவும் அவருக்கு மேலும் நம்பிக்கையூட்டுவனவாக உள்ளன. சைதன்யரின் பரம பக்தரான இவர் ஜனவரி மாதம் சென்னை வர உத்தேசித்துள்ளார். மேலும், சைதன்யர் பிறந்த இடமான மாயாபுரியில் (நாடியா, மேற்கு வங்கம்) இந்த இயக்கத்துக்கு ஒரு சர்வதேசக் கேந்திரம் உருவாக்கத் திட்டமிட்டுள்ளார். இதற்கு நிதி வசூல் செய்ய ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி பம்பாயில் உதவிக் கச்சேரி செய்யவிருக்கிறார். இந்தக் கேந்திரத்தில் பெரியதோர் ஆலயமும் அயல் நாடுகளிலிருந்து வருவோருக்கு நல்ல ஜாகை வசதியும் இருக்கும்.

ஸ்ரீ பக்தி வேதாந்த ஸ்வாமி, 'ஏசு கிறிஸ்து பூரி ஜகந்நாதர் ஆலயத்தில் சில காலம் வாழ்ந்திருந்தார்; ஜகந்நாதரிடமிருந்துதான் அவர் ஆன்மீக பலம் பெற்றார்' என்று கூறுவதை நம்புவது பலருக்குக் கஷ்டமாக இருக்கலாம். ஆனால் அடுத்தாற்போல் அவர், 'பைபிள், குரான் போன்ற எல்லாப் பெரிய மத நூல்களும் ஒரே பேருண்மையைத்தான் வலியுறுத்துகின்றன; இவற்றில் மிகப் பழைமையானவை கீதையும் வேதங்களுமே' என்று சொல்வதை யாரால் மறுக்க முடியும் ?

ஹரே கிருஷ்ண இயக்கம் மேலும் மேலும் வலுப் பெற்று உலகம் முழுமையும் ஆட்கொள்ளட்டும். ஆண்டவன் அருள் இருந்தால் என்னதான் நடக்காது! — குட்டிகிருஷ்ணன்


இடுக்கண்
களைந்திடும் நட்பு போல்

வலியைப் போக்கிடும் 'ஆஸ்ப்ரோ'

வலியால் அவதிப்படும்போது விரைவில் நிவாரணம் பெற 'ஆஸ்ப்ரோ'வை நம்புங்கள். 'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோ–ஃபைன் செய்யப்படுகிறது. அதாவது, அது அதிவேகமாகக் கரைந்து அதிவேகமாகக் கிரகிக்கப்பட்டு, வலியை அதிவேகமாக வெளியேற்றிவிடுகிறது. சாதாரண வலிநிவாரணிகளைவிட இருமடங்கிற்கும் அதிகமான வேகத்துடன் 'ஆஸ்ப்ரோ' வேலை செய்கிறது என்பதை விஞ்ஞானரீதியான பரிசோதனைகள் நிரூபித்துள்ளன!


எனவே, வலியால் அவதிப் படும்போது, நீங்கள் நம்பக்கூடிய நிவாரணியை நாடுங்கள்—மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிட்டு உடனடி நிவாரணம் பெறுங்கள்.

கீழ்க் கண்டவைகளுக்கு மைக்ரோஃபைன்ட் 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள்: நோவு • தலைவலி • உடல்வலி • ஃப்ளு • ஜுரவேகத்துடன் கூடிய ஜலதோஷம் • மூட்டுவலி-தொண்டை அழற்சி-பல்வலி.

சாப்பிடும் அளவு: [illegible]து வந்தவர்கள்: இரண்டு மாத்திரைகள். தேவைப்பட்டால் மீண்டும் சாப்பிடவும்.


குழந்தைகள்: ஒரு மாத்திரை அல்லது உங்கள் டாக்டர் சொற்படி.





தாமத நிவாரணம்

பெரிய அனுக்கூறுகள் மெதுவாகக் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அடைய அதிக நேரமாகிறது. நீங்கள் அனாவசியமாக வலியால் அவதிப்படுகிறீர்கள்.



துரித நிவாரணம்

நுண்ணிய அனுக்கூறுகள் விரைவில் கிரகிக்கப்படுகின்றன. வலியின் இருப்பிடத்தை அதிவேகமாக அடைகின்றன. வலியை அதிவேகமாகப்போக்கி விடுகின்றன.

'ஆஸ்ப்ரோ' மட்டுமே மைக்ரோஃபைன் செய்யப்படுகிறது

அதிவேகமாக வலியை வெளியே இழுப்பதற்காக

நிகோலஸ் (N) தயாரிப்பு

A.G.43 TH


மூன்று மந்திரவாதிகள்
வாண்டுமாமா
15
தேனீ வழிகாட்ட, இளவரசர்களால் சிறை வைக்கப்பட்டுள்ள அவர்களின் சகோதரர் உள்ள அரண்மனைக்குப் போய், அங்குள்ள மூன்று மூலிகைத் தைல சீசாக்களையும் கொண்டு வருகிறது கழுகு.
புலியின் ஒரே அடியில் பெட்டி தூளாகிறது. அதனுள்ளே இருந்த ஆனந்தனின் உடல் மீது...
முதல் குடுவையின் மூலிகைத் தைலத்தைக் கழுகு கவிழ்க்க ஆனந்தனின் உடல் துண்டுகள் ஒன்று சேர்கின்றன. அடுத்த குடுவையிலுள்ள ஔஷத எண்ணெய் அவைகளுக்கு உயிரையும்....
மூன்றாவது குடுவையிலிருந்த மூலிகை எண்ணெய் ஆனந்தனின் உடலில் வலுவையும் வனப்பையும் ஊட்டுகின்றன.
என் அருமைத் தோழர்களே! எனக்கு மறு பிறவி அளித்த உங்களுக்கு நான் எப்படி நன்றி சொல்லுவேன்? உங்களால் உயிர் பெற்ற என்னைக் கொல்ல இனி யாராலும் முடியாது. என் கலாவை மீட்டுவர விடை கொடுங்கள்.
ஆனந்தன் மறுபடியும் கலாவின் முன்னால் போய் நின்ற போது அவள் வியப்பினால் திக்கு முக்காடிப் போனாள்.
நான் காண்பது கனவல்லவே? நீங்கள் எப்படிப் பிழைத்து வந்தீர்கள்?
அந்தக் கதையை அப்புறம் சொல்லுகிறேன். இன்றிரவு நீ ஒரு முக்கியமான காரியம் செய்ய வேண்டும்.


காளாமுகனிடமுள்ள அந்த அதிசயமான குதிரையைப் போல வேறொரு குதிரையை அடைவது எப்படி என்ற ரகசியத்தை அவனிடமிருந்து சாதுரியமாக அறிந்து கொள்ள வேண்டும்.
இவ்வளவு சுவையாகச் சமைத்துப் போடுகிறேனே, என்னிடம் நீங்கள் அன்பாகவே இருப்பதில்லை ம்... ஹும்...!
அன்பா? ஹா... ஹா... ஹா! அது என்ன என்றே தெரியாதே எனக்கு.
அது சரி, 'என் பலமெல்லாம் என் குதிரையிடம்தான்' என்பீர்களே. இம்மாதிரிக் குதிரை வேறு இவ்வுலகில் கிடையாதா?
இதையும் விடப் பெருமை வாய்ந்த குதிரைகள் பல இருக்கின்றன. 'அசுவ பாபா' என்ற ஒருவர் இருக்கிறார், நெடுந்தூரத்துக்கப்பால். நெருப்பு ஆற்றைக் கடந்து போக வேண்டும் அங்கே...
... மூன்று இரவுகள் அவரது குதிரைகளைக் காவல் காத்துக் கொடுத்தால் ஒரு குதிரையை வெகுமதியாகப் பெறலாம். ஆனால் அவர் இருப்பிடம் போவதோ, அவர் குதிரைகளைக் காப்பதோ இயலாத காரியம்.
அந்த நெருப்பு ஆற்றைக் கடப்பது எப்படி?
இந்தப் பேழையில் உள்ள மந்திரக் கைக்குட்டையின் மாய சக்தியால் நெருப்பாற்றைக் கடக்க முடியும். நெருப்பாற்றங் கரைக்குப் போய்...
மந்திர கைக்குட்டையை வலது கையில் ஏந்தி மூன்று முறை ஆட்டினால் ஓர் அபூர்வமான பாலம் தோன்றும். நெருப்பாற்றின் தகிப்புப் பாதிக்காத வகையில் அதன் வழியாக மறுகரை சேரலாம். அங்கு போனதும், கைக்குட்டையை இடக்கைக்கு மாற்றி மூன்று முறை ஆட்டினால் பாலம் மறைந்து போகும்.


அன்றிரவு காளா முகனுக்கு மதுவை ஏராளமாக வழங்கி அவனை நினைவிழக்கச் செய்து, கைக் குட்டைப் பேழையைக் கலாவதி கவர்ந்து கொண்டு காத்திருக்கும் அனந்தனிடம் விரைகிறாள்.
நெருப்பாற்றைக் கடக்க உதவும் மந்திரக் கைக் குட்டை இப் பேழையிலுள்ளது. வெற்றியுடன் விரைவில் திரும்பி வாருங்கள்.
இந்தக் கைக் குட்டைக்கு இத்தனை மகிமையா? விந்தையிலும் விந்தை... இதோ பாலம் தோன்றி விட்டது... ஆஹா!
இளைஞனே, நீ யார்? எதற்காக என்னைத் தேடி வந்திருக்கிறாய்?
நான் ஒரு நாட்டின் இளவரசன். உங்களிடமுள்ள மாயாஜாலக் குதிரைகளில் ஒன்றைப் பெறவே வந்திருக்கிறேன்.
அது அத்தனை சுலபமில்லையே! என் குதிரைகளை மூன்று இரவுகள் வெளியே கொண்டு போய் மேய்த்து வந்து லாயத்தில் சேர்க்க வேண்டும். ஒரு குதிரை காணாமல் போனாலும், அதோ பார், அது போல உன் தலையும் ஒரு கம்பத்தை அழகு செய்யும். வெற்றிபெற்றால் ஒரு குதிரை கிடைக்கும்.
தொடரும்

உங்கள் ஈறுகளைத் தேய்த்துக் கொடுக்கும் போதே, பற்களையும் சுத்தம் செய்ய ஸ்பெஷலாக உருவமைக்கப்பட்ட ஒரே டூத் பிரஷ்

போர்ஹென்ஸ்

டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ்



'96 TB-172 Tam

'சேலம் தொகுதி சட்டமன்றத்துக்கு ஜனநாயகக் கட்சியின் அபேட்சகராகத் தர்மலிங்கம் தேர்வு?' என்று கேள்விக் குறியுடன் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது.

தர்மலிங்கம் சேலத்தில் ஜனநாயகக் கட்சியின் ஸ்தாபகர். அக்கட்சி சேலத்தில் நன்கு வேரூன்ற ஆரம்ப காலத்திலிருந்தே உழைத்தவர். நல்ல மனிதர். சுயநலமில்லாத சுத்தமான மனிதர். ஆரம்பத்தில் அவருடன் அக்கட்சியில் இருந்தவர்கள் எல்லாம் ஆதாயமுள்ள அரசியல் கூடாரங்களாகத் தேடிப் பிடித்து, அவ்வப்பொழுது ஒதுங்கினர். தர்மலிங்கத்தை அப்படி எவ்விதச் சந்தர்ப்பச் சூழ்நிலையும் ஈர்க்கவில்லை. நடைபெற்ற இரண்டு பொதுத் தேர்தல்களிலும் அவர் சேலம் தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்கள் பிரதிநிதியாக அவர் சட்ட மன்றத்தில் தன்னலமின்றிப் பாடுபட்டார். அவரது பதவிக் காலத்தில் அவரது தொகுதிக்கு நிறையச் சேவை செய்தார்.

நடுவில் வந்த ஒரு பொதுத் தேர்தலில் அவர் நிற்கவில்லை. அவரது கட்சியும் தோற்றுவிட்டது. அதற்கடுத்த தடவை அவர் வேட்பாளராகத் தேர்வு செய்யப்படவே, ''இன்றையச் சூழ்நிலையை மனத்தில் கொண்டு ஒரு நல்ல முடிவுக்கு நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். ஆரம்பத்திலிருந்தே உங்களைச் சுற்றி உருவான திட்டங்களையும், நீங்கள் திட்ட வட்டமாக உங்கள் கட்சிக்காரர்களிடம் ஏதும் சொல்லாமல் இருந்து வந்ததையும் கவனித்தேன். அப்பொழுதே நான் தலையிடலாம் என்று எண்ணினேன். உங்கள் கட்சியின் தலைமை உங்கள் மேல் தீவிர நம்பிக்கை கொண்டுவிட்டபோது அதை நான் குறுக்கே நின்று தடுப்பானேன் என்று இருந்துவிட்டேன். நீங்களாவது இன்றைய 'ட்ரெண்டை' அனுசரித்துச் சாதுரியமாக விலகி நின்றிருக்க வேண்டும்'' என்று கூறினாள் தர்மலிங்கத்தின் மனைவியும், எல்.ஐ.எம். டாக்டருமான விசாலாட்சி.

''இன்றையச் சூழ்நிலை, இன்றைய அரசியல் என்கிறாயே, நீ எதை மனத்தில் கொண்டு பேசுகிறாய் என்று எனக்குப் புரியவில்லை. மக்கள் ஏதோ ஒரு மாறுதலை விரும்பலாம். அல்லது தீவிரமான ஒரு பிரசார மாயையில் சிக்கி மயங்கலாம்; அதற்காக ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு ஜனநாயகக் கட்சியின் கடமையைப் புறக்கணிக்க முடியுமா? வெற்றி தோல்விகளைப் பற்றி எடுத்த எடுப்பிலேயே சிந்திப்பது எந்த அரசியல் கட்சிக்கும், எந்த அரசியல் வாதிக்கும் உகந்ததல்ல. உன்னுடைய வாதத்தின் பிரகாரம் இன்றையச் சூழ்நிலையும், அரசியல் போக்கும், எனது கட்சிக்கும் எனது கொள்கைக்கும் எதிராகத் தீர்ப்புக் கூறுமானால், நான் அதை ஒரு ஜனநாயகத் தீர்ப்பாக ஏற்பேன். இதில் கொஞ்சம்கூடத் தயங்க மாட்டேன்'' என்றார் தர்மலிங்கம்.

தேர்தல் பிரசாரம் சூடு பிடித்தது. ஒலி பெருக்கிகள் முழங்கின. தத்தம் கட்சியின் கொள்கையைப் பிரசாரம் செய்ய ஆதரவாளர்களையும், அபிமானிகளையும் ரொம்பவும் கவர்ச்சிகரமான முறையில் சேர்த்துக் கொள்ள முயன்றனர். தர்மலிங்கத்தை எதிர்த்து ஆளும் கட்சியின் சார்பில் சிவசங்கரன் நின்றார். இது தவிர, சுயேச்சை வேட்பாளர்கள் நான்குபேர்கள் தனியாகப் போட்டியிட்டனர்.

விசாலாட்சி அழகாபுரத்தில் ஒரு பிரபல டாக்டர். அவளுடைய விடுதி மூலம் ஏழை எளியவர்களுக்கு மருத்துவ சேவையோடு பல பொதுநலத் தொண்டுகளும் செய்தாள். அவளை இந்த வகைப் பொதுநலத் தொண்டுகளில் ஈடுபடுத்தியது அவளுடைய கணவர் தான். வெறும் டாக்டராக மட்டுமல்லாமல் சமுதாயத்தினுட் புகுந்து பொது சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் ஏழை எளியவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற வைத்தார். இதனால் அழகாபுரம், அதைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் அவளுடைய சமூக சேவை நன்கு உணரப்பட்டபோது, அங்குள்ள மக்களின் அபரிமிதமான அன்பையும், ஆதரவையும் பெற்றாள். தர்மலிங்கம் எதிர்பார்த்தார், மனைவியின் உதவி இவ்விஷயத்தில் தமக்குக் கிடைக்கும் என்று! ஆனால் அவள் ஆளும் கட்சி அபேட்சகருக்காக வேலை செய்கிறாள் என்ற செய்தி அவரை இலேசான வியப்பில் ஆழ்த்தியது.

''இதைப் பார்த்தாயா அப்பா'' என்று அவர் முன் அந்த நோட்டீஸைக் கொண்டு வந்து கொடுத்தாள் தர்மலிங்கத்தின் மூத்த மகள் சுபா.

அவள் கொடுத்த நோட்டீஸில் ஒரு தேர்தல் பிரசார விளம்பரம் இருந்தது. உள்ளூர்ப் பேச்சாளர்களின் பெயர்களில் தம் மனைவியின் பெயரும் இருந்ததைக் கண்டு, அவர் தம் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்து கொண்டார். மகளைப் பார்த்து நகைத்தார் தர்மலிங்கம்.

''என்னப்பா சிரிக்கிறே? உனக்கு எதிராக அம்மா பிரசாரத்தில் இறங்கறது எனக்கு அவ்வளவாகப் பிடிக்கலே, அப்பா'' என்றாள் தர்மலிங்கத்தின் மகள் சுபா.

''சுபா! உனக்குக்கூட உரிமை உண்டு; சுதந்திரம் உண்டு, உன்னுடைய கருத்துக்களைச் சொல்ல. உனக்கும் அரசியல் சுதந்திரம் உண்டு. நம் நாட்டு அரசியல் சாஸனமே





இருபத்தோரு வயது வந்தோருக்கு வாக்குரிமை என்பதில் தொடங்குகிறது. அதிலும், உன் அம்மாவைப் போன்ற பொறுப்பு வாய்ந்த டாக்டருக்கு, சமூக சேவகிக்கு, தன் அபிப்பிராயங்களைச் சொல்லப் பூரண உரிமை உண்டு அம்மா. கணவன் ஒரு கட்சியின் அபேட்சகராக இருக்கிறாரே என்பதற்காக எதிர்க் கட்சிக்கு வேலை செய்யக் கூடாது என்பதில்லையே. அவளுக்குப் பிடித்தமான கருத்தை அவள் பற்றி நிற்கலாம். இதில் கணவன், மனைவி, சகோதரன் என்ற குறுகிய எண்ணங்களுக்கே இடமில்லை'' என்று கூறி விட்டு வாசலில் வந்து நின்ற தமது கட்சியின் பிரசார வாகனத்தில் ஏறிக்கொண்டு வெளியே கிளம்பி விட்டார்.

இரவு!

தர்மலிங்கம் தமது அறையில் மகள் சுபாவை உட்கார வைத்துக் கொண்டு மறுநாள் செய்தித் தாளுக்கான ஓர் அறிக்கையை 'டிக்டேட்' செய்து கொண்டிருந்தார்.

வாசலில் கார் ஒன்று வந்து நின்று, பின் புறப்படும் ஓசை கேட்டது. விசாலாட்சி உள்ளே நுழைந்தாள்.

''பிரசாரக் கூட்டங்கள் இன்று ரொம்ப அதிகமோ?'' — அறைக்குள் நுழைந்த மனைவியைப் பார்த்துக் கேட்டார் தர்மலிங்கம்.

''எட்டுக் கூட்டங்கள்... ரொம்பக் களைப்பாக இருக்கு'' என்றாள் மனைவி.

''சுபா, போம்மா... அம்மாவுக்குச் சாப்பாட்டை இங்கேயே கொண்டுவா, சாப்பிடட்டும்...''

மகள் எழுந்து உள்ளே போய்விட்டாள்.



ஒலிபெருக்கிகள் ஓய்ந்து விட்டன!



— மகரிஷி

''மணி ஒன்றாகப் போகிறதே, நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? உங்களுக்குக் கூட்டம் ஒன்றும் இல்லையா?''

''ஏன் இல்லை? இரண்டு முக்கிய கூட்டங்களில் பேசிவிட்டு வந்தேன். நாளைய பேப்பருக்கு முக்கிய அறிக்கை ஒன்று கொடுத்தாக வேண்டும். அதுதான் சுபாவை உதவிக்கு வைத்துக் கொண்டு எழுதிக் கொண்டிருக்கிறேன்.''

அவரது கட்சியின் மத்திய கமிட்டியிலிருந்து தேர்தலுக்கான செலவுக்குப் போதிய தொகை அவருக்கு வரவில்லை. ஏதோ ஒரு தொகை வந்தது. அதுவும் ரொம்பக் குறைவான அளவே இருந்தது. ஊரில் கிடைத்த நன்கொடைகளிலிருந்தும், மற்ற சிலரிடமிருந்து வந்த தனிப்பட்ட நன்கொடைகளைக் கொண்டும் அவர் தமது தேர்தல் செலவுகளைச் செய்து கொண்டிருந்ததால் ரொம்பவும் சிக்கனத்தைக் கையாள வேண்டியிருந்தது. அதிகமான கூட்டங்களைவிட நேரிடையாக வோட்டர்களைச் சந்தித்து ஓட்டுகளைச் சேகரிப்பதில் கவனம் செலுத்தினார். இவையெல்லாம் விசாலாட்சிக்கும் தெரியும். அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஆளும் கட்சி அபேட்சகரான சிவசங்கரனுக்கு இந்தப் பலவீனம் இல்லை. அவர் ஆளும் கட்சி உறுப்பினராக இருந்ததால் பல சௌகரியங்கள் செய்து கொள்ள முடிந்தது. வாய்ப்பும் இருந்தது. தேர்தலுக்கான செலவுக்குப் பணமும் ஏராளமாக வந்து கொண்டிருந்தது. ஆளும் கட்சியினரிடம் ஏராளமான சலுகைகளைப் பெற்ற பல பெரிய புள்ளிகள் அவர் கேட்காதபோதே தொகைகளைக் கொண்டு வந்து கொட்டிவிட்டுப் போனார்கள். இதுவும் விசாலாட்சிக்குத் தெரியும். சிவசங்கரன் தர்மலிங்கத்தைப் போல் ஓட்டர்களை நேரில் சந்திப்பதை மட்டுப்படுத்திக்கொண்டு ஆடம்பரமான மேடைகளையும் கவர்ச்சிகரமான சுவரொட்டிகளையும் அதிகம் நம்பினார். ஆங்காங்குள்ள சில முக்கியமானவர்களையும், யாரால் அதிக வோட்டுச் சேகரிக்க முடியும் என்று கேள்விப்படுகிறாரோ அவர்களையும் மட்டுமே ரொம்பப் பக்குவமாகத் தம் அருகில் இருத்திக் கொண்டு, சாதிக்க வேண்டியவைகளை அவர்கள் மூலமாகவே சாதித்துக் கொண்டுவிடவும் தீர்மானித்தார்.

''அவர் சொல்லி விட்டார். நானும் அவருடன் சேர்ந்து அவருடைய வெற்றிக்குப் பாடுபட வேண்டுமாம். குறிப்பாக மாதர்களின் வாக்குகளைச் சேகரிக்க நான் உதவ வேண்டும் என்று கூறியிருக்கிறார்'' என்றாள் சிவசங்கரனின் மனைவி ஜெயம்மாள்.

சுபா வேண்டுமென்றே ஜெயம்மாளின் வாயைக் கிளறினாள்.

''உங்களுக்குக் கட்சி, கொள்கை, சமூக சேவை இவைகளில் அதிக ஈடுபாடுஉண்டோ?''

''அதெல்லாம் ஒன்றுமில்லை, சுபா. எனக்கு இதெல்லாம் ஒன்றும் பிடிக்காது. ரொம்பக் குறிப்பாகச் சொல்லப் போனால் அவரோட கட்சிக் கொள்கை மேலே எனக்குத் துளிக்கூட நம்பிக்கை கிடையாது.''

சுபா சிரித்துக் கொண்டே தன் தாயாரைப் பார்த்தாள். பிறகு மீண்டும் கேட்டாள்:

''உங்கள் கணவரின் கொள்கை மேல் நம்பிக்கைகூட வைக்காமல் உங்கள் கணவருக்காக உங்களால் எப்படித் தேர்தலில் வேலை செய்ய முடிகிறது?''

''நான் 'முடியாது' என்றுதான் சொல்லிப் பார்த்தேன். அவருடைய கட்சிக் கொள்கையைப் பற்றி 'கிரிடிஸைஸ்' பண்ணினேன். என் வாய்க்குப் பூட்டுப் போட்டுவிட்டார். அதோடு ரொம்பக் கண்டிப்போடும் கூறிவிட்டார். தேர்தலுக்காக என்னால் ஆனதைச் செய்ய வேண்டுமாம். உங்க அம்மாவைப் போல எனக்கு வெளியில் அவ்வளவு பழக்கமில்லாவிட்டால்கூட, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வெளியே வரவேண்டியதாகி விட்டது. கணவர் ஒரு விஷயத்தில் தீவிரமாக இருக்கிறபோது, அவருடைய முயற்சிகளுக்கு உறுதுணையாக பக்கத்தில் நிற்பதுதானே நம் கடமை, சுபா? அவருடைய கட்சிக் கொள்கை பிடிக்கவில்லை. அது பிடிக்கவில்லை என்பதற்காக நாம் விலகி நின்றுவிட முடியுமா? நாளைக்கு அவர் தேர்தலில் வெற்றி பெற்றால் அந்தச் சந்தோஷம் நமக்கு இல்லாமல் போய்விடுமா? கணவர் சந்தோஷத்தைவிட ஒரு மனைவிக்குத் தனிப்பட்ட முறையில் வேறு என்ன சந்தோஷம் இருக்க முடியும்?''

''நூற்றுக்கு நூறு நீங்கள் சொல்வது உண்மை'' என்றாள் சுபா சிரித்துக்கொண்டே.

மூன்று நாட்கள் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வீடுதிரும்பினார் தர்மலிங்கம். அந்த மூன்று நாட்களும் தந்தையின் அருகில் இருந்து கவனித்துக் கொண்டாள் சுபா. மனைவி வெளி அலுவலாகச் சுற்றிக்கொண்டிருப்பதால், மருத்துவ மனைக்கு வரும் நேரத்தில் மட்டும் கணவனைப் பார்த்து, தேவையானவைகளைக் கவனித்துச் சென்றாள்.

ஒரு தேர்தல் கூட்டத்தில் நேர்ந்த கலவரத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த ஆட்கள் வன்முறையில் இறங்கினர். கற்களை வீசினர். மேடையில் பேசிக் கொண்டிருந்த தர்மலிங்கத்துக்குத் தலையில் பலத்த அடி.

நான்கைந்து நாள் ஓய்வுக்குப் பின் அவர் மீண்டும் தம் தேர்தல் வேலைகளில் முழு மூச்சுடன் இறங்கினார். சுபா தடுத்துப் பார்த்தாள்.


''நான் தொடர்ந்து இப்படி இருந்தால் எனது தொண்டர்கள் சோர்ந்து போய்விடுவார்கள். அந்தச் சோர்வுக்கு இடம் தரக் கூடாது அல்லவா? நான்தான் இப்பொழுது பூரண குணம் அடைந்து விட்டேனே!'' என்று கூறித் தேர்தல் பணியில் இறங்கிவிட்டார்.

முதல் நாள் பொது மேடைகளில் விசாலாட்சி பேசிய பேச்சு முழு அளவில் பத்திரிகைகளில் வெளியாகி யிருந்தது. தனது கட்சியின் கொள்கைகளை மிக அழகாக, தெளிவாக அவள் மேடைகளில் பேசியிருக்கிற பாங்கைப் பார்த்த தர்மலிங்கத்துக்குப் பெருமை தாங்கவில்லை. ''எவ்வளவு அற்புதமாகப் பேசியிருக்கிறாள் பார்த்தாயா, உன் அம்மா!'' என்றார் மகள் சுபாவிடம்.

''அம்மா உங்களுக்கு உதவியாக இருந்தால் உங்களுக்கு எவ்வளவு தெம்பாக இருக்கும்!'' என்று குழந்தைத்தனமாகக் கேட்டாள் சுபா.



Shilpi JI 218/71 TAM



''ஜன்னல் கம்பியை வளைக்காமல், ஒடிக்காமல், வெட்டாமல் எப்படியோ திருடன் உள்ளே புகுந்து கொள்ளை அடிச்சிருக்கான் சார்! நீங்கள்தான் துப்புக் கண்டுபிடிக்கச் சொல்லணும்.''

தர்மலிங்கம் அன்றைய தினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொதுக் கூட்டங்களில் கடைசிக் கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு ஒரு பிரசார வானில் வீடு திரும்ப ஏறும்போது அவசரம் அவசரமாக ஒரு பத்துப் பதினைந்து பேர்கள் காரைச் சூழ்ந்து கொண்டு அந்தச் செய்தியைக் கூறினர். அந்தத் தொகுதியில் தமக்காக வேலை செய்யும் கட்சியின் தீவிர தொண்டர் ஒருவரிடம், ''இம்மாதிரி வன்முறைகளில் நமது ஆட்கள் இறங்க வேண்டாம் என்று சொல்லுங்கள். வன்முறைகளை நான் அறவே வெறுக்கிறேன். அவர்கள் என்னைக் கல்லால் அடித்துக் காயப்படுத்தினார்கள் என்பதற்காக நாமும் அதைச் செய்ய வேண்டுமா? நல்லவேளை! காரின் கண்ணாடியைச் சேதப்படுத்தியதோடு நின்று விட்டது. அந்தமட்டில் இந்தச் சம்பவமே இத்தேர்தலில் நடைபெற்ற கடைசி அசம்பாவிதமாக இருக்கட்டும்'' என்று கூறிவிட்டு வானில் ஏறிக் கொண்டு வீட்டுக்கு விரைந்தார். வந்ததும் வராததுமாக ''சுபா, பேப்பரையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு வந்து இப்படி உட்கார்'' என்றார்.

சுபா உடனே பேனாவுடன் உட்கார்ந்தாள்.

மாலை சிவசங்கரன் தனது ஜனநாயகக் கட்சி அநுதாபிகளின் வன்முறைக் கும்பலில் அகப்பட்டதையும் அவருக்கு எவ்வித அசம்பாவிதமும் ஏற்படாமல் போனதற்காக நிம்மதியும், காரின் கண்ணாடிகள் உடைந்ததற்கு அநுதாபத்தையும் தெரிவித்து, இனி இம்மாதிரி வெறித்தனங்களில் இறங்க வேண்டாம் என்றும், அன்று ஏற்பட்ட நிகழ்ச்சிக்குத் தாம் உண்மையில் வெட்கப்படுவதாகவும் கூறி ஓர் அறிக்கையைக் கூறி முடித்து விட்டுத்தான் உணவருந்த உட்கார்ந்தார்.

விசாலாட்சி உள்ளே நுழையும்போதே கோபத்துடன் வந்தாள். பெரிய ரத்தக் களரியே ஏற்பட்டு விட்டமாதிரி சப்தம் போட்டாள். தர்மலிங்கம் வெறுமனே அமர்ந்திருந்தார். சுபா தந்தையின் அறிக்கையைத் தாயாரிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னாள்.

''நாளைக்கு இது பத்திரிகைகளில் வரும். நோட்டீஸாகவும் அடித்து விநியோகிக்கப் போகிறேன்'' என்றார் தர்மலிங்கம்.

''ஏம்பா, சிவசங்கரனின் ஆளும்கட்சித் தொண்டர்களால் தாக்கப்பட்டு நான்கு நாட்கள் மருத்துவ மனையில் நீ இருந்த போது இதற்காகச் சிவசங்கரன் வருத்தம் தெரிவித்தோ, தமது தொண்டர்களைக் கண்டித்தோ அறிக்கை ஏதும் விட்டதாகத் தெரியவில்லையே!'' என்றாள் சுபா தாயாரைப் பார்த்துக் குறும்புடன் சிரித்தபடி.

''அவர் ஆளும்கட்சி வேட்பாளர். தம் தொண்டர்களைக் கண்டிப்பதைக் கண்ணியக் குறைவாக நினைக்கலாம் அல்லவா?'' என்றார் தர்மலிங்கம்.

''உண்மையான ஜனநாயக வாதியாக இருந்தால் அப்படிச் சிவசங்கரன் செய்திருக்க வேண்டும்'' என்றாள் சுபா.

''உங்களுடைய 'டிரெயினிங்கா?''' என்றாள் கணவன் பக்கம் திரும்பி விசாலாட்சி.

''ஐயையோ!... என்மேல் பழியைப் போடாதே. உன் கட்சிப் பக்கம் வேண்டுமானாலும் அவளை இழுத்துக்கோ. அவளிடம் என் கட்சி பற்றி நான் ஏதாவது பேசியிருப்பேனா, கேள்!'' என்றார் பயந்தவர் போல.

''நான் எந்தக் கட்சியும் இல்லை. நான் நடுநிலைவாதி'' என்றாள் சுபா.

தேர்தல் பிரசாரங்கள் உச்ச கட்டத்தை அடைந்தன.

இரண்டு நாட்கள் உடல் நலமின்றி வீட்டுடன் சிவசங்கரன் படுத்துக் கொண்டு விட்டார். அவருடைய மனைவி பல முக்கிய தொகுதிகளுக்கெல்லாம் விசாலாட்சியுடன் நேரில் சென்று வாக்காளர்களைச் சந்தித்துக் கணவருக்காக வாக்குச் சேகரிப்பதில் உற்சாகம் காட்டினாள்.

விசாலாட்சியுடன் தனித்துப் பேசும்போதெல்லாம் கணவரின் வெற்றிக்காகப் பாடுபடும்போது, கொள்கை, கருத்து வேறுபாடு இவையெல்லாம் அர்த்தமற்றவை என்பதை வற்புறுத்தியே வந்தாள். இதிலிருந்து, அவள் சிவசங்கரனின் அரசியல் கொள்கையில் கொஞ்சம்கூட சார்பற்றவள் என்பதை அறிந்தாள். அது அவளுக்குக் குறையாகவே தோன்றியது. ஆனால் கணவன் என்கிற எண்ணம் வருகிறபோது மற்ற வேற்றுமைகளை மறந்து, மனைவி என்ற ஒரு கடமையின் பிடிப்புக்குள் தன்னை உட்படுத்திக்கொண்ட விதம் விசாலாட்சியின் மனத்தில் தன்னைப் பற்றியதொரு தாழ்வுணர்ச்சியைத் தூண்டிக் கொண்டிருந்தது.

வழக்கத்துக்கு மாறாக அன்று இரவு எட்டு மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்து விட்டாள் விசாலாட்சி.

தேர்தல் முடிந்தது. வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை தொடங்கி, முடிந்தது. அறுநூற்று நாற்பது வாக்குகள் வித்தியாசத்தில் தர்மலிங்கம் தோற்றுவிட்டார்.

ஆளும் கட்சியின் சார்பில் போட்டியிட்ட சிவசங்கரன் வெற்றியடைந்தார்.

இலேசான சோர்வுடன் உள்ளே நுழையும் போது மனைவி விசாலாட்சி எதிர்ப்பட்டாள். ஆழ்ந்த மன வேதனையுடன் மனைவிக்குப் பின்னால் நின்ற சுபாவைப் பார்த்தான்.. மேஜை மேல் ஒரு பெரிய ரோஜா மாலை வாழை இலையில் சுற்றி வைக்கப்பட்டிருந்தது.

சில கணங்கள் அந்த மாலையின் மேல் அவர் கண்கள் அசைவற்றுப் பதிந்தன. அவர் அறையில் நடுநாயகமாக மாட்டப் பட்டிருந்த இரண்டு அரும் பெரும் தலைவர்களது படங்களின் மேல் பார்வையைத் திருப்பினார். மனச் சோர்வை அகற்றிக் கொள்ளவும் மனோ திடம் பெறவும் முயன்றவர்போல், அவர் கண்கள் அப்பெரும் தியாக சீலர்களின் படங்களில் பதிந்தன.

ஒன்று மகாத்மா காந்தி.

மற்றொன்று மூதறிஞர் ராஜாஜி.

நாடு, சமுதாயம், தேசியம், ஜனநாயகம் என்கிறபோதெல்லாம் எந்த உணர்வை எங்கிருந்து இதுவரை பெற்றுக் கொண்டிருந்தாரோ அதே உத்வேக உணர்வை இப்பொழுதும் அங்கிருந்து பெற்று விட்டார்.

''விசாலாட்சி, புறப்படு. சிவசங்கரனை நேரில் சென்று பாராட்டி விட்டு வருவோம். வாம்மா சுபா. மூவருமாகப் போகலாம். மாலைகூட அவருக்காக வாங்கித் தயாராக வைத்திருப்பது போல் இருக்கிறதே!'' என்றார், எதையோ புரிந்து கொண்டும், அதையே கேலி செய்து கொள்வதும் போல.

''நான் வரவில்லை. நீங்கள் போய் வாருங்கள்.''

''யாருடைய வெற்றிக்காக நீ நாளெல்லாம் பாடுபட்டாயோ, அந்த வேட்பாளரை நேரில் சென்று பாராட்டிவிட்டு வரலாம் என்றால் ஏன் தயங்குகிறாய்? அவரைப் பாராட்ட வேண்டியது நமது கடமை. குறிப்பாக எனது கடமை. நீ வரவில்லை என்று கூறுவதற்குக் காரணம் எனக்குப் புரியவில்லை.''

விசாலாட்சி மௌனமாக நின்றாள்.

சுபாவுடன் தர்மலிங்கம் காரில் ஏறி உட்கார்ந்தார். சுபா மாலையைக் காரின் பின்புறம் வைத்தாள். கார் புறப்படும் நேரத்தில் விசாலாட்சியும் வந்தாள்.

மனைவியின் இந்தத் திடீர் மாறுதலுக்கான காரணத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. மகள் சுபாவைப் பொருள் பொதியப் பார்த்துப் புன்னகை மட்டும் செய்தார்.

மிகுந்த தோழமை உணர்வுடன் சிவசங்கரனுக்கு மாலை அணிவித்துப் பாராட்டிவிட்டுப் புறப்படும்போது விசாலாட்சியும் புறப்பட்டுவிட்டாள்.

சிவசங்கரனின் வீட்டில் மாலைகளும் பாராட்டுதல்களும் குவிந்தன. தர்மலிங்கத்தின் வீட்டிலோ, தோல்வி கண்ட நெஞ்சங்களில் ஏக்கப் பெருமூச்சுக்கள் அனுதாபங்களாக, ஆறுதல் வார்த்தைகளாகக் குவிந்து கொண்டிருந்தன.

இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்க இப்பொழுதுதான் விசாலாட்சிக்குச் சற்று ஓய்வு கிடைத்தது.

ஒலிபெருக்கிகள் முழங்கிய முழக்கத்தில் ஓர் ஆழமான மனிதாபிமானியாகக்கூடத் தன்னால் இருக்க முடியாததற்காக அவளுள் ஒரு வெட்க உணர்வு மெதுவாக உருப் பெற்றுக் கொண்டிருந்தது.

சிவசங்கரனைப் பாராட்டியவர்கள் அத்தனை பேரும் அவர் மனைவியையும் பாராட்டினார்களே! அரசியல் ஈடுபாடோ, கொள்கைப் பற்றோ, ஒரு தீவிரமான அனுதாபியாகவோ கூட இல்லாமல் வெறும் மனைவி என்ற பந்தத்தின் அடிப்படையில் எழுந்த மரியாதையுடன் கடமையுணர்வாக, கணவனுக்காகச் சேவை செய்த ஜயம்மாளை எண்ணியபோது விசாலாட்சிக்குத் தன்னை ஓர் ஆத்ம பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளும் கால கட்டம், ரொம்பக் காலம் தாழ்ந்து போய் விட்டதாக உணர்ந்தாள்.

மற்ற தொண்டர்களின் உதவியோடு மனைவியின் பூரண ஒத்துழைப்பினால்தான் தான் வெற்றி பெற்றதாக சிவசங்கரன் கூறிக்கொள்வதும், 'அவர் சந்தோஷத்தைவிட எனக்கு வேறென்ன சந்தோஷம் இருக்கப் போகிறது? கட்சியாவது, கொள்கையாவது? அதெல்லாம் இரண்டாம் பட்சம்' என்று ஜயம்மாள் சொல்வதும், முகம் மலரக் கணவன் அருகில் நின்றவண்ணம், கணவரின் வெற்றியில், தனக்குண்டான பங்கைப் பூரிப்பான புன்னகையின் மூலம் பிரகடனப் படுத்திக் கொள்ளும் உரிமை, இவை எல்லாமே விசாலாட்சியின் அறநெறி நினைவுகளை மட்டுமல்ல, மனச் சாட்சியையும் உலுக்கி விடுவதற்கே என்று தோன்றின.

அசதியுடன் அமர்ந்திருந்தார் தர்மலிங்கம். இடையறாத உழைப்புக்குப் பின் உடல் பூரண ஓய்வை நாடியது.

கணவரின் கால்மாட்டருகில் வந்து மௌனமாக அமர்ந்தாள் விசாலாட்சி.

''நீங்களாவது என்னைத் தடுத்திருக்கலாம். உங்களுக்காக உழைக்கப் பணித்திருக்கலாம். கொள்கை பிடிக்கவில்லை என்று கூறி ஒதுங்கிய மனைவியைக் கண்டித்துத் தன் அருகில் இருக்கச் செய்து கொண்ட சிவசங்கரன் போல்'' என்று உள்ளத்து ஆதங்கம் வெளிப்படப் பேசினாள் விசாலாட்சி.

''நான் சிவசங்கரன் இல்லையே, தர்மலிங்கம் ஆயிற்றே!'' என்றார் அவர்.

''நான் முழுவதும் உங்கள் தோல்விக்காக உழைத்து விட்டு இன்று சிவசங்கரனின் வெற்றிக்காகச் சந்தோஷப்பட முடியவில்லையே!'' விசாலாட்சியின் கண்கள் கலங்கின.

''நீ இன்னும் சரியான அரசியல்வாதியாகவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. ஒலிபெருக்கிகள் கொடுத்த வெறும் இரைச்சலிலிருந்து உத்வேகம் பெற்றதே இதற்குக் காரணமாக இருக்கலாம். நீ யாருடைய வெற்றிக்காக உழைத்தாலும் பரவாயில்லை. உனக்குப் பூரண கருத்துச் சுதந்திரம் இருக்கிறது...''

''மீண்டும் அதையே கூறி, உங்களுக்குள்ள உரிமையை மறைக்கப் பார்க்காதீர்கள். நான் உங்களுக்கு வீட்டில் கூட எதிர்க் கட்சி வேட்பாளரின் பிரதிநிதியாகவே செயல்பட்டு விட்டேன்.''

''அது நீ மேற்கொண்டிருந்த பணியில் நீ காட்டிய அந்தரங்க சுத்திக்கு ஓர் எடுத்



பரிசு பெறும் பாட்டி ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி ஜயராமன் ஜட்னி, ஒரிஸ்ஸா.

அழகுப் பாட்டி

3-10-71 கல்கி இதழில் வெளியான அறிவிப்பு :

உலகிலேயே மிகவும் அழகான பாட்டி எனக் கருதப்படுபவர்: எலிஸபெத் டெய்லர்!

- நியூஸ் வீக் - முத்து

உங்கள் வீட்டுப் பாட்டி எப்படி? ஆட்சேபணை இல்லை என்றால் புகைப் படம் அனுப்புங்கள்.

பரிசும் பரிசு பெறும் பாட்டி அலமேலு அம்மாளும், பேத்தி எழுதிய வசன கவிதையும் :

பணிவழகு

மண நாள் முதல்
மனையினில் இன்றுவரை
கணவர் கட்டளையேற்று,
கடுகும் பிறழாமல்
அனைத்து ஆணைகளையும்
அகம் சுருக்காம லேற்று,
அதன் மூலம் அகிலத்தில்
ஆண்டவன் பணிசெய்து
அழகு பெற்று விளங்கும்,
என் பாட்டியின்
எழிலெதிரே,
'எலிஸபெத் டெய்லர்'தான்
எந்த மூலை?

— குமாரி ஜெயந்தி, சென்னை



துக்காட்டு. அதற்காக நீ மட்டுமல்ல, நானும் கூடப் பெருமைப்படலாம்.''

''சுபாவின் அளவுகூட நான் விவேகம் பெறுமல் அலட்சியமாக இருந்து விட்டேன். நீங்கள் மண்டையில் அடிபட்டபோதோ, உடல் நலமின்றியே தேர்தல் வேலைகளில் ஈடுபட்ட போதோகூட, உங்கள் மனைவி என்ற எண்ணமின்றி எதிர்க் கட்சிக்காரியாகவே இருந்து விட்டதை நினைக்கிறபோது எனக்கே வெட்கமாக இருக்கிறது.''

''தேர்தல்காலச் சில்லறைச் சம்பவங்களாக அவைகளை மறந்துவிட வேண்டும் விசாலாட்சி. இதை ஒரு தனிப்பட்ட மனிதரின் விருப்புக்கு உட்படுத்துவதை நான் விரும்பவில்லை'' என்றவர் நீண்ட நேர மௌனத்துக்குப்பின் மனைவியின் முகத்தைக் கூர்மையுடன் நோக்கினர்.

''விசாலாட்சி, ஒன்றை மட்டும் அன்பு கூர்ந்து மனத்தில் இருத்திக்கொள். நீ என் அரசியல் கொள்கைகள் மேல் உண்மையான வெறுப்புற்று, சிவசங்கரனின் கட்சிக் கொள்கைகள் மேல் மனப்பூர்வமான பற்றுதல் வைத்து எதிர் முகாமுக்குப் போயிருந்தாலும் என் கொள்கை என்பது ஒன்றையேதான் பற்றி நிற்கிறது. நான் தனி மனிதப் பண்புகளை மதிப்பவன். தனி மனிதப் பண்புகளைப் புறக்கணிக்க எவ்வளவோ முயற்சிகள் செய்யலாம் எனினும், தனி மனிதன் என்பவன் ஓர் அழுத்தம் இருத்தமான யதார்த்த உண்மையாகவே இருந்து வருகிறன் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். ஒலிபெருக்கிகளின் முன் நிற்கு முன்னரே நான் இதைத் தெரிந்து கொண்டவன். ஒலிபெருக்கி ஓய்ந்த பின், இந்த யதார்த்த உண்மை பற்றி நீ சிந்திக்கத் தொடங்கினல், அது உன் அரசியல் சிந்தனையின் நல்ல ஆரம்பமாக அமையக்கூடும்'' என்ருர் அமைதியுடன்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி டாக்ஸியில் வந்திறங்கிய பானுவையும் சமையற்காரன் வரதனையும் பார்த்து ஆச்சரியத்துடன் வரவேற்றார்கள், பானுவின் பெற்றோர் விசாலமும் சீனிவாசனும்.

பானுவின் தங்கை இந்துவும் தம்பி கணேஷும், ''வாடா! வரதா!'' என்று சகோதரியைக் காட்டிலும் வரதனுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

வரதன் பதிலே சொல்லாமல் விசாலம்—சீனிவாசன் கால்களில் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து எழுந்தான்.

''மகராஜனாக, தீர்க்காயுசாக இருப்பா!'' என்று ஆசீர்வதித்தாள் விசாலம்.

''டேய் இடியட்! பெண்ணைப் பார்த்தாயாடா!'' என்று கேட்டான் கணேஷ்.

''உன்னை விட அழகாடா?'' என்று நையாண்டியுடன் கேட்டாள் இந்து.

ஏற்கெனவே கோணலாக இருந்த தன் முகத்தை வெட்கத்தினால் இன்னும் சற்றுக் கோணலாக்கிக் கொண்டான் வரதன்.

''சொல்லேண்டா வாயைத் திறந்து!'' என்று சற்று அதட்டினாற்போல் சொன்னாள் விசாலம்.

''அப்பா எல்லாம் பார்த்து நிச்சயம் பண்ணி எழுதிவிட்டார் மாமி! நான் என்ன சொல்றது? நீங்களும் கட்டாயம் துறையூர் வரணும் மாமி! நீங்கதான் எனக்கு அம்மா'' என்று சொல்வதற்குள் வரதனுக்கு உணர்ச்சி மிகுதியால் தொண்டையை அடைத்துக் கொண்டது.

பதினைந்து வருடங்களாக வீட்டுப் பையன் போலவே வளர்ந்த அவன் கல்யாணத்துக்கு விசாலமும் போவது என்ற முடிவுடன் மேற்கொண்டு கடைக்குப் போய் துணி வாங்குவதில் சுறுசுறுப்புடன் வேலை செய்தனர்.

விசாலத்துக்கு முதன் முதலில் வரதன் வீட்டு வேலைக்கு வந்தது நினைவுக்கு வந்தது. பதினைந்து வருடங்களுக்கு முன் ஒருநாள் காலை வேளை. விசாலம் சமையலறையில் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள்.

''கைக்கு ஒத்தாசைக்கு ஒரு பையனோ, பெண்ணோ இருந்தால் கொஞ்சம் மூச்சுவிட முடியும். சிறுமாத்தூர் நாயுடு, 'ஒரு பையன் இருக்கிறான், கொண்டு வந்து வேலைக்கு அமர்த்துகிறேன்' என்று சொல்லிப் பத்துநாட்களுக்கு மேலாகிறது. ஆளையே காணோம்'' என்று அலுத்துக் கொண்டே காரியங்களில் பரபரத்தாள் விசாலம். அவள் சொல்லி வாய் மூடுமுன் ''விசாலம், சீக்கிரம் வா! நாயுடு வந்தாச்சு. உனக்கு ஒரு பையனும் வந்தாச்சு!'' என்று இரைந்து ஆர்ப்பரித்த சீனிவாசனின் குரல் கேட்டு உள்ளே வேலையாயிருந்த விசாலத்திலிருந்து அவசரம் அவசரமாய்ப் பள்ளிக்குப் புறப்பட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகள் வரை வாசற்பக்கம் விரைந்தார்கள்.

வாட்டசாட்டமான நாயுடு பத்து அல்லது பன்னிரண்டு வயதுடைய ஒரு நோஞ்சான் பையனுடன் நின்று கொண்டிருந்தார்.

மாங்காய்த் தலையும் கோணல் முகமும் கிள்ளி எடுக்கச் சதையில்லாத உடம்புமாக அந்தப் பையனைப் பார்க்கவே சற்று அருவருப்பாகத்தானிருந்தது. இந்த அழகில் நெற்றியிலும் உடம்பிலுமாகப் பன்னிரண்டு திருமண்கள் அழுது வடிந்தன. செக்குப் பிடித்த எண்ணெயே காணாத தலைமயிரைக் குடுமியாக முடிந்திருந்தான். சோப்பு, சலவை இரண்டும் காணாத அவனது நாலு முழ வேஷ்டி நீர்க்காவி ஏறி முழங்காலுக்கு மேல் இருந்தது வேறு கண்ணறாவியாக இருந்தது. சீனிவாசன் சற்று முகத்தைச் சுளித்துக் கொண்டார். விசாலம்தான் ''உன் பெயர் என்னப்பா?'' என்று அன்புடன் கேட்டாள். ''வரதராஜ தேசிகன்!'' என்று சொல்லி உடம்பைப் பல கோணலாக்கிக் கொண்டான்.

இதுவரையில் பேசாமலிருந்த நாயுடு விவரம் சொன்னார். அதாவது இந்தப் பையனுக்குத் தாயார் கிடையாது. பல குழந்தைகளுக்கு நடுவே கஷ்டப்பட்ட குடும்பத்தில் சற்றுச் சமர்த்துக் குறைவாகப் பெற்ற இவனுக்குத் தந்தைகூட ஆதரவு இல்லையாம். இவன் உருப்பட மாட்டான் என்ற எண்ணத்துடன் திருவள்ளூர் அருகே உள்ள கிராமத்தில் இருக்கும் பெருமாள் கோயில் குருக்களிடம் இந்தப் பையனை வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு சொல்லிவிட்டு ஊரைப் பார்க்கப் போய்விட்டாராம். பாவம்! அறியாப் பையன் இரண்டு வேளைச் சோற்றுக்காக அங்கு படாத பாடு பட்டுச் செய்ய முடியாத வேலைகளைச் செய்து துரும்பாகிறானாம். இந்த விவரங்களைச் சொல்லிவிட்டு, ''நம்ம வீட்டில் இருந்தால் இந்தப் பிள்ளை ஒரு மாதிரி உருப்பட்டு முன்னுக்கு வருமென்று நினைத்துத்தான் அழைத்து வந்தேனுங்க!'' என்று முடித்தார் நாயுடு.



சீனிவாசன் 'என்ன சொல்கிறாய்?' என்பதைப் போல் மனைவியைப் பார்த்தார். விசாலம் ஒன்றும் பேசாமல் உள்ளே போனாள். குழந்தைகள் அவளைத் தொடர்ந்து உள்ளே போய்த் தாயாரை மொய்த்துக் கொண்டனர்.

விசாலம் வாயைத் திறக்காமல் பீரோவைத் திறந்து ஏதோ ரூபாய் நோட்டை

தெய்வம்

ராமப்ரியா

எடுத்துப் பூட்டிவிட்டு மறுபடியும் வாசற் பக்கம் போன வளைப் பெரியவன் பானு குறுக்கிட்டு, ''அம்மா! இந்தப் பையனை வேலைக்கு வைத்துக் கொள்ளப் போகிறாயா?'' என்று முகத்தைச் சுளித்தவாறு கேட்டாள்.


''இந்தப் பையனைப் பார்த்து அம்மா வேலைக்கு வைத்துக் கொள்வாளா? நாயுடுவுக்கு அங்கேயிருந்து வந்து போன செலவுக்குக் கொடுக்கப் பணம் எடுக்கிறாள்!'' என்று தாயாரைத் தான் அதிகம் புரிந்து கொண்ட மாதிரி பேசினான் பிள்ளையாண்டான் ரவி.

''டர்ட்டி பாய்!'' என்று தோள்களைக் குலுக்கினாள் இந்து. ''ஒரே நாத்தம்!'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டான் கடைசி வாண்டு கணேஷ்.



இத்தனை எதிர்ப்புக்களைச் சமாளித்து எப்படி அந்தப் பையனை வீட்டுக்குள் விடுவது என்பது போல் கணவனைப் பார்த்தாள் விசாலம். அவர் தமக்கே உரிய அந்தப் புன்சிரிப்புடன் மனைவியையும் மக்களையும் பார்த்துக் கொண்டிருந்தார். விசாலம் குழந்தைகளைத் தட்டிக் கொடுத்தாள். ''ஸ்கூலுக்குப் போக நாழிகையாகி விட்டது. போய் வாருங்கள். சாயந்திரம் வரும்பொழுது இந்தப் பையனைப்பாருங்கள். அடையாளம் தெரியாமல் செய்து விடுகிறேன்'' என்று சொன்னாள். அந்தப் பையனைக் குழந்தைகள் அலட்சியத்துடனும் கோபத்துடனும் பார்த்துக் கொண்டே பள்ளிக்குச் சென்றார்கள்.

விசாலம் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை நாயுடுவிடம் கொடுத்தாள். ''நாயுடு! அவனை முதலில்



ஒரு ஸலூனுக்கு அழைத்துச் சென்று ஒட்டக் கிராப்பு வெட்டச் சொல்லுங்கள். ஒரு சோப்புத் துண்டு வாங்கி ரோட்டுக் குழாயில் அழுக்குப் போகக் குளிக்கச் சொல்லுங்கள். கட்டியிருக்கும் துண்டைத் தலையைச் சுற்றித் தூர எறிந்து விட்டு ரெடிமேட் கடைக்குப் போய் இரண்டு நிஜார், சட்டை வாங்கி ஒன்றைப் போட்டுக் கொள்ளச் செய்யுங்கள். மற்றொன்றைக் கையில் கொண்டு வாருங்கள். அப்புறம் இந்தப் பையனை உங்களுக்கே அடையாளம் தெரியாது!'' என்றாள்.

மனைவியின் சாதுரியத்தில் ஒரு கணம் தம்மையும் மறந்து சபாஷ் போட்டார் சீனிவாசன். ''நீ கொடுத்த பத்து ரூபாயில் இத்தனை சாமான்களையும் வாங்கி விட்டு மீதி இருந்தால் ஒரு சைக்கிளும் வாங்கி வரச் சொல்வேன். அந்தப் பையனுக்குக் கடைகண்ணி போகச் சௌகரியமாயிருக்கும்'' என்று சிரிக்காமல் சொன்னார். நாயுடுதான் பக்கென்று சிரித்து விட்டார்.

விசாலம் வெட்கிப் போய் இன்னொரு ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தாள்.

சீனிவாசன், குழந்தைகள் எல்லாரும் தத்தம் ஆபீஸ், பள்ளிக்கூடத்திலிருந்து வந்து வரதனைப் பார்த்துச் சற்று அசந்துதான் போனார்கள். அந்தச் சில மணி நேரத்துக்குள் அவனை எப்படி எப்படித் திருத்த முடியுமோ அப்படியெல்லாம் செய்திருந்தாள் விசாலம். எனினும் குழந்தைகள் இலேசில் வெறுப்பை மாற்றிக் கொள்ளவில்லை.

ஒரு சர்க்கஸ் மானேஜரை விடக் கடும் உழைப்போடு வரதனைப் பழக்கினாள் விசாலம். அந்தக் குடும்பத்தில் தன் ஒரே ஆதரவு விசாலம் என்பதைக் கண்டுகொண்ட வரதனும் அவளைத் தன் தெய்வமாகத்தான் வழிபட்டுக் கொண்டிருந்தான்.

ஐந்து வருடங்கள் ஓடிப் போயின. விசாலத்தின் குடும்பத்தில் குழந்தைகள் பெரியவர்களானார்கள். ரவி இன்ஜினீயருக்குப் படித்துக் கொண்டிருந்தான். இந்துவும் கணேஷும்தான் ஒன்பது, பத்து வகுப்புக்களில் படித்துக் கொண்டிருந்தார்கள்.

வரதனும் அந்தக் குடும்பத்துடனேயே ஒன்றிப்போய் வளர்ந்து கொண்டு வந்தான். விசாலத்துக்கு வலது கை அவன்தான். அவளுக்குச் சிரமமே கொடுக்காமல் அத்தனை பாரம் மாடாக உழைத்துச் செருப்பாகத் தேய்ந்தான். இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை வந்து பார்க்கும் வரதனின் தந்தை தம் மகனைப் பார்த்துப் பேச முடியாமல் கண்களில் நீர் சுரக்கப் பிரமிப்புடன் நின்று விட்டார். விசாலத்தைக் கையெடுத்துக் கும்பிட்டார். ''தாயே! நீங்கள் தெய்வம்தான். ஒன்றுக்கும் உதவாமல் கோயில் பிராகாரத்தைச் சுற்றிக் கொண்டிருந்தவனை உருவாக்கினீர்களே! இனி அவன் உங்கள் குழந்தைதான்!'' என்றார். அதற்கு மேல் ஏதும் சொல்லமுடியாமல் தொண்டை அடைத்தது.

பானுவின் கல்யாணம் சிறப்பாக நடந்தது. பானு வரதனைத் தன்னுடன் அழைத்துப் போவேன் என்று சொன்னவுடன் விசாலம் சற்றுத் திகைப்படைந்தாள்.

விசாலத்துக்கு, பானு அவனை அழைத்துப் போனால் சரிவர நடத்துவாளா என்ற விசாரம்தான் மேலோங்கி நின்றது.

ஒரு முறைக்குப் பலமுறை அவனைச் சரியாக நடத்துமாறும் திட்டக்கூடாதென்ற உறுதியுடனும் வரதனைப் பானுவோடு அனுப்பி வைத்தாள். பானுவைப் பிரிந்த மனக் கஷ்டத்தைவிட வரதனைப் பிரிவதுதான் கஷ்டமாக இருந்தது.

பானுவுக்கு வரதன் தாயாய், உடன் பிறப்பாய், ஏவலாளாய் இருந்தான். பானுவின் கணவரது அன்பையும் வெகு சீக்கிரத்தில் பெற்றுக் கொண்டான்.

பானு பிறந்தகம் வரும்பொழுது வந்து அவள் திரும்பிப் போகும் பொழுது கூடப் போவது வரதனின் வழக்கமாகிவிட்டது. பானுவின் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் அவனே ஏற்றுக் கொண்டான் என்றால் மிகையாகாது.

பானுவின் கணவர் ஆபீஸிலேயே அவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து வீட்டுக்கு உதவியாக வைத்துக் கொண்டார். கார் டிரைவிங்கும் கற்றுக் கொண்டான். கணிசமான சம்பளம் கைநிறைய வந்தது. மொத்தத்தில் அவன் ஓர் ஆளாக உருவெடுத்துவிட்டான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் விசாலம் பெற்ற மக்களின் மனத்தில் மட்டும் பழைய வரதனின் நினைவுதான் அழியாமல் இருந்தது.

வரதனின் தந்தை அவனைப்பற்றிய கவலையை விட்டொழித்தாலும் கடமையை மறக்கவில்லை. அவனுக்குக் கால் கட்டுப் போட்டு அவனை முழுமையாக்க எண்ணினார். அதன் விளைவுதான் பானு பிறந்தகம் வந்திருக்கிறாள், மாப்பிள்ளையாகப் போகும் வரதனுடன்.

கல்யாணத்துக்குக் காரிலேயே சீநிவாசன் சாரத்தியம் செய்ய வரதனுடன் பானுவும் விசாலமும் பயணமானார்கள். துறையூருக்கு முதல் நாள் சாயங்காலம் போய்ச் சேர்ந்தார்கள். பயணிகள் விடுதி ஒன்றில் இவர்கள் தங்கிக் கொண்டார்கள். கல்யாணம் வெகு வெகு சாதாரணமாகத்தான் நடந்தது. ரொம்பவும் இல்லாதப்பட்டவர்கள் பெண் வீட்டார். எப்படியோ தாலியைக் கட்டிப் பெண்ணை இவர்களிடம் ஒப்படைத்து விட்டார்கள்.

கல்யாணம் முடிந்து சாப்பிட்டோம் என்று பெயர் பண்ணிவிட்டு வரதனையும் புதுப் பெண் அமிர்தத்தையும் அவர்களோடே அழைத்துக் கொண்டு வந்தனர். புறப்படும் பொழுது பெண்ணின் பெற்றோர்களுக்கு ஒரே சந்தோஷம். தங்கள் பெண்ணுக்குக் காரில் வந்து கல்யாணம் செய்து கொண்டு காரிலேயே அழைத்துச் செல்லும் சம்பந்தம் கிடைத்திருக்கிறதே என்று பூரித்துப் போனார்கள்.

அமிர்தம் கிராமத்தில் வளர்ந்த பெண்ணானதால் நல்ல உடல்வாகுடன் வாட்டசாட்டமாக இருந்தாள். முன் பற்கள் இரண்டும் சற்று அதிகமாகவே முன்னுக்கு வந்து அழகைக் கெடுத்தன. நிறமும் கறுப்பில் சேர்ந்ததுதான்.

விசாலம் தன் வீட்டில் வந்து இறங்கியவுடன் மணமக்களை திருஷ்டி சுற்றிக் கொட்டி



வாய் நாற்றம் உங்களை
விலகி நிற்கச்செய்கிறது
COLGATE
DENTAL CREAM
DCG.46 TM
கால்கேட் டென்டல் க்ரீமின் மூலம்
வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுங்கள்...
நாள்முழுவதும் பற்சிதைவை எதிர்த்திடுங்கள்!
கால்கேட், 10க்கு 7 பேர்களில் வாய்துர்நாற்றத்தை உடனடியாக அகற்றுகிறது என்றும், உணவு உட்கொண்டவுடன் கால்கேட் முறையில் பற்களைத் துலக்குவதால், இதுவரை பற்பசை வரலாற்றிலேயே கண்டிராத பேரளவில் ஏராளமானவர்களுக்கு பற்சிதைவு தடுக்கப் படுகிறது என்றும் விஞ்ஞான சோதனைகள் நிரூபித்துள்ளன. ஏனெனில், ஒரே தேய்ப்பில் வாய்துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் விளைவிக்கும் கிருமிகளை 85 சதவீதம் வரை, கால்கேட் டென்டல் க்ரீம் அகற்றி விடுகிறது.
அதன் விந்தைமிக்க பெப்பர்மின்ட் சுவையேதனி— கால்கேட் டென்டல் க்ரீம் கொண்டு குழந்தைகள் தவறாமல் பல்துலக்க விரும்புவதில் வியப்பென்ன!
தூய்மையான இனிய மூச்சுடனே,
வெண்மையான பற்களையும் பெற்றிடவே...
உலகிலேயே அதிக மக்கள்
மற்றெந்த பற்பசையையும்விட,
கால்கேட் பற்பசையையே
வாங்குகிறார்கள்!
பூரண பல் பாதுகாப்பிற்கு கால்கேட் டூத் பிரஷ் உபயோகியுங்கள். ஒவ்வொருவரின் தேவைக்கேற்றவாறு அமைப்பு—15 ரகங்கள்.

உள்ளே வரவேற்றாள். அன்று பாயசம் பட்சணத்துடன் விருந்தும் வைத்தாள்.

பானு அன்று இரவே ஊருக்குப் போக வேண்டும் என்று துடியாகத் துடித்தாள்.

''பானு! உனக்கு வயதாகிவிட்டதே தவிர இன்னமும் இங்கிதம் தெரியவில்லையே! வரதன் அசடாக இருக்கலாம், மாடுமாதிரி நம்ப குடும்பத்துக்கு உழைக்கலாம். அவனும் மனுஷன் பாரு! புதுசாகக் கல்யாணம் பண்ணிய பெண்ணை இன்னும் அவன் கண்ணில் காட்டாமல் இருக்கிறது நன்றாக இருக்கா? உங்க ஊர் போறதுக்கு இன்னும் ஒன்றரை நாள் பிரயாணம் வேறே இருக்கு!'' என்று புரியும் மாதிரியும், பூடகமாகவும் சொன்னாள் விசாலம்.

பானுவுக்குப் புரிந்து விட்டது. ''அம்மா! தயவு செய்து இன்று என்னை அனுப்பிவிடு. இன்னும் இரண்டு நாட்கள் வரதன் காத்திருக்கட்டும். அவர்கள் முதல் சந்திப்பை விழாவாகக் கொண்டாடி விடுகிறேன்!'' என்று ஒரே பிடிவாதமாகப் புறப்பட்டு விட்டாள்.

''உன் பிடிவாதம் உன் கூடப் பிறந்ததாச்சே! அதை உன்னைப் படைத்தவனால் கூட மாற்ற முடியாதே! ஏதோ அந்த அநாதைகள் இரண்டையும் கவனித்துக் கொண்டு மனுஷத் தன்மையோடு நடந்து கொள்!'' என்று தழுதழுத்தவாறு சொல்லிப் பெண்ணையும் வரதன் தம்பதியையும் ஊருக்கு அனுப்பி வைத்தாள் விசாலம்.

ஸ்டேஷனுக்கே வந்திருந்தார் பானுவின் கணவர். வரதனிடம் முதலிலிருந்தே பானுவின் கணவர் கேசவனுக்கு அலாதி பச்சாத்தாபமும் அன்பும் உண்டு. அவர் முயற்சியால்தான் வரதன் ஒரு மனிதனானான். பானு அவனை அநாவசியமாகக் கோபிக்கும்பொழுதெல்லாம் அவர் பானுவைக் கண்டிக்கத் தவறியதே இல்லை.

வீடு வந்தாகிவிட்டது. அக்கம் பக்கத்திலுள்ளோர் வந்து வரதனின் மனைவியைப் பார்த்துவிட்டுச் சென்றனர். முக்கியமாக மற்ற வேலைக்காரர்கள் ஆவலுடன் வந்து பார்த்து விசாரித்துவிட்டுப் போயினர்.


வரதன் தானாக இயங்கும் இயந்திரத்தைப் போல் தன் வேலைகளைக் கவனிக்கலானான். பானுவின் குழந்தைகள் இரண்டும் எட்டு வயதும், ஐந்து வயதும், அமிர்தத்தை ஓடிவந்து பார்ப்பதும் உள்ளே போவதுமாக இருந்தன. அமிர்தத்துக்கு நீரில் இருந்த மீனைத் தரையில் போட்டது போல் பாந்தமாகவே இல்லை. ஒரே தவிப்பாக இருந்தது. அவள் பார்த்தே இராத தினுசில் வீடும் வீட்டின் அமைப்பும் அதில் உள்ள சாமான்களும் அங்கே உள்ள மனிதர்களும் ஒன்றுமே அவளுக்கு ஒவ்வாத தினுசில் இருந்தன. 'எப்படியடா அப்பா இந்த வீட்டில், இந்தச் சூழ்நிலையில் காலம் தள்ளப் போகிறோம்?' என்று நினைக்கும்போதே துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. கண்களினின்று கண்ணீர் பெருகியது.

''இந்தாம்மா, அமிர்தம்! அந்த அறைதான் வெந்நீர் அறை. அதில் போய்க் குளித்துவிட்டுச் சமையலறைக்கு வா! அந்த அசட்டுக்குத் தானாகச் சொல்லத் தெரியாது. போய்க் காப்பி குடித்துவிட்டு அவனுக்கு ஒத்தாசையாக ஏதும் வேண்டுமானால் செய்!'' என்று பானு சொல்லிக் கொண்டே குழந்தைகளையும் கணவனையும் கவனிக்கப் போய்விட்டாள். 'யாரை அசடு' என்று பானு சொன்னாள் என்பது அமிர்தத்துக்குப் புரிந்து போய் அவள் மனம் இன்னமும் பதைபதைத்தது. பேசாது குளியலறையில் போய்க் குளித்துவிட்டுச் சமையலறைக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் வெட்கத்துடன் சிரித்தான் வரதன். அதற்குள் பானு வருவது தெரியவே காய்கறிகளை எடுத்துக் கொடுத்து நறுக்கச் சொன்னான்.



இரவு சாப்பாடெல்லாம் ஆயிற்று. கேசவன் படுக்கையில் படுத்துக் கொண்டே வாரப் பத்திரிகைகளைப் படித்துக் கொண்டிருந்தார். அது அவருடைய வழக்கம். குழந்தைகள் இருவரும் தூங்கலாயினர்.

கையில் பாலுடன் வந்தாள் பானு. கணவரிடம் கொடுத்து விட்டு 'அப்பாடா' என்று கைவிரல்களைச் சொடுக்கிக் கொண்டே அலுப்புடன் கட்டிலில் உட்கார்ந்தாள்.



''எனக்கு எதற்கு சூயிங்-கம் தருகிறீர்கள்?''

''ஐந்தாம் முறையாக நீங்கள் இந்தப் படத்தைப் பார்க்கிறீர்கள் என்பதற்காக, முன்கூட்டியே ஒவ்வொரு காட்சி வசனங்களையும் கூறி வருகிறீர்களே! இனிமேலாவது என் சுவாரசியத்தைக் கெடுக்காமலிருங்கள்!''

பாலைப் பருகிக் கொண்டே மனைவியைப் பார்த்துக்கொண்டிருந்தார் கேசவன். இவளை எதில் சேர்த்துக் கொள்வது? வேண்டாத தொல்லைகளை இழுத்துப் போட்டுக் கொள்கிறாள். மனத்தில் பாசம் நிறைய இருக்கிறது; பச்சாத்தாபமும் உண்டு. ஆனால் வெளியே ஒரே அதட்டல் மிரட்டல்தான். யார் இவளைப் புரிந்து கொள்வார்கள்? யோசனை செய்து கொண்டே முடித்த அவர் டம்ளரைப் பானுவிடம் கொடுத்துவிட்டு, ''கல்யாண அலுப்பு அதிகமோ?'' என்றார் இடக்காக.

''அதை ஏன் கேட்கிறீர்கள்? உடம்பில் ஒவ்வோர் அணுவும் தெறிக்கிறது. இந்த அசடு இருக்கிறதே தினம் போல் தன் பாயைச் சுருட்டிக் கொண்டு வாசலில் போயிற்று. போடா, முட்டாள்! உனக்கு இனி வாசலில் படுக்கை கிடையாது. மூன்றை அறையில் தான் இனி படுத்துக் கொள்ள வேண்டும் என்று அனுப்பினேன்!'' என்று மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள் பானு.

''பானு! இனியும் வரதன் நம் வீட்டோடு இருப்பது அத்தனை நன்றாக இருக்காது. பக்கத்தில் எங்காவது அவர்களை ஜாகை வைத்துவிடு. அவன் காலையில் வேலைக்கு வரட்டும். வேலை இல்லாதபோது அவன் வீட்டுக்குப் போகட்டும். அதுதான் இருவருக்கும் நல்லது. நான் சொன்னால் நீ கேட்கமாட்டாய். இருந்தாலும் சொன்னேன்'' என்று பத்திரிகைகளை மூடி வைத்துவிட்டுப் போர்வையை இழுத்து விட்டுக் கொண்டு படுத்துக் கொண்டார்.

பானு ஏதோ நினைத்துக்கொண்டு வெளியே எழுந்து போனாள். ''எங்கே போகிறாய், பானு?'' என்றார் ஆச்சரியத்துடன்.

''உஸ்'' என்று தன் உதட்டின் மேல் விரலை வைத்து அடக்கினாள். ''சற்று இருங்கள். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று மெதுவாகப் பார்த்துவிட்டு வருகிறேன்!'' என்று கிளம்பினாள். ''பானு, பானு! அந்தக் காரியம் செய்யாதே! பண்பு இல்லாத காரியம். வந்து படு!'' என்று அவள் முன்றானையைப் பிடித்து இழுத்தார். ''பேசாமல் இருங்கள். முதல் நாள் எல்லாரும் வேடிக்கைக்காக ஒட்டுக் கேட்பது வழக்கம் தான். இதைப் பெரிசுபண்ணுகிறீர்கள்.... இதோ ஒரு நிமிஷம். வந்து விட்டேன்'' என்று சொல்லித் தலைப்பை அவரிடமிருந்து இழுத்துக் கொண்டு ஓடினாள்.

வரதனின் அறையின் உள்ளே ஒரு சிம்னி விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. மின்சார விளக்கை அணைத்துவிட்டான் போலும்! கதவின் அருகே காதை வைத்துக் கொண்டாள் பானு. தான் செய்யும் காரியம் தப்பென்று அவள் மனத்துக்குத் தோன்றி அது 'டக் டக்' என்று வேகமாக அடித்துக் கொள்வதுதான் அவள் காதில் விழுந்தது. அதையும் மீறிக் கொண்டு உள்ளே என்ன பேசுகிறார்கள் என்பதைக் காதைத் தீட்டிக் கொண்டு கேட்டாள்.

''அமிர்தம்! என்னை உனக்குப் பிடிக்கிறதோ?'' இது கட்டையான வரதனின் குரல். அதற்கு என்ன பதில் வந்தது என்பது கேட்கவில்லை. தலையை ஆட்டியிருப்பாள். இது பானுவின் கற்பனை. அவளுக்குச் சிரிப்பு வெடித்துக் கொண்டு வந்தது.

''இந்த வீட்டில் எல்லாரையும் பிடிக்கிறதோ?'' இதற்கும் அமிர்தத்தின் குரலே கேட்கவில்லை. எல்லாம் சைகையா அல்லது மௌனமா? பானு தவித்தாள்.

''பதினைந்து வருஷங்களுக்கு முன்னே சாக்கடையில் குப்பையாகக் கிடந்த என்னை ஒரு மனுஷனுக்கியது இந்த வீட்டில். இருக்கிற மாமியும் அவர் அம்மாவும்தான். அவர்கள் தான் எனக்குத் தெய்வம். உலகம் எல்லாம்!'' வரதனின் குரல் தழுதழுக்கிறது. உணர்ச்சி வசப்படுகிறான். பாவம்! பானுவின் கண்களில் நீர் துளிக்கிறது. விரலால் சுண்டுகிறாள். பாவம், வரதன் எத்தனை நல்லவன். நன்றி மறவாதவன். அமிர்தத்தின் குரல் கேட்கிறது. ''உங்களைக் குப்பையாயிருந்த போது நான் பார்த்ததில்லை. மனுஷனைப் புறம் பார்க்கிறேன். அதுவும் என் தெய்வமாகப் பார்க்கிறேன். அதனால் என் தெய்வத்தை இந்த வீட்டில் உள்ளவர்கள் 'அசடு, முட்டாள்' என்று சொன்னால் ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. அவர்களை எப்படி என்னால் தெய்வமாக, உலகமாக நினைக்க முடியும்? காலையிலிருந்து அதுதான் மனசுக்கு ரொம்ப வேதனையாக இருக்கு!'' என்று அவள் சொல்லி முடிக்குமுன் பானு ஒரே எட்டில் தன் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு படுக்கையில் தொப்பென்று விழுந்தாள். அவள் உடல் வியர்த்துப் போய்விட்டது. நெஞ்சும் மார்பும் படபடத்தன.

''பானு! ஏன் வந்துவிட்டாய்?... சுவாரசியமான கட்டமெல்லாம் கேட்டுவிட்டாயா?'' என்றார் கேசவன் கேலியாக.

பானு பேசாமல் கணவனைப் பார்த்தாள். அவள் கண்களுக்கு அவர் விசுவரூபமாகக் காட்சி அளித்தார். எத்தனை அறிவிற் சிறந்தவர். அவர் யோசனையைத் தள்ள இருந்தேனே என்று மனத்தில் மருகினாள். ''நீங்கள் சொன்ன யோசனைதான் தேவலை. வரதனைத் தனியாக ஜாகை வைப்பது மிகவும் உத்தமம் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது!'' என்றாள் மெதுவாக. நடந்ததைச் சொல்ல அவள் நா எழவில்லை. கேசவன் அதிசயத்துடன் மனைவியைப் பார்த்தார்.

''ஏதேது! என் பானுகூட நான் சொன்னதைச் சரியென்று சொல்ல ஆரம்பித்துவிட்டாளே!'' என்று சொல்லித் திரும்பிப் படுத்தவர் நிம்மதியாகத் தூங்கினார்.


Printed & published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-31
Managing Editor: T. Sadasivam

குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ

ஃபாஸ்ஃபோமின்®




ஃபாஸ்ஃபோமின், விடமின் பி காம்ப்ளெக்ஸ் மற்றும் பல்வேறு கிளிஸரோபாஸ்பேட்டுகள் அடங்கிய விடமின் டானிக். அது உங்கள் குடும்பத்தினருக்கு வலிமை, புத்துணர்வு மற்றும் ஆரோக்கியம் அளிக்கிறது. ஃபாஸ்ஃபோமின் சாப்பிடத் தொடங்கினால், களைப்பும் சோர்வும் பறந்துவிடும். ஃபாஸ்ஃபோமின் சக்தியை அதிகரிக்கிறது. பசியைத் தூண்டுகிறது. வலிமையைப் பெருக்குகிறது. நோய்களை எதிர்க்கும் சக்தியைக் கூட்டுகிறது. குடும்பத்தினர் அனைவரும் திட ஆரோக்கியத்துடன் திகழ உதவுகிறது.



ஃபாஸ்ஃபோமின்... பழரஸ மணம் கமழும் பச்சை நிற விடமின் டானிக்.

SQUIBB® SARABHAI CHEMICALS.

® இந்தச் சின்னம் ஈ.ஆர். ஸ்க்விப் அண்ட் ஸன்ஸ் என்ற ஸ்தாபனத்தின் ரிஜிஸ்டர் செய்யப் பெற்ற ட்ரேட் மார்க் ஆகும். கே.பி.பி.எல். அதை உபயோகிக்கும் லைசென்ஸ் பெற்றவர்கள்.



Shilpi-HPMA-31A/71 Tam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இந்தியா பிஸ்டன்ஸ்

தற்போது கீழ்கண்ட கார்களுக்கு பிஸ்டன்களை தொடர்ச்சியாக சப்ளை செய்கின்றனர்

அம்பாஸடர் • பியட் • ஹெரால்டு • லாண்ட் மாஸ்டர் • டாட்ஜ் • ஸ்டாண்டர்டு 10
வான்கார்டு • மாரிஸ் 8 • மாரிஸ் மைனர் • ஆஸ்டின் 8 • ஆஸ்டின் 10
ஆஸ்டின் A40 • போர்டு ஆங்கிளியா/பாபுலர் மற்றும் போர்டு ப்ரிபெக்ட்



குறைந்த எண்ணெய் செலவு அமைதியான என்ஜின் இயக்கம்



[illegible]

இந்தியா பிஸ்டன்ஸ் லிமிடெட் சென்னை-11
அமால்கமேஷன்ஸ் குருப் கம்பெனிகளின் ஓர் நிறுவனம்

தென் பிராந்திய வினியோகஸ்தர்கள்
ஜார்ஜ் ஓக்ஸ் லிமிடெட்
மதுராஸ் ஆட்டோ சர்வீஸ்
ஸ்பீட்-ஏ-வே பிரைவேட் லிமிடெட்

IP 182 AT